**தலைப்பு – 102 - நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் - 2013**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை
2 ஆவது பகுதி- ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| 240 | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| 241 | அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் |
| 245 | அரச பொது நிதித் திணைக்களம் |
| 246 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| 247 | இலங்கை சுங்கம் |
| 248 | மதுவரித் திணைக்களம் |
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் |
| 252 | தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் |
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |
| 296 | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் |
| 324 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் |
| - | மிலோதா நிறுவனம் |
| - | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இருபது (20) திணைக்களங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,260,827,756,685 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,190,354,168,158 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய நிதிஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 972,525 இற்கும் ரூபா 66,855,352,572 இற்கும் இடையிலான வீச்சில் அல்லது தேறிய ஏற்பாட்டில் 0.08 சதவீதத்திற்கும் 47.95 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் இருந்தது. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு, தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 102 | 2,620,456,538 | 1,381,260,819 | 1,239,195,719 | 47.29 |
| 237 | 162,737,000 | 157,357,928 | 5,379,072 | 3.31 |
| 238 | 99,525,000 | 70,211,578 | 29,313,422 | 29.45 |
| 239 | 1,736,424,000 | 1,571,249,498 | 165,174,502 | 9.51 |
| 240 | 2,558,955,000 | 2,023,730,115 | 535,224,885 | 20.92 |
| 241 | 54,985,000 | 47,451,961 | 7,533,039 | 13.70 |
| 242 | 50,400,000 | 36,268,168 | 14,131,832 | 28.04 |
| 243 | 2,974,225,000 | 1,547,978,790 | 1,426,246,210 | 47.95 |
| 244 | 834,450,000 | 751,905,041 | 82,544,959 | 9.89 |
| 245 | 140,750,000 | 139,777,475 | 972,525 | 0.69 |
| 246 | 1,931,180,000 | 1,875,888,898 | 55,291,102 | 2.86 |
| 247 | 2,273,401,000 | 2,271,469,960 | 1,931,040 | 0.08 |

| | | | | |
|---|---|---|---|---|
| 248 | 668,460,000 | 664,757,971 | 3,702,029 | 0.55 |
| 249 | 1,240,555,572,018 | 1,173,700,219,446 | 66,855,352,572 | 5.39 |
| 250 | 47,785,000 | 43,581,211 | 4,203,789 | 8.80 |
| 251 | 2,298,940,000 | 2,294,908,211 | 4,031,789 | 0.17 |
| 252 | 1,650,471,129 | 1,628,508,165 | 21,962,964 | 1.33 |
| 280 | 81,245,000 | 68,163,107 | 13,081,893 | 16.10 |
| 296 | 46,120,000 | 42,873,288 | 3,246,712 | 7.04 |
| 323 | 14,365,000 | 13,204,907 | 1,160,093 | 8.08 |
| 324 | 27,310,000 | 23,401,621 | 3,908,379 | 14.31 |
| **மொத்தம்** | **1,260,827,756,685** | **1,190,354,168,158** | **70,473,588,527** | **5.59** |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள பதினொரு (11) திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டிற்கான அறுபது (60) வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 1,179,544 மில்லியன் கூட்டுத்தொகையான வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,048,553 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டுமிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 32 சதவீதத்திற்கும் 1852 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு - | உள்ளவாறான வருமானம் | (குறைவாக)/அதிகமாக சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா. | ரூபா | % |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 10.01.01.00 | 82,591,000,000 | 74,668,082,758 | (7,922,917,242) | 90.41 |
| -மேற்படி- | 10.01.02.00 | 20,000,000 | 21,663,617 | 1,663,617 | 108.32 |
| இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் | 10.01.03.00 | 520,000,000 | 458,372,096 | (61,627,904) | 88.15 |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 10.01.04.00 | 61,004,000,000 | 61,505,872,213 | 501,872,213 | 100.82 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| -மேற்படி- | 10.01.05.01 | 37,362,000,000 | 33,004,053,398 | (4,357,946,602) | 88.34 |
| -மேற்படி- | 10.01.05.02 | 3,120,000,000 | 3,087,148,683 | (32,851,317) | 98.95 |
| -மேற்படி- | 10.01.07.00 | -- | 1,346,970 | 1,346,970 | -- |
| -மேற்படி- | 10.01.08.00 | 50,106,000,000 | 46,704,765,201 | (3,401,234,799) | 93.21 |
| -மேற்படி- | 10.02.05.01 | 58,222,000,000 | 58,534,245,572 | 312,245,572 | 100.54 |
| -மேற்படி- | 10.02.05.02 | -- | 76,847 | 76,847 | |
| -மேற்படி- | 10.02.05.03 | 35,849,000,000 | 27,130,554,960 | (8,718,445,040) | 75.68 |
| -மேற்படி- | 10.02.05.04 | 71,906,000,000 | 55,517,438,890 | (16,388,561,110) | 77.21 |
| -மேற்படி- | 10.02.05.99 | 5,347,000,000 | 2,516,110,135 | (2,830,889,865) | 47.06 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.01.01 | 24,962,000,000 | 21,203,506,388 | (3,758,493,612) | 84.94 |
| -மேற்படி- | 10.02.01.02 | 63,504,000,000 | 56,174,589,835 | (7,329,410,165) | 88.46 |
| -மேற்படி- | 10.02.01.03 | 42,999,000,000 | 43,718,740,385 | 719,740,385 | 101.67 |
| -மேற்படி- | 10.02.01.04 | 123,888,000,000 | 96,590,086,435 | (27,297,913,565) | 77.97 |
| -மேற்படி- | 10.02.02.01 | 12,700,000 | 10,654,808 | (2,045,192) | 83.90 |
| -மேற்படி- | 10.02.02.02 | 2,500,000 | 5,321,938 | 2,821,938 | 212.88 |
| -மேற்படி- | 10.02.03.01 | 2,435,000 | 2,149,612 | (285,388) | 88.28 |
| மதுவரி ஆணையாளர் நாயகம் | 10.02.04.01 | 68,103,000,000 | 66,008,326,747 | (2,094,673,253) | 96.92 |
| -மேற்படி- | 10.02.06.00 | 35,000,000 | 33,042,507 | (1,957,493) | 94.41 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.08.00 | -- | -83,401 | (83,401) | |
| -மேற்படி- | 10.02.09.00 | 11,776,000 | 218,080,060 | 206,304,060 | 1851.90 |
| அரசிறைக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் | 10.02.10.00 | 14,000,000 | 32,398,568 | 18,398,568 | 231.42 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 10.02.11.00 | 26,795,000,000 | 24,445,219,973 | (2,349,780,027) | 91.23 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.12.01 | 18,242,750,000 | 13,698,077,514 | (4,544,672,486) | 75.09 |
| -மேற்படி- | 10.02.12.02 | 10,818,250,000 | 11,544,642,412 | 726,392,412 | 106.71 |
| -மேற்படி- | 10.02.12.03 | 19,721,000,000 | 15,693,950,765 | (4,027,049,235) | 79.58 |
| -மேற்படி- | 10.03.03.00 | 850,000,000 | 591,870,451 | (258,129,549) | 69.63 |
| -மேற்படி- | 10.03.04.00 | 2,000,000,000 | 1,197,409,071 | (802,590,929) | 59.87 |
| -மேற்படி- | 10.03.05.00 | 1,250,000,000 | 750,907,497 | (499,092,503) | 60.07 |
| -மேற்படி- | 10.03.09.00 | 82,000,000 | 96,741,230 | 14,741,230 | 117.97 |
| -மேற்படி- | 10.04.01.01 | 86,312,400,000 | 84,090,576,856 | (2,221,823,144) | 97.43 |
| -மேற்படி- | 10.04.01.02 | 9,450,000,000 | 9,767,479,326 | 317,479,326 | 103.36 |
| -மேற்படி- | 10.04.01.03 | 233,600,000 | 195,441,368 | (38,158,632) | 83.66 |
| -மேற்படி- | 10.04.04.00 | 12,763,000,000 | 6,595,600,863 | (6,167,399,137) | 51.68 |
| -மேற்படி- | 10.04.02.01 | 22,818,000,000 | 18,558,406,098 | (4,259,593,902) | 81.33 |
| -மேற்படி- | 10.04.03.01 | 98,519,000,000 | 77,679,122,230 | (20,839,877,770) | 78.85 |
| -மேற்படி- | 10.04.03.99 | 432,000,000 | 254,908,743 | (177,091,257) | 59.01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| -மேற்படி- | 10.04.02.99 | 8,990,000,000 | 8,524,096,082 | (465,903,918) | 94.82 |
| தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம் | 20.01.03.00 | 253,000,000 | 82,000,000 | (171,000,000) | 32.41 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.01.01 | 612,000,000 | 620,889,832 | 8,889,832 | 101.45 |
| -மேற்படி- | 20.02.01.99 | 80,000,000 | 62,139,098 | (17,860,902) | 77.67 |
| -மேற்படி- | 20.02.02.01 | 8,167,000,000 | 8,178,888,527 | 11,888,527 | 100.15 |
| -மேற்படி- | 20.02.02.99 | 1,610,000,000 | 1,485,088,434 | (124,911,566) | 92.24 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.03.00 | 40,797,000,000 | 30,400,250,000 | (10,396,750,000) | 74.52 |
| -மேற்படி- | 20.02.04.00 | 4,708,000,000 | 4,768,286,230 | 60,286,230 | 101.28 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.01.00 | 125,000,000 | 108,144,039 | (16,855,961) | 86.52 |
| பிரதான மதிப்பீட்டாளர் | 20.03.02.09 | 30,000,000 | 59,347,451 | 29,347,451 | 197.82 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.11 | 34,000,000 | 33,166,448 | (833,552) | 97.55 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.99 | 7,000,000,000 | 7,497,293,400 | 497,293,400 | 107.10 |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.17 | 95,000,000 | 91,519,377 | (3,480,623) | 96.34 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.03.00 | 6,000,000,000 | 2,274,461,399 | (3,725,538,601) | 37.91 |
| -மேற்படி- | 20.03.99.00 | 4,000,000,000 | 11,430,262,069 | 7,430,262,069 | 285.76 |
| அரசிறைக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் | 20.05.01.00 | 17,350,000,000 | 26,350,000,000 | 9,000,000,000 | 151.87 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.05.99.00 | 2,200,000,000 | 2,172,620,652 | (27,379,348) | 98.76 |
| -மேற்படி- | 20.06.02.00 | 800,000,000 | 280,283,429 | (519,716,571) | 35.04 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.06.04.00 | 16,825,000,000 | 15,968,526,609 | (856,473,391) | 94.91 |
| -மேற்படி- | 30.01.01.00 | 20,000,000,000 | 15,858,996,167 | (4,141,003,833) | 79.29 |
| | | 1,179,544,411,000 | 1,048,553,158,862 | (130,991,252,138) | |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இருபது (20) திணைக்களங்களினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்பட்டுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10201 | 16,000,000 | 12,467,028 | 8,000,000 | 9,367,156 | 70,000,000 | 47,717,912 |
| 23701 | 5,000,000 | 4,768,895 | 2,500,000 | 3,204,984 | 30,000,000 | 16,816,024 |
| 23801 | 3,000,000 | 1,222,471 | 1,000,000 | 1,169,046 | 10,000,000 | 6,270,721 |
| 23901 | 4,500,000 | 3,398,541 | 2,500,000 | 3,948,814 | 32,000,000 | 16,842,744 |
| 24001 | 8,000,000 | 5,868,359 | 3,800,000 | 4,048,563 | 37,000,000 | 20,968,250 |
| 24101 | 4,000,000 | 3,437,485 | 1,500,000 | 2,781,752 | 18,000,000 | 9,854,119 |
| 24201 | 4,500,000 | 3,228,934 | 2,000,000 | 2,262,581 | 23,000,000 | 10,761,127 |
| 24301 | 2,500,000 | 784,543 | 400,000 | 785,536 | 7,600,000 | 3,595,805 |
| 24401 | 3,000,0000 | 1,490,716 | 1,200,000 | 2,010,483 | 12,000,000 | 6,568,406 |
| 24501 | 4,000,000 | 2,008,466 | 1,000,000 | 1,824,841 | 18,000,000 | 8,974,194 |
| 24601 | 85,000,000 | 83,993,642 | 50,000,000 | 56,164,415 | 295,000,000 | 254,694,571 |
| 24701 | 42,000,000 | 29,090,663 | 35,000,000 | 48,837,596 | 300,000,000 | 226,834,507 |
| 24801 | 40,000,000 | 28,157,639 | 22,000,000 | 26,403,655 | 198,000,000 | 762,039 |
| 24901 | 4,500,000 | 3,861,292 | 2,800,000 | 3,056,608 | 24,000,000 | 17,870,335 |
| 25001 | 4,000,000 | 1,911,961 | 1,500,000 | 1,727,470 | 18,000,000 | 6,716,844 |
| 25101 | 17,000,000 | 16,762,003 | 12,000,000 | 13,498,273 | 70,000,000 | 61,042,277 |
| 25201 | 50,000,000 | 23,007,040 | 22,000,000 | 30,743,047 | 215,000,000 | 131,355,351 |
| 28001 | 4,000,000 | 2,706,518 | 2,200,000 | 2,827,662 | 20,000,000 | 11,711,689 |
| 29601 | 4,000,000 | 1,530,266 | 2,000,000 | 2,202,514 | 18,000,000 | 12,783,664 |
| 32301 | 1,200,000 | 215,908 | 200,000 | 434,207 | 3,000,000 | 457,047 |
| 32401 | 2,000,000 | 1,486,994 | 1,200,000 | 1,350,714 | 11,000,000 | 7,371,542 |

### 2.3.2 வணிகரீதியற்ற முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தினால் வணிகரீதியற்ற இரண்டு (02) முற்பணக் கணக்குகளின் செயற்பாடுகளில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 250 | 25002 | 4,250,000 | 4,083,973 | 4,062,000 | 4,335,756 | 3,500,000 | 909,279 |
| 250 | 25003 | 10,000,000 | -- | 2,500,000 | 32,059,205 | 513,000,000 | 458,399,948 |

### 2.4 கட்டுநிதியும் பொது வைப்புக் கணக்கும்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஆறு (06) திணைக்களங்கள் என்பனவற்றில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,774,601 ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 7002/0000/00/0262/0013/000 | 83,325 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 7002/0000/00/0069/0013/000 | 9,847,209 |
| இலங்கை சுங்கம் | 7002/0000/00/0071/0013/000 | 4,751,600 |
| மது வரித் திணைக்களம் | 7002/0000/00/0072/0013/000 | 24,492,707 |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | 7002/0000/00/0260/0013/000 | 7,500 |
| தோகைமதிப்பு புள்ளவிபரத் திணைக்களம் | 7002/0000/00/0037/0013/000 | 592,260 |
| மொத்தம் | | **39,774,601** |

### 2.4.2 பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள பதினான்கு (14) திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,353,753,546 ஆக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | 6000/0000/00/0015/0016/000 | 119,475 |
| அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 6000/00000/00/0015/118/000 | 33,325 |
| தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 6000/0000/00/0015/0120/000 | 550 |
| வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0124/000 | 22,975 |
| அரச பொது நிதித் திணைக்களம் | 6000/0000/00/0015/0025/000 | 265,995 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 6000/0000/00/0015/0126/000 | 42,602,599 |
| | 6000/0000/00/0014/0003/000 | 1,594,368,043 |
| இலங்கை சுங்கம் | | |
| - நானாவித வைப்புக் கணக்கு | 6000/0000/00/0015/0127/000 | 3,991,909,988 |
| - சுங்க மேலதிக நேரம் மற்றும் கப்பல் பரீட்சிப்புக் கட்டண நிதியம் | 6000/0000/00/0006/0032/000 | 1,498,725,835 |
| - சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியம் | 6000/0000/00/0006/0061/000 | 3,752,154,695 |
| - சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியம் | 6000/0000/00/0006/0062/000 | 1,095,233,435 |
| மதுவரித் திணைக்களம் | | |
| - பொது வைப்புக்கள் | 6000/0000/00/0015/0128/000 | 80,485,775 |
| - பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியம் | 6000/0000/00/0008/0051/000 | 19,739,453 |
| - பரிசு நிதியம் | 6000/0000/00/0006/0060/000 | 208,797,492 |
| திறைசேரி செயற்பாடுகள் | 6000/0000/00/0015/0129/000 | (2,380) |

| | | |
|---|---|---|
| திணைக்களம் | | |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0130/000 | 2,678,235 |
| மதிப்பீட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0131/000 | 133,846 |
| தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | 6000/0000/00/0015/0132/000 | 66,254,054 |
| செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0135/000 | 25 |
| இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0151/000 | 230,131 |
| மொத்தம் | | **12,353,753,546** |

## 2 ஆவது பகுதி

**ஓவ்வொரு தலைப்பிற்குமான விரிவான அறிக்கை**

### 1. தலைப்பு 102 – நிதி, திட்டமிடல் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 09 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம்

என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.4 முதல் 1.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 45,050,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,763,451,860 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 572,614,213 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 1,190,837,647 தொகையான சேமிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 119,475 ஆக இருந்ததுடன் அந்த மீதி 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் மீதிகளையும் உள்ளடக்கியிருந்தது.

**(இ)** **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இல. 10201 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களை விஞ்சிய நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 643,977 ஆக இருந்தது.

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டம் | |
| (அ) 6(1)(அ) ஆம் உப பிரிவு | கிரயம் ரூபா 05 மில்லியனை விஞ்சுகின்ற ஒப்பந்தங்கள் பொது ஒப்பந்த பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரருக்கு மாத்திரம் வழங்கப்படலாமெனினும், அவ்வாறு பதிவுசெய்யப்படாத கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 12 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் 8 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பதக்காரர் ஒருவரினால் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டாலொழிய ஏனைய நபர்களுடன் ஒப்பந்தத்திற்குரிய கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது. எனினும், அவ்வாறு பதிவு செய்யப்பட்டமைக்கு செல்லுபடியான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்காத கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியொன்று தொடர்பாக கொள்வனவு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 1.5 செயற்திட்ட அமுலாக்கலில் நலிவுகள்

### செயற்திட்டத்தை நிறைவேற்றுதலில் தாமதம்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுதலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திறைசேரி வளவில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய நகர அபிவிருத்தி திட்டத்தின்படி மீண்டும் அங்கீகாரம் பெறவேண்டியேற்பட்டமையினால் அந்த நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து 98 சதவீதம் சேமிக்கப்பட்டுமிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக 2010 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் சேமிப்பு தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றன.

| ஆண்டு | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2010 | 13,500,000 | 1,741,871 | 11,758,129 |
| 2011 | 500,000,000 | -- | 500,000,000 |
| 2012 | 200,000,000 | 4,202,754 | 195,797,246 |
| 2013 | 575,000,000 | 9,690,551 | 565,309,449 |

(ஆ) 2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் அமைச்சின் தலைப்பில் நிதி முகாமைத்துவ செயற்திறன் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு கடன் நிதியளிப்பின் கீழ் ரூபா 1,000,000,000 தொகையும், வெளிநாட்டு நிதியீட்டுடன் இணைந்த உள்நாட்டுக் கிரய நிதியீட்டின் கீழ் ரூபா 100,000,000 தொகையுமாக ரூபா 1,100,000,000 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் முறையே ரூபா 460,530,615 மற்றும் ரூபா 28,271,537 என ரூபா 488,802,152 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் முறையே ரூபா 539,469,385 மற்றும் ரூபா 71,728,463 ஆக ரூபா 611,197,848 கூட்டுத் தொகை அதாவது, ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 54 சதவீதம் மற்றும் 72 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்பு தொடர்பாக ஒதுக்கீட்டுக் கணக்கில் ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையில் (ஐ.ரீ.எம்.ஐ.எஸ்) ஒப்பந்தக் கையளிப்பு 2013 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டமையால் அதற்கான முற்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணத்திற்குரிய வரித் தொகையை முழுமையாக விடுவிப்பதற்கு முடியாது இச்சேமிப்பு ஏற்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 1.6 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி இலங்கை கணக்காளர் சேவைப் பிரிவில் விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு மற்றும் இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்கிடப்பட்ட தினங்களின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை திட்டமிடல் சேவைப் பிரிவில் 1994 இன் தொகுதியின் விசேட தரத்தில் பதவி உயர்வு, அந்த உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் மற்றும் திட்டமிடல் சேவையின் உத்தியோக்கத்தர்களின் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை என்பவற்றை நடாத்த இலக்கிடப்பட்ட தினங்களில் அவை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சின் கீழ் வருகின்ற தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை திருத்தங்கள், விலை மதிப்பீட்டுத் திணைக்கள சேவைப் பிரமாணங்களைத் தயாரித்தல் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 24 | 15 | 09 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 08 | 04 | 04 |
| (இ) | இரண்டாம் நிலை | 128 | 93 | 35 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 110 | 85 | 25 |
| | மொத்தம் | 270 | 197 | 73 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 73 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.6 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 810,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்ட காரணத்தினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 44 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இல. 23701 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 213,887 ஆக இருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்துதல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்து முகாமைத்துவம்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வறிக்கை 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 57 | 47 | 10 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 27 | 19 | 08 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 31 | 30 | 01 |
| | மொத்தம் | 117 | 97 | 20 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. தலைப்பு 238 – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச்

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஆ) வரையான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 3.4 மற்றும் 3.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 68,395,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 39,884,730 தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 28,510,270 தொகையான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 26 சதவீதத்திற்கும் 42 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

#### (ஆ) வருமானக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானக் குறியீடு 20.05.01.00 – மத்திய வங்கி இலாபம்/ வருமானக் கணக்கின்படி, ரூபா 4,005,704,841 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த வருமான நிலுவையில் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,005,704,841 தொகை உள்ளடங்கியுமிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 128(2)(ஈ) இன்படி, வருமானக் குறியீடு 10.02.10.00 சமூகப் பொறுப்பு வரிக்குரிய முதலாவது அரையாண்டு வருமான நிலுவை தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை,

(iii) 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் சமூகப் பொறுப்பு வரி நீக்கப்பட்டிருந்ததுடன் 2011 மற்றும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதிவரையில் முறையே ரூபா 85,858,156 மற்றும் ரூபா 84,485,473 என்பன வருமான நிலுவையாகவிருந்தன.

(iv) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதிய கடிதத்தின்படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வருமான நிலுவை அறிக்கையின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டு இறுதியில் வருமான நிலுவை ரூபா 225,478,525 ஆக இருந்த போதிலும், கணக்கில் அது ரூபா 82,306,007 ஆகியமையால் அந்த வருமான நிலுவை ரூபா 143,172,518 தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் ரூபா 24,264,529,000 தேறிய நட்டம் காணப்பட்ட போதிலும், இலங்கை மத்திய வங்கியின் மேலதிக பிரதம கணக்காளரின் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதிய இலக்கமற்ற கடிதத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து ரூபா 28,000,000,000 ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசிறைக் கொள்கையினை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், காலாண்டு ரீதியாக வருமானப் பாய்ச்சலை மீளாய்வு செய்தல், வருமானம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தயாரித்தல், வருமான மதிப்பீடு மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமையை மேற்பார்வை செய்தல் தொடர்பாக 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டதைத் தவிர அரசிறைக் கொள்கை முன்னுரிமையளிக்கப்பட்ட கூட்டங்கள் போதியளவில் நடாத்தப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அரசாங்கத்தின் மொத்த வருமானமாகிய திருத்திய மதிப்பீட்டின் ரூபா 1,303 பில்லியன் மூலம் ரூபா 1,212 மில்லியனாக அதாவது, 91 பில்லியனால் குறைக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் வெளிநாட்டு மானியங்களுடன் ரூபா 1,082 பில்லியன் ஆகியமையால் காரணமாக திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அதில் ரூபா 130 பில்லியன் அதாவது 11 சதவீத நிலுவை காணப்பட்டது.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 22 | 14 | 08 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 25 | 13 | 12 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 15 | 10 | 05 |
| | மொத்தம் | 65 | 39 | 26 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதவியணியில் 26 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 08 பதவிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) ''அரசாங்கத்தின் விரிவான அபிவிருத்திச் செயற்பாடுகளின் மூலம் அரசிறைக் கொள்கை வழங்கல் மற்றும் அமுல்படுத்துதல்'' திணைக்களத்தின் செயற்பணியாக இருந்ததுடன் அதனை அடைவதற்கு கவனம் செலுத்துகையில் வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டை மீளாய்வு செய்தல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் மற்றும் அதற்குத் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட பொருளியல் நிபுணரும், பொருளியல் நிபுணர் மற்றும் புள்ளிவிபர நிபுணர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 4. தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

**4.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இல் குறிப்பிடப்பட்ட பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 4.4 மற்றும் 4.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

03 செலவின விடயங்களுக்கு ரூபா 21,000,000 கூட்டுத் தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 17,382,393 ஆக இருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 41 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குரியதாக 2013 ஆம் ஆண்டின் போது ஒரு கூட்டமே நடாத்தப்பட்டிருந்தது.

**4.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 54 | 41 | 13 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 64 | 44 | 20 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 29 | 27 | 02 |
| | மொத்தம் | 150 | 114 | 36 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 36 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 09 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச்

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 5.4 மற்றும் 5.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 30,020,000 கூட்டுத் தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 04 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,721,856,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 1,218,342,266 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 503,513,734 தொகை அதாவது தேறிய ஏற்பாட்டில் 15 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0262/0013/000 ஆம் இலக்க கூட்டுநிதிக் கணக்கின் மீதியில் 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 83,325 தொகை கட்டுநிதி மீதியாக இருந்ததுடன் அந்த மீதி 2014 திசெம்பர் 23 ஆந் திகதி வைரயிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி ரூபா 7,600,000 ஆக ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 1,300,000 கிரயமான கெப் வாகனமொன்று மாத்திரம் கைதவிர்க்கப்பட்டிருந்தது.

**(ஈ) வருமானக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின்படி, மீளாய்வாண்டில் ரூபா 39,082,168 வருமான நிலுவையாக இருந்தது.

(ii) 2006 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 187/2006 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் சேகரித்தல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மாதாந்த கணக்குக் கூற்று, வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் திணைக்களப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்டு அது தொடர்பாக அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், கணனி அச்சிடல் குறிப்பைத் தவிர இத்திணைக்களத்தால் அவ்வாறான புத்தகங்கள் பேணப்படாதிருந்தமையால் உரிய இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமானம் அறவிடப்பட்டமையா அல்லது ஏனைய காரணங்களா வருமான நிலுவையின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால், முன்னைய ஆண்டுகளுக்குரிய வருமான நிலுவையாகிய ரூபா 279,433,627 அறவீடு சரியானதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(iv) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின்படி மீளாய்வாண்டில் நிலுவைப் எதுவும் இல்லாதிருந்ததாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை கடற்படையின் களஞ்சிய முற்பணக் கணக்கிலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கைத்தொழில் மற்றும் கமத்தொழில் முற்பணக் கணக்கிலும் முறையே ரூபா 1,051,778 மற்றும் ரூபா 38,030,390 ஆகிய தேறிய இலாபம் வருமானக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

24001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின்படி, அத்திகதியில் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் பதவியைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 562,101 ஆகும்.

### 5.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) நிதிப்பிரமாணம் 103(1) | வாகனமொன்றிற்கு ஏற்பட்ட திடீர் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) | 2013 ஆம் ஆண்டின்போது விபத்திற்குள்ளாகிய இரண்டு வாகனங்கள் தொடர்பான இறுதி அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.5 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் பெறுபேற்றை உறுதிப்படுத்துவதற்காக பணம் செலவிடப்படுகின்ற முகவராண்மை நிறுவனத்துடன் கலந்துரையாடுதல் மற்றும் நிதியைப் போன்றே பௌதீக செயல் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்காக செலவினப் பகுப்பாய்வை மேற்கொள்ளல் என்பன திணைக்களத்தின் பணியாக இருந்தபோதிலும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்படாத அல்லது மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளுக்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை போதியளவில் இல்லாதவிடத்து பாதீட்டு உதவிச் சேவை அவசரத் தேவைகள் செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 73,615 மில்லியன் மேலதிக நிதியேற்பாட்டு அளவினைவிட அதிகரித்த நிதியேற்பாடு அதாவது ரூபா 124,930 மில்லியன் ஆண்டின் இறுதியின் போது பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்ட காரணத்தால் அத்தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டைத் தயாரிக்கும் பணிகளுக்குரிய ஆலோசனைகளை உள்ளடக்கிய வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டிருந்தமை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த வழிகாட்டிக் கோவையைத் தயாரித்தல் தொடர்பாக 2014 யூலை மாதம் வரையிலும் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. கணக்காய்வினால் இது தொடர்பாக விசாரணை செய்ததன் பின்னர் 2015 இன் பாதீட்டைத் தயாரிப்பதற்குரிய 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் வழிகாட்டி விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரையில் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2015 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் இப்பொது வழிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டதன் எதிர்பார்த்த பெறுபேறு அடையப்பட்டிருக்கவில்லை

**5.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 36 | 22 | 14 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (இ) | இரண்டாம் நிலை | 75 | 63 | 12 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 38 | 32 | 06 |
| | மொத்தம் | 151 | 117 | 34 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 34 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்காதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 23 சதவீதமாக இருந்தது.

**6. தலைப்பு 241 – அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்**

**6.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

**6.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 6.4 தொடக்கம் 6.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 08 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 4,282,000 தேறிய நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,122,839 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 16 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 128(2) மற்றும் 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின்படி, 3 வருமானக் குறியீடுகளுக்குரிய நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கையும் நிலுவை வருமானம் தொடர்பில் அரையாண்டு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்படி, அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வருமானம் வீழ்ச்சியடைகின்றமை, உடனடியாகக் கண்டறிதல், பகுப்பாய்வு செய்தல், அது தொடர்பாக உடனடியாக மாற்று நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியிருந்ததுடன், அது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தமது கட்டுப்பாட்டிற்குப் அப்பாற்பட்டவிடத்து அந்நிலைமையினை அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு அறிவித்து அது தொடர்பாக ஆலோசனை பெறப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 11,813,858,456 இனால் குறைவடைந்திருந்த போதிலும் அது தொடர்பாக சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மூன்று தனியார் அரச கமபனிகளுக்குரிய 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது நிலுவையாக இருந்த ரூபா 49,117,609 தொகையான வருமானம், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த பெறுவனவுகள் வருமானக் கணக்கில் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானமாக கணக்குகளில் குறிப்பிடப்படாமல் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iv) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவினால் கண்டறியப்பட்டதன் பின்னர் தேசிய விலங்கின அபிவிருத்திச் சபையின் முன்னைய ஆண்டிற்கான இலாபமாக ரூபா 1,000,000 அறவிடப்பட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. இலாபம் உழைக்கின்ற நிறுவனமும் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது உரித்தாக்கிக் கொண்டிருக்கவில்லை.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பிற்கான முயற்சிகளின் பட்டியலில் இலாபப் பங்கைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 86 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது 45 நிறுவனங்கள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தன.

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

விடய இல. 24101 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 408,304 ஆக இருந்தது.

**6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குரியதாக 2013 ஆம் ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

**6.5 செயலாற்றல்**

பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அந்தத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் செயலாற்றல் தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

**6.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 29 | 25 | 04 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 38 | 24 | 14 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 14 | 14 | - |
| | மொத்தம் | 82 | 64 | 18 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7. தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

**7.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு

அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

## 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 7.4 மற்றும் 7.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,500,000 மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 02 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 900,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 630,671 தொகை அதாவது தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதம் மற்றும் 95 சதவீதம் அளவில் சேமிக்கப்பட்டிருந்தது.

### 7.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2014 யூன் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 7.5 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 02 பிரதேசங்களின் பதவியணியினர் மீளாய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகம்/ பிரதேச செயலகங்களுடன் காலந்துரையாடல்களை நடாத்தி பதவியணியினரை மீளாய்வு செய்தல் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையில் 14 மாவட்டங்களின் அறிக்கைகள் வரைபு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 11 மாவட்டங்களினதும் தகவல்கள் கோரப்பட்ட நிலையில் காணப்பட்டன.

(ii) ஆண்டின் போது பொலிஸ் திணைக்களத்தின் பதவியணி மீளாய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் 26 ஆந் திகதியளவிலும் அங்கீகரிக்கப்பட வேண்டிய புதிய பதவிகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டன.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட 05 திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அந்த திணைக்களங்களுக்கு புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்குரிய அளவுகோல்கள் மற்றும் நியமங்களைத் தயாரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உரிய பதவிகள் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையை 2013 ஆம் ஆண்டில் திருத்தம் செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும், அது 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க சேவையில் உள்ள பதவியணியினர் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்றைத் தயாரிப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணனி இணையதளத்தின் குறைபாடுகள் காரணமாக அதனைப் பயன்படுத்தி பயிற்சியினை முடிவுறுத்தல் 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது.

## 7.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 22 | 11 | 11 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (இ) | இரண்டாம் நிலை | 42 | 34 | 09 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 | - |
| | மொத்தம் | 79 | 59 | 21 | 01 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பதவியணியினரில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 11 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 8. தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

## 8.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இல் காண்பிக்கப்பட்ட பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 8.4 தொடக்கம் 8.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 21,700,000 கூட்டுத் தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 09 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்ட காரணத்தினால், நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 30 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 8.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 1645(அ) | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் காணப்படுகின்ற வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன திணைக்களத் தலைவர் மூலம் கடந்த மாதத்தின் அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை | |
| 1990 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்திற்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கு 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவுப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 8.5 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் கீழிருந்து இராணுவத்தின் கீழ் வந்த அங்கத்தவர்கள் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் மூலம் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்துதப்பட்டிருந்ததுடன் இந்த அங்கத்தவரொருவருக்கு ஆகக்கூடியது ரூபா 250,000 இன் கீழ் வழங்கப்படுகின்ற கடன் பணத்திற்காக அரசாங்கத்தின் மூலம் 8 சதவீத மானிய வட்டி செலுத்தப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 மார்ச் 15 ஆந் திகதிய அமப/12/0237/541/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, நிகழ்ச்சித்திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் அதற்காக 05 மாதங்கள் தாமதித்து 2012 யூலை 24 ஆந் திகதி உடன்படிக்கை தயாரித்து கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) புனர்வாழ்வளிப்பு பூர்த்திசெய்யப்பட்ட 10,375 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆரம்ப நடவடிக்கையாக 2011 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலாளரினால் பெறப்பட்டு 2013 யூன் 30 ஆந் திகதி வரையில் 1,560 பேர்களுக்கு மாத்திரம் கடன் வழங்கப்பட்டிருந்தது. இந்த அளவு எதிர்பார்த்த மொத்த எண்ணிக்கையில் 14 சதவீதமாகவும், விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கையில் 75 சதவீதமாகவும் இருந்தன.

(iii) அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, கடன் வழங்கியதன் பின்னர் பின்தொடர் பொறிமுறையொன்று அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதன்படி, புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் அவ்வாறான பொறி முறையொன்று அமுல்படுத்தப் படுகின்றதா என்பது தொடர்பில் திணைக்களத்தினால் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை கட்டியெழுப்பும் வகையில் வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற முகவராண்மை நிறுவனமாக செயற்பட்டு செயற்திட்டத்தின் மதிப்பீட்டு செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாமைக்கு பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் விடுவிக்கப்பட்ட ரூபா 1,462 மில்லியன் தொகையான கடன்களுக்குரிய கடன் உடன்படிக்கையின் ‘‘உ’’ பிரிவின்படி, கடன் மற்றும் வட்டி மீள அறவிடுவதிலுள்ள ஆபத்தினைக் குறைப்பதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஆபத்தைப் பகிரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த ஆபத்தைக் குறைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 நவம்பர் 06 ஆந் திகதி சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் சில முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் நலனாளிகளுக்கு தமது முயற்சிகளில் பொது நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப அறிவு தொடர்பாக மேலதிகப் பயிற்சி தேவையாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்திட்ட செயற்பாட்டுப் பிரிவினால் இயலளவு முன்னேற்றத்திற்காக ரூபா 427 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 33 மில்லியன் மாத்திரம் பயன்டுத்தப்பட்டிருந்தது.

(iii) இலங்கை மத்திய வங்கியின் அரையாண்டு பொது நிலையான வைப்பு வட்டி விகிதத்தை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக பங்குபற்றும் நிதிக்கான நிறுவனத்தின் மூலம் 8.69 சதவீதம் முதல் 15.93 சதவீதம் வரையிலான பல்வேறு வட்டி விகிதங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் கடன் மீதியின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் சகல பங்குபற்றும் நிதி

நிறுவனங்களின் மூலம் அறவிடவேண்டிய வட்டி விகிதத்தை நிர்ணயிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிறிய மற்றும் நடுத்தர அபிவிருத்தி செயற்திட்டத்தின் உடன்படிக்கைப் பட்டோலையின் (பீ) 5.25 இன் படி செயற்திட்டம் முடிவடைந்து 03 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 யூன் 30 ஆந் திகதி செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையில், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணப் பிரிவில் மாற்றமடைந்து காணப்படுகின்ற பிரமாணங்கள் தொடர்பான மதிப்பீடு, தனியார் காணி மற்றும் கைத்தொழில் அதிகாரசபையின் மூலம் கோரப்பட்ட வட்டி மானியக் கொடுப்பனவு மற்றும் மதிப்பீடு தொடர்பாக திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆம் ஆண்டின் பாதீட்டுப் பிரேரணையின் அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்ட பொருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் சுழற்சி நிதியத்தின் முன்னேற்றம் தொடர்பான மதிப்பீடு மற்றும் செலவினங்களுக்குரிய செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 8.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 04 | 04 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 10 | 10 | - |
| | மொத்தம் | 28 | 25 | 03 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 9. தலைப்பு 244 – வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 19 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

### 9.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 9.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 9.4 தொடக்கம் 9.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 65,000,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 08 செலவின விடயங்களுக்கு ரூபா 7,400,000 கூட்டுத் தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,955,110 இனைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 3,444,890 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 36 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையினால் 03 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் ரூபா 1,740,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 1,023,096 கூட்டுத்தொகை அதாவது 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதி மற்றும் 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கத்தவர்களின் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட கடன் மீதி என்பவற்றிற்கிடையே ரூபா 53,773 வேறுபாடு காணப்பட்டது.

## 9.4 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 9.4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின்படி, திணைக்களத்திற்குரிய சொத்துக்களின் பற்றாக்குறை, மிகை மற்றும் மெய்மையாய்வுச் சபையின் சிபாரிசுகள் தொடர்பாக 2014 நவம்பர் 03 ஆந் திகதியளவிலும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.5 இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமையினால் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்குச் சொத்தமான ஜீப் வண்டி மற்றும் வான் வண்டியின் கிரயம் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட ரூபா 6,190,000 கூட்டுத் தொகையான இரண்டு மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 3,700,000 தொகையான ஜீப் வண்டியொன்றின் கிரயம் தொடர்பான விபரங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

**9.6 செயலாற்றல்**

------------------------

திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஆண்டு முழுவதும் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டியமை செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட கோவையின்படி, மீளாய்வாண்டிற்குரிய எந்தச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக 2013 நவம்பர் 21 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் இந்தியாவிற்காக மேலும் சந்தை வாய்ப்பைத் திறக்கும் நோக்கில் இலங்கைக்குரிய பட்டியலில் 10 விடயங்களை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்திய - இலங்கை விரிவான பொருளாதார புரிந்துணர்வு உடன்படிக்கையை (CEPA) அமுல்படுத்துவதற்குரிய ஆண்டு முழுவதும் கலந்துரையாடலில் பங்குபற்றுவதாக திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் அந்த உடன்படிக்கையின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) வங்காள விரிகுடாவை அண்மித்த நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்காக (BIMSTEC) உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்குரிய கலந்துரையாடலுக்காக ஆண்டு முழுவதும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கோவைகளைப் பரீட்சித்த போது, மீளாய்வாண்டின் போதும் அந்த உடன்படிக்கைக்குரிய எந்தக் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைப் பிரிவின் கீழ் பின்வரும் செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்பாடுகளுக்குரிய மேன் முறையீடுகள் அல்லது கோரிக்கை கிடைக்காதிருந்தமையும் ஏதாவது அமைச்சொன்று அல்லது நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக மாத்திரம் கோவைகளின் ஊடாக விடையளிக்க வேண்டி இருந்தமையும் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்த செயற்பாடுகளில் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) தீர்வை வரி ஏற்பாடுகள் செலுத்துதல் தொடர்பாக ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் நானாவித பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(ii) 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க வியாபார தீர்வை வரி மற்றும் முதலீட்டுத் கொள்கை சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிடைக்கின்ற முறைப்பாடுகள் மற்றும் முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

(iii) 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2010 ஏப்ரல் 07 ஆந் திகதிய 165 ஆம் இலக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் அதற்குரிய திருத்தங்களின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுத்தல்

(iv) சுங்க கட்டளைச் சட்டத்தின் 164 மற்றும் 165 ஆம் பிரிவுகளின்படி, நிதி விடயத்திற்கும் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

(உ) திணைக்களத்திற்குரிய வழக்கு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 9.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 |
| (ஆ) | மூன்றாம் நிலை | - | - | - |
| (இ) | இரண்டாம் நிலை | 25 | 22 | 03 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 10 | 03 |
| | மொத்தம் | 52 | 41 | 11 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளபடியான பதவியணியில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகள் உள்ளடங்கியிருந்தன.

## 10. தலைப்பு 245 – அரச பொது நிதித் திணைக்களம்

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரச பொது நிதித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தன.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்கப் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரச பொது நிதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 10.4 தொடக்கம் 10.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

---------------------------

இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,450,000 கூட்டுத் தொகையான தேறிய நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பின் கூட்டுத்தொகை ரூபா 911,148 ஆக இருந்ததுடன் அது தேறிய ஏற்பாட்டில் 24 சதவீதத்திற்கும் 65 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) கலைத்தல் முற்பணக் கணக்குகள்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் கீழுள்ள 04 முற்பணக் கணக்குகளின் நடவடிக்கைகளை கலைப்பதன் கீழ் 15 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் கலைத்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் போக்குவரத்து பிரிவின் விடய இலக்கம் 999/408 இன் முற்பணக் கணக்கில் 1972 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை ரூபா 4,204,236 திரண்ட செயற்பாட்டு நட்டமாகக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது ஏற்பட்டமைக்கான காரணம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதிய PF/FS/Assets/ஏவாஹி/2012 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் தலைவருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் மூலம் இந்த முற்பணக் கணக்கில் அங்கீகாரம் கிடைக்காத தொழிற்படு நட்டத்தை பதிவழிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, பணிப்பாளர் நாயகத்தின் 2014 பெப்ரவரி 13 ஆந் திகதிய PF/FS/Assets/கலைத்தல் கணக்கு/2008 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொழிற்படு நட்டத்தையும் உள்ளடக்கிய 5 முற்பணக் கணக்குகளின் தொழிற்படு நட்டத்தை பதிவழிப்பதற்கான நிதியேற்பாடும் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திறைசேரி புத்தகங்களில் இவ்வாறான தொழிற்படு நட்டம் காண்பிக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் போது பிழை திருத்தமொன்றாக அந்த தொழிற்படு நட்டம் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**10.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

----------------------------------------------------

அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 மே 16 ஆந் திகதி அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரச சொத்து முகாமைத்துவம் தொடர்பான கொள்கை வழங்குனராக இந்த சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த திணைக்களத்தால் இதுவரையிலும்

அதற்கு இணங்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தமையும், 2012 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகையான பொருட்கள் தொடர்பாக 2014 மே 10 ஆந் திகதி வரையிலும் 2013 இன் பொருள் மெய்மையாய்வுச் சபை சிபாரிசு தொடர்பாக 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் செயற்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**10.5 செயலாற்றல்**

2013 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான பணிகளான ‘‘நிதிப் பிரமாணக் கோவையை திருத்துதல்’’ 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் திருத்தம் கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 14 ஆந் திகதியளவிலும் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ‘‘ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்படாது அமைச்சு மற்றும் திணைக்களத்தின் கீழ் பேணப்படுகின்ற நிதியத்தை முறைமைப்படுத்துதல், மீளாய்வு செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தல்’’ திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்ததுடன் அதற்காக பின்பற்றப்பட வேண்டிய ஆலோசனைகளைக் காண்பித்து 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த சுற்றறிக்கையின்படி, நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் நிதியங்களின் இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பொது நிதித் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 நவம்பர் 13 ஆந் திகதியளவிலும் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற 60 நிதியங்களில் 2013 ஆம் ஆண்டிற்குரிய 16 நிதியங்களின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத திறைசேரி பிரதிச் செயலாளரின் 2013 சனவரி 31 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி, ‘‘அரசாங்க நிறுவனங்களின் கொடுப்பனவுகளுக்காக வங்கி முற்செலுத்துதல் அட்டை முறைமையை அறிமுகப்படுத்துதல்’’ மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதி முகாமைத்துவத்தின் செயற்திறனை முன்னேற்றுவதற்கு ரூபா 100,000 வரை சில்லறைக் காசு கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் கொடுப்பனவு வழி ஊடாக மேற்கொள்ளக்கூடிய வகையில் செலவினங்கள் முகவராண்மை நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் தொடர்புபடுத்தப்பட்டு வங்கி வரவுத்தாள் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளரின் 2013 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கமற்ற கடிதத்தின் மூலம் வங்கியினால் ரூபா 314,160 செலவில் 5000 முற் செலுத்துதல் அட்டைகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் மாத இறுதியளவிலும் 11 நிறுவனங்களுக்கு மாத்திரம்

அட்டைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் சுழற்சி நிலையில் 02 அட்டைகள் மாத்திரமே காணப்பட்டன. அட்டை பெற்ற நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டதன் படி அதனைப் பயன்படுத்தும் போது பிரச்சினையான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**10.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 27 | 14 | 13 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (இ) | இரண்டாம் நிலை | 34 | 30 | 04 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 17 | 13 | 04 |
| | மொத்தம் | 82 | 59 | 23 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதவியணியில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையின் 13 பதவிகள் உள்ளடங்கியிருந்தன.

(ii) கொள்வனவு முகாமைத்துவ விடயங்களில் கொள்கைகள், செயற்பாடுகள் மற்றும் முயற்சிகளின் வழங்கல், மீளாய்வு, அபிவிருத்தி செய்தல், பரவலாக்குதல் மற்றும் அமுல்படுத்துதல், அரசாங்க கொள்வனவு உபாய வழிகளை அமுல்படுத்துதல் என்பன பொது நிதித் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவின் பிரதான பணியாக இருந்த போதிலும், திணைக்களத்தின் பதவியணியில் காணப்படுகின்ற கொள்வனவு நிபுணர் பதவி மற்றும் 4 கொள்வனவு நிறைவேற்று தர பதவிகள் என்பன 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 11. தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**11.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் வருமானக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ்

கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 மார்ச் 16 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 11.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 11.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் (அ) முதல் (ஊ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 11.4 தொடக்கம் 11.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்களத்தின் சில செலவினப் பேரேடுகள் (வாக்குப்பணம்) முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தின் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடொன்று முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 201,000,000 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 150,411,710 கூட்டுத் தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 50,588,290 ஆன சேமிப்பொன்று காணப்பட்டது. அந்த சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 16 சதவீதத்திற்கும் 67 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டு நிதிக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகள் ரூபா 3,467,059 ஆக இருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணனி தரவுகளை பரிசோதிப்பதற்காக முற்பணமாக ரூபா 1,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வேலைகள் உடன்பட்ட திகதியில் பூர்த்தி செய்யாமையால் குறித்த முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்த முத்திரை வரிகளிலிருந்து ரூபா 1,047,477,214 ஆன வருமானம் மாகாண சபைகளுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வருமானத்தை மாகாண சபைக்கு செலுத்தாமல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 6000-0000-00-0014-0003-000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000-0000-00-0015-0126-00 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் ரூபா 42,602,599 ஆக இருந்தது. அம்மீதிகளிலிருந்து நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காலாவதியான ரூபா 9,173,439 ஆன வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2012 திசெம்பர் 31 வரையில் ஒப்பந்த கொடுப்பனவுகளிலிருந்து பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ஒப்பந்த செயற்பாடு நிறைவு செய்யப்பட்டு நிறுத்தி வைத்தல் காலப்பகுதியும் கடந்த ரூபா 85,665 ஆன வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது குறித்த தரப்பினருக்கு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வருமானக் கணக்கு**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வருமான மதிப்பீடு**

திணைக்களத்தின் கீழ்வரும் வருமானக் குறியீடுகளுக்குரிய வருமானங்கள் மதிப்பீடு செய்தல் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2013 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 547,864 மில்லியனாக இருந்தது. அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 467,162 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் ரூபா 80,702 மில்லியனான வருமானத்தை சேகரிப்பதற்கு தவறியிருந்தது. சேகரிக்கப்பட்டிருந்த தேறிய வரி வருமானமான ரூபா 467,102 மில்லியனில் ரூபா 116,783 மில்லியன் அல்லது 25 சதவீதம் திணைக்களத்தினால் நேரடியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் வருமானக் குறியீடுகளுக்கு செலவு வைக்கப்பட்ட வருமானமாக இருந்தது.

- மொத்த வரி வருமானமான ரூபா 478,881 மில்லியனில், ரூபா 11,719 மில்லியன் அல்லது மொத்த வரி வருமானத்தில் 2.44 சதவீதம் மீளச் செலுத்தப்பட்டிருந்தன.

**(ii) நிலுவை வரி வருமானம்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம், நிலுவை வரி வருமானம் ரூபா 172,179 மில்லியனாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் தொடர்பாக மீளாய்வாண்டில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் அரையாண்டிற்கான நிலுவை வருமான அறிக்கை 67 நாட்களாலும் இரண்டாம் அரையாண்டிற்கான நிலுவை வருமான அறிக்கை 135 நாட்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- நிலுவை வரி வருமானங்களில் ரூபா 2,725 மில்லியனுக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வரி வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வின் பிரகாரம், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை வரி வருமானம் ரூபா 137,769 உம், 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வரி வருமானம் ரூபா 12,225 மில்லியனும் 20 ஆண்டுகள் முதல் 40 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வரி வருமானம் ரூபா 135 மில்லியனும் 40 ஆண்டுகள் முதல் 50 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வரி வருமானம் ரூபா 1 மில்லியனாக இருந்தது.

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான வரிகளில் ரூபா 11,699 மில்லியன் தொகை செல்லுபடியற்றதாக்கப்பட்ட 06 வரி அதிகாரச்

சட்டங்களுக்குரியதாக காணப்பட்ட நிலுவை வரியாக இருந்தன. அவ்வரி அதிகாரச்சட்டங்கள் செல்லுடியற்றதாக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியை விஞ்சியிருந்த போதிலும், அந்நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு முறையான மற்றும் காலரீதியான வேலைத்திட்டமொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- நிலுவையான பெறுமதி சேர் வரியின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம், 1995 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வரியாக ரூபா 47 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவை வரி 2007, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை வரியாக இருந்தன.

**(iii) அறவீட்டுப் பிரிவிற்கு பிற்போட்ட வரியின் மாற்றுதல்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2010 இன் 16 ஆம் இலக்க பிற்போட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையாக இருந்த ரூபா 91,154 மில்லியன் வருமானம் 2011 ஆம் ஆண்டின் போது ‘‘பிற்போடப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவிற்கு’’ மாற்றப்பட்டிருந்தது. நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதில் ரூபா 50,100 மில்லியன் வரி நிலுவையாக காணப்பட்டது. 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளுக்குரிய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது பிற்போடப்பட்ட வரி சேகரிப்பு பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்த நிலுவை வரிகளில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 495 மில்லியன் தொடர்பாக எதுவித தகவல்களும் கணக்காய்வற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ‘‘பிற்போடப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவினால்’’ மீளாய்வாண்டின் போது அறவீடுகள், பதிவழித்தல்கள் மற்றும் மாற்றல்கள் என ரூபா 20,977 மில்லியன் தொகையான வரி தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 164 மில்லியன் அல்லது 0.78 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடப்பட்ட வரித்தொகையில் 46.25 சதவீதம் திரும்பவும் திணைக்களத்தின் வரிகளுக்குரிய பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிலுவை வரித்தொகையில் அறவீடுகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வரித் தொகையில் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட வரி விபரங்கள் வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், சேகரிக்கப்பட்ட ரூபா 467,162 மில்லியன் வரித்தொகையில், மீளாய்வாண்டிற்கு சேகரிக்கப்பட்ட வரி வருமானமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட நிலுவை வரிகளுக்குரிய கணனி தள வசதிகள் (intranet) அறிக்கையின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வரித்தொகையின் அளவு ரூபா 188,664 கூட்டுத்தொகையாகவும் அதே நேரம், நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம், நிலுவை வரி அளவின் கூட்டுத்தொகை ரூபா 81,023 மில்லியனாகவும் C - 49 அறிக்கையின் பிரகாரம், நிலுவை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா

95,743 மில்லியனாகவும் இருந்தது. இதனால் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு அறிக்கைகளில் காண்பிக்கப்படும் நிலுவை வரியின் அளவில் வேற்றுமைகள் காணப்படுவது காரணமாக நிலுவை வரி அளவு எவ்வளவு என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(iv) பிரிவு வாரியாக வகைப்படுத்தப்பட்ட இறுதி மாதாந்த வருமான அறிக்கை**

திணைக்களத்தின் பிரிவு வாரியாக வகைப்படுத்தப்பட்ட இறுதி மாதாந்த வருமான அறிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- குறித்த வருமான பிரிவினால் இனங்காணப்படாத (Unit Not Assign) 04 வகுதிகள் தொடர்பான ரூபா 837 மில்லியன் வரி வருமானமும் 03 வகுதிகள் தொடர்பான பிழையான வருமான குறியீடுகளின் (Error Code) கீழ் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 16 மில்லியனான வரி பெறுவனவுகளும், 03 வகுதிகளிற்காக பதிவு செய்யப்படாத வரி செலுத்துபவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 123 மில்லியன் வரி வருமானமும் மீளாய்வாண்டின் மாதாந்த வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

- மேலே குறிப்பிடப்பட்டிருந்த வரி பெறுவனவுகளில் 2014 யூன் 23 ஆந் திகதி வரையிலும் வருமான பிரிவுகள் இனங்காணப்படாத வரித்தொகைகளில் ரூபா 146 மில்லியனும் தவறான வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட வரிப் பெறுவனவுகளின் ரூபா 4 மில்லியனும் காணப்பட்டதாக 2014 யூலை 01 ஆந் திகதிய பதில் கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வரிகளுக்குரிய மூல ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(v) திறைசேரிப் புத்தகங்களிற்கும் திணைக்களப் புத்தகங்களிற்கும் இடையிலான குறிப்பிடப்பட்ட வேறுபாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒவ்வொரு கணக்காண்டிலும் திறைசேரியின் வருமான பதிவேடுகள் மற்றும் திணைக்களத்தின் வருமான பதிவேடுகள் என்பவற்றிற்கிடையே காணப்படும் வேறுபாடுகளிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு (கணக்குகளுக்கிடையே இணக்கம் செய்வதற்கு) தவறுகள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- திணைக்கள புத்தகம் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் இடையிலான வேறுபாடுகளுக்கு காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. 10.02.01.00 வருமான குறியீட்டிற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வேறுபாடு மீள கொடுப்பனவுகளாக (Refund) 10.02.01.02 வருமான குறியீட்டில் கழிக்கபட்டிருந்தது. அவ்வாறே 10.02.02.00 வருமான குறியீட்டின் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 10,933 ஆன வேறுபாடு 10.02.02.01 வருமான குறியீட்டிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே 10.04.02.99 ஆம் வருமான குறியீட்டிற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கிலான ரூபா 23 மில்லியனான வேறுபாடு அவ்வருமான குறியீட்டிற்கு மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தது.

**(iv) வருமானங்களை மீளளித்தல்**

மீளாய்வாண்டின் போது கீழே காட்டப்பட்டுள்ள 06 வருமான குறியீடுகளுக்குரிய திறைசேரி கணனி அச்சிட்டுள்ள தாளின் பிரகாரம் ரூபா 10,569 மில்லியன் வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

| வரி வகை | வருமானக் குறியீடு | திறைசேரியால் மீளளளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| பெறுமதி சேர் வரி (நிதி) | 10.02.01.01 | 771,519,182 |
| பெறுமதி சேர் வரி (ஏனைய சேவைகள்) | 10.02.01.02 | 221,788 |
| பெறுமதி சேர் வரி (இறக்குமதி) | 10.02.01.04 | 805,215 |
| முத்திரை வரி | 10.02.07.00 | 3,132,932,099 |
| தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (இறக்குமதி) | 10.02.12.03 | 6,749,493,111 |
| வருமான வரி (ஏனையவை) | 10.04.02.99 | 3,669,808 |
| மொத்தம் | | 10,658,641,203 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பின்வரும் வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 775 மில்லியன் தவறான குறியீடுகளில் வரி மீளளிப்பு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அத்தவறுகளை சரிசெய்யும் பொருட்டு செய்யப்பட்டிருந்த வரவு வைக்கப்பட்ட வருமானம், மீள் கொடுப்பனவுகளாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

| வருமானக் குறியீடு | வரி வகை | திறைசேரியால் தவறான செலவு மீதியாக காட்டியிருந்த தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 10.02.01.01 | பெறுமதி சேர் வரி (நிதி சேவைகள்) | 771,519,182 |
| 10.02.07.00 | முத்திரை வரி | 75,075 |
| 10.04.02.99 | வருமான வரி (ஏனையவை) | 3,669,808 |
| மொத்தம் | | 775,24,065 |

- திணைக்களத்தின் வருமான பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10.02.00.00 ஆம் வருமானக் குறியீட்டின் பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் திறைசேரி வருமான பதிவேடுகளிற்கிடையே ரூபா 221,778 ஆன வேறுபாடு காணப்பட்டது. அவ்வேறுபாட்டை

சரிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த வரவுப் பதிவு வரி மீள் கொடுப்பனவாக 10.02.01.02 வருமானக் குறியீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் திறைசேரியால் மீளாய்வாண்டின் போது பின்வரும் வருமானக் குறியீடுகளில் ரூபா 6,750 மில்லியன் கூட்டுத்தொகையான வரி மீள் கொடுப்பனவாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

| **வருமானக் குறியீடு** | **வரி வகை** | **வரி மீளளிப்பு** |
|---|---|---|
| | | **ரூபா** |
| 10.02.01.04 | பெறுமதி சேர் வரி (இறக்குமதி) | 805,215 |
| 10.02.12.03 | தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (இறக்குமதி) | 6,749,493,111 |
| மொத்தம் | | 6,750,298,326 |

இவ்வருமானக் குறியீகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி (இறக்குமதி) மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (இறக்குமதி) என்பவற்றிற்காக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாக இருந்த போதிலும், அவ்வருமானக் குறியீடுகளிலிருந்து மீள்கொடுப்பனவுகள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அதற்குரிய அதிகாரத்தின் விபரங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### (vii) வருமானச் சேகரித்தல் கணக்கு

பொருளாதார சேவைகள் கட்டண வருமானம், பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிக்காக இரண்டு அரச வங்கிகளில் வருமான சேகரிப்புக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன. அக்கணக்குகள் தொடர்பாக பொறுப்பாக செயற்பட்ட வருமானக் கணக்காளரால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2013 சனவரியிலிருந்து திசெம்பர் மாதம் வரை காலத்தில் வங்கி கொடுப்பனவுப் பத்திரங்கள் இல்லாத (No Slips) பொருளாதார சேவைக் கட்டணங்கள் சேகரிப்புக் கணக்கிற்கு ரூபா 65,551,224 தொகையும் பெறுமதி சேர் வரி சேகரிப்புக் கணக்கிற்கு ரூபா 46,120,423 தொகையும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிக் கணக்கிற்கு ரூபா 68,768,608 தொகையும் செலவு வைக்கப்பட்டிருந்தது. கொடுப்பனவுப் பத்திரங்கள் இல்லாத அப்பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

- கொடுப்பனவுப் பத்திரங்கள் இல்லாமையால் செலுத்தப்பட்ட வரித்தொகை, வரிகளைச் செலுத்திய வரியிறுப்பாளர்களின் விபரங்கள் கணக்கில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

- கொடுப்பனவுப் பத்திரங்கள் இல்லாமல் கிடைக்கப் பெற்றிருந்த வரித்தொகை தொடர்பான விபரங்கள் (மூல தகவல்கள்) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தால் பிடித்து வைத்தல் வரி (வட்டி அடிப்படையில்) மற்றும் பிடித்து வைத்தல் (கட்டணம் மற்றும் ஏனையவை) என்பவற்றுக்காக அரச வங்கியொன்று பராமரித்துச் செல்லும் இரண்டு சேகரிப்பு கணக்குகளில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 158,556,484 மற்றும் ரூபா 52,430,616 ஆன பெறுவனவுகள் திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிலான வருமானம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(viii) வரி சட்டங்களினால் எழுந்துள்ள சிக்கல்கள்**

2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், காலாண்டு புரள்வு ரூபா 3 மில்லியன் அல்லது ஆண்டொன்றிற்கு ரூபா 12 மில்லியனுக்கு மேற்படாத பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி பதிவினை இரத்துச் செய்யும் போது நிலுவையாக காணப்பட்ட வரியிறுப்பாளர்களின் பதவினை இரத்துச் செய்திருக்கவில்லை. இதனால் அவ்வரியிறுப்பாளர்களுக்கு டின் இலக்கத்தின் கீழ் வரி தவறாக அறவிடுவதற்கு இடவசதிகள் அளிக்கப்பட்டிருந்தன.

**(ix) வரிக்கான பெறப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள்**

2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 யூன் மாதம் வரையான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிக் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் மதிப்பிழத்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மதிப்பிழந்த காசோலைப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த 385 காசோலைகளின் ரூபா 47 மில்லியன் மொத்தமான 253 காசோலைகளும் 2013 யூன் 30 வரையான காலப்பகுதிக்குரிய 116 காசோலைகளில் ரூபா 18 மில்லியன் கூட்டுத்தொகையான 77 காசோலைகளும் மதிப்பிழந்திருந்தன. 2014 யூன் 30 ஆந் திகதிய வரையிலும் மேற்படி மறுக்கப்பட்ட காசோலைகளில் 234 இற்குரிய ரூபா 46 மில்லியன் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

- மறுக்கப்பட்ட காசோலைகளுக்குரிய கணனி முறைமையில் 57 வரியிறுப்பாளர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 103 மில்லியன் மொத்தமான 102 காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன், அக் காசோலைகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 44 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- 17 வரியிறுப்பாளர்களிடமிருந்து ரூபா 5,132,109 தொகையான முற்திகதியிடப்பட்ட 17 காசோலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 272,818 தொகையான 8 காசோலைகள் மதிப்பிழந்திருந்தது. அக் காசோலைகளுக்குரிய பணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அறவீடுகளை தீர்வு செய்யும் ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட 2012 சனவரி 20 ஆந் திகதிய அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம், வரி கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் மதிப்பிழந்த போது 10 சதவீதம் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 81,154,160 கூட்டுத்தொகையான மறுக்கப்பட்ட காசோலைகளில் ரூபா 2,155,062 கூட்டுத்தொகை தண்டப் பணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(x) வினைத்திறன் விகிதம்**

2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்த செலவினம் ரூபா 1,876 மில்லியனாக இருந்ததுடன், உள்ளபடியான வரி வருமானம் ரூபா 467,162 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு விகிதம் 249:1 அல்லது ரூபா 100 சேகரிப்புக் கிரயம் 40 சதமாக இருந்தது.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

24601 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 2,395,787 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 11.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 11.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2014 ஒக்தோபர் 23 ஆந் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 11.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**11.4.3 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் வரி வருமானம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தேவையான அதிகாரங்கள் கையளிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**11.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தை நடாத்துதல்**

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 2013 ஆம் ஆண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**11.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்றோ அல்லது குறைவான பயன்பாட்டுடனோ காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **பயன்படுத்தப்படாத அல்லது குறைவான பயன்பாட்டு காலம்** |
|---|---|---|---|
| (i) | மின்மாற்றி இயந்திரம் | 02 | உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் போது வழங்கப்பட்ட அந்த இரண்டு மின் மாற்றிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இரகசிய கண்காணிப்புக் கெமரா | 70 | 2010 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் போது கட்டிடத்தின் மாடிகளுக்கு இரகசிய கண்காணிப்புக் கெமராக்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவை பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

மேற்படி சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட மின்பிறப்பாக்கியொன்று 2009 ஆம் ஆண்டிலிருந்து அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) கிடைக்க வேண்டிய மீதி**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் 100 பேர்ச் காணித்துண்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கொள்வனவு செய்வதற்கு 2008

பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சொத்துகளின் கொள்வனவு நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒதுக்கீட்டுக் கணக்கில் 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்களாக ரூபா 60,263,549 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு மேலதிக 03 செலவின விடயங்களில் மேலதிகமாக ரூபா 7,715,839 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டது.

**11.6 இணங்காமைகள்**

**(அ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

(அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் 58(3)(அ) பிரிவின் பிரகாரம், வரி கொடுப்பனவுகள் காலாவதியாகும் சந்தர்ப்பத்தில வரியிறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்படாதுள்ள வரிக்கு எதிராக மீள செலுத்த வேண்டிய வரித்தொகையை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பெறுமதி சேர் வரி மீள் கொடுப்பனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அதற்கு முரணாக 20 வரி செலுத்துபவர்களின் கணனி கணக்ககுகளின் பிரகாரம் நிலுவையாக ரூபா 334 மில்லியன் காணப்பட்ட போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது அதில் 105 மில்லியன் வரி செலுத்துபவர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. பழைய வரி நிலுவைக்கு செய்யப்பட்ட சீராக்கங்கள் வரி செலுத்துபவர்களின் கணக்குகளில் பதியப்பட்டிருக்காமையால், இந்நிலமை ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்நிலுவை வரி அவ்வாறு இருக்கையில் அவை தொடர்பான சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் வரி மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இன் 9 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2011 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 55 ஆம் பிரிவின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவை தவிர்த்த வருமான வரியிலிருந்து விலக்களிப்பு பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வரி விலக்களிப்பிற்குரிய 2011 ஆம் ஆண்டிற்குரிய 80 வரியிறுப்பாளரகளும் 2012 ஆம் ஆண்டிற்குரிய 86 வரியிறுப்பாளர்களும் 2013 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு 21 வரியிறுப்பாளர்களும் வரி விலக்களிப்பு கோரப்பட்டிருந்ததாக 2013 திசெம்பர் 09 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. குறித்த அதிகாரச்சட்டங்கள் வெளியிடப்பட்டு 2 வருடங்கள் கடந்திருந்த போதிலும், திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த மேற்குறித்த வரி விலக்களிப்பு கோரல்களுக்குரிய 118 விண்ணப்பங்கள்

தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீக்கப்பட்ட 06 வரி அதிகாரச்சட்டங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வரி மீதி ரூபா 11,699 மில்லியனாக காணப்பட்டதுடன், நிலுவை வரி 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து நிலுவை மீதி ரூபா 11,699 மில்லியனாக இருந்ததுடன், அந்நிலுவை வரி 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து கணனியிலிருந்தும் டின் இலக்கங்களிலிருந்தும் அகற்றப்பட்டு பிற்போடப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தது. அவ்வரிகளுக்குரிய நடவடிக்கைகள் கையால் (Manual) பேணிச்செல்லப்படுகின்றமையால் அதன் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) ஒரே வரியிறுப்பாளருக்குரிய மொத்த நிலுவை வரி, விடுபட்ட வரி அறவீட்டுப் பிரிவின் அறிக்கையிலும் கணனி முறைமையிலும் காணப்பட்டமையால் நிலுவை வரி மீதிகள் விடுபடுவதற்குரிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை.

(ii) பழைய நிலுவை வரி அறவிடுவதனை விட தற்போதைய நிலுவை வரியை அறவிடுவதற்கு முன்னுரிமையை வழங்கி நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருதல்.

(iii) மாற்றப்பட்டிருந்த நிலுவை வரிகளுக்குரிய பெறுவனவுகள் கணனி முறைமையின் முதலாவதாக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அப்பெறுவனவுகள் அகற்றப்பட்டு நிலுவை பதிவேடுகளில் பதிவுசெய்வதற்கு நேர்வதனால் பெறுவனவுகள் இரண்டு முறை பதிவுசெய்வதில் விளைந்தது.

(iv) நிலுவை வரிக்காக செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் தொடர்பாக அறிக்கையொன்று கணனி பிரிவிடமிருந்து மாதாந்தம் எய்ப்புச் செய்யப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவிற்கு வழங்கப்படும். இதனால் எய்ப்புச் செய்யப்படுகின்ற வரி அறவீடு பிரிவினால் பேணப்படுகின்ற நிலுவை வரி பதிவேடுகளுக்குரிய நாளாந்தம் பதிவு செய்வதற்குப் பதிலாக மாதாந்தம் பதிவு செய்வதற்கு நேர்ந்திருந்தது,

## 11.7 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்/ நலிவுகள்

2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,585 மில்லியன் கிரய மதிப்பீட்டில் உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டிடத்தின் சில மாடிகளில் மழைநீர் வடிந்து வருகின்றமையினால் அலுவலக நடவடிக்கைகளை நடாத்துவதில் சிரமங்கள் காணப்பட்டன.

(ii) நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 09 மாடிகளுடன் கூடிய வாகன தளத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் முறையாகக் கையளிக்கப்படாமை.

(iv) நவீனமயப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் சில நிர்மாணங்கள், பொருத்திகள் மற்றும் வழங்கப்பட்ட உபகரணங்கள் உடைந்து விழுந்திருந்தமை.

(v) கட்டிடத்தின் மின் முறைமையின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் அரச கூட்டுத்தாபனத்தினால் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆதலால் அம்மின் முறைமையின் குறைபாடுகள் சீர்செய்வதற்காக கேள்வி கோராமல் வெளி ஒப்பந்தக்காரரொருவருக்கு அதற்காக ரூபா 862,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 11.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது முறையற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 235 கணனிகள் கொள்வனவு செய்தல்

திணைக்களத்திற்காக 210 Lenova think Centre M 72 e வகை கணனிகள் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 26,685,120 தொகையும் 25 HP Campac Elite 8300 வகை கணனிகளின் கொள்வனவிற்காக இன்னுமொரு தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 4,125,276 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இக்கொள்வனவுகள் பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இக்கொள்வனவு பெறுமதி ரூபா 30 மில்லியனுக்கு மேற்பட்டதாக இருந்த போதிலும் அதற்காக ரூபா 05 மில்லியன் மாத்திரம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கேள்வி அறிவித்தல்களை வெளியிடல், தொழில்நட்ப குழு அறிக்கை பெற்றுக்கொள்ளல், கொள்வனவுக் குழுவினால் கொள்வனவை அங்கீகரித்திருந்தமையால் எழுந்திருந்த பொறுப்புக்கள் நிதிப் பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

(ii) 2014 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் கொள்வனவு செய்வதற்காக ஏற்பாடு 2102 ஆம் செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடுகள் இருக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் கணனி கொள்வனவிற்காக ஏற்பாடு 2103 ஆம் செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5:4:10 வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், கணனி வழங்கியிருந்த இரண்டு தனியார் கம்பனிகளுடன் ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதத்திற்கு குறையாத செயலாற்றல் பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5:3:11

வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இக்கணனி கொள்வனவிற்காக வழங்குனருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) 2013 மே 15 ஆந் திகதிய ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் பிரகாரம், 02 வாரங்களுக்குள் கணனி வழங்கப்பட வேண்டிய போதிலும், கணனிகள் 2 மாதங்களின் பின்னர் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி மற்றும் ஆகஸ்ட் 12 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தினால் குறித்த கம்பனிகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளாமையால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(vi) திணைக்களத்தினால் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 210 லெனோவா தின்க் சென்டர் எம் 72ஈ (Lenova think Centre M 72 e) வகை கணனிகளும் 25 HP Campac Elite 8300 வகை கணனிகளுக்குரிய விதந்துரைப்புக்கு இணங்க வழங்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக பரீட்சிப்பதற்காக திணைக்களத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு கம்பனி இணக்கப்பாட்டை தெரிவித்திருந்தது. இதன் பிரகாரம் குறித்த கம்பனியால் வழங்கப்பட்டிருந்த கணனிகள் விதந்துரைகளுக்கு இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கணனி தரவுகள் பரீட்சித்தல்**

-----------------------------------------------------

உள்நாட்டு இறைவரித் திணைளத்திற்கு, வரி செலுத்தியதாக கணனித் தளத்திற்கு போலியாக தரவுகளை பதிவுசெய்து ரூபா 129 மில்லியன் நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிதி மோசடிக்காக வழங்கப்பட்டிருந்த நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் கணனி முறைமையின் பின்னூட்டியை (Backup) பரீட்சித்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு அரச பல்கலைக்கழகமொன்றுக்கு ரூபா 2.8 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதற்காக அப்பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,400,000 தொகை அதாவது 50 சதவீத முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவ்வறிக்கை குறித்த பல்கலைக்கழகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு அறிவித்தோ அல்லது அதற்குரிய பரிசோதனை பூர்த்தி செய்து ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**(இ) நுவரெலியா பிரதேச அலுவலகத்தின் பிரதி ஆணையாளரின் உத்தியோகபூர்வ விடுதிக்கான திருத்தங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

நுவரெலியா பிரதேச அலுவலகத்தின் பிரதி ஆணையாளரின் உத்தியோகபூர்வ விடுதியை திருத்தியமைப்பதற்காக திணைக்களத்தினால் கேள்வி கோரப்பட்டு குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்றுக்கு

ரூபா 11 மில்லியனுக்கு ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) உத்தியோகபூர்வ விடுதியை திருத்தியமைப்பதற்காக மீளாய்வாண்டிற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டலின் 2:8:1(அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடய நிபுணத்துவம் கொண்டுள்ள ஒருவர் அங்கத்தவராக இருக்க வேண்டிய போதிலும், இவ் ஒப்பந்த செயற்பாட்டிற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அவ்வாறான விசேடமான நிபுணத்துவமுள்ள உத்தியோகத்தர் (பொறியியல் தொழில்துறைக்குரிய) நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் 14 ஆம் உட் பிரிவின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் எழுத்துமூல அங்கீகாரமொன்றில்லாமல் ஒப்பந்தக்காரர் ஒப்பந்த செயற்பாடுகளை வேறு எவருக்கும் கையளிக்க முடியாதிருந்த போதிலும், தோட்ட நிலத்தை தயார்படுத்தல் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,141,400 இற்கு உப ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) 2013 ஆம் ஆண்டின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் இவ்வொப்பந்த நடவடிக்கைகள் 2013 பெப்ரவரி 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 நவம்பர் 30 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 யூன் 26 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**(ஈ) நுவரெலியா பிரதேச அலுவலக கட்டிடத்தினைத் திருத்தியமைத்தல்**

நுவரெலியா பிரதேச அலுவலக கட்டிடத்தின் திருத்த வேலைகளை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்கள பொறியியலாளரால் ரூபா 11,195,6689 இற்கு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு ரூபா 8,467,818 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்கள மதிப்பீட்டிற்கு எதிராக 24.36 சதவீத முரண் காணப்பட்ட போதிலும், அத்தொகைக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாததாக பொறியியலாளர் உறுதிப்படுத்தியிருந்தார். எனினும் ஒப்பந்தத்தை குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்தார்.

(ii) இந்த ஒப்பந்த வேலைகள் 03 மாதங்கள் 21 நாட்களுக்கு அதாவது 2013 திசெம்பர் 10 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வேலை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தக்காரருக்கு 05 பற்றுச்சீட்டுக்களில் ரூபா 3,987,216 தொகை 2014 யூன் 25 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் தாமதத்திற்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**11.9 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

**கணனி முறைமையின் பதிவுகளை போலியாக மாற்றுதல்**

2012 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் கணனி முறைமையில் பதிவுகளை போலியாக மாற்றப்படுவதன் ஊடாக ஏழு (07) வரிக் கோவைகளில் ரூபா 184,665,975 தொகை மற்றும் மேலும் ஒரு வரிக் கோவையில் ரூபா 19,242,377 தொகை முறையற்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் இரண்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஆரம்ப பரிசோதனையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**11.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 894 | 731 | 163 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 1024 | 552 | 472 |
| (இ) | இரண்டாம் நிலை | 662 | 542 | 120 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 397 | 365 | 32 |
| | மொத்தம் | 2977 | 2190 | 787 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 787 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12. தலைப்பு 247 – இலங்கை சுங்கம்

**12.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

இலங்கை சுங்கத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 பெப்ரவரி 05 ஆந் திகதி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான

கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 12.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 12.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் இலங்கை சுங்கத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஐ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 12.4 தொடக்கம் 12.14 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை சுங்கத்தினால் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம் / கணக்கு இலக்கம் | கணக்கின் பெயர் / வருமானம் | கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 24701 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று | 2014.05.07 |
| 7000/0000/00/0247/0002 | கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக்கணக்கு | 2014.05.07 |

| | | |
|---|---|---|
| 6000/0000/00/00/0/0015/0127/000 | நானாவித வைப்புக் கணக்கு | 2014.06.18 |
| 6000/0000/00/0006/0032/000 | சுங்க மேலதிகநேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம் | 2014.05.07 |
| 6000/0000/00/0006/0061/000 | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் | 2014.05.07 |
| 6000/0000/00/0006/0062/000 | சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் | 2014.05.02 |

**(ஆ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

இலங்கை சுங்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை மாதிரிச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| வாக்குப் பண பேரேடு | நிதிப் பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(i) ரூபா 117,195,709 மொத்தமான 61 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக் கணக்கிற்குரிய சில புலனாய்வு கோவைகள் மற்றும் வெகுமதிப் பட்டியல் கோவைகளும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான தகவல்களும் 2012 இற்கு முன்னர் இடம்பெற்றிருந்த வாகன விபத்துக்கள் கோவைகள் மற்றும் வெளி நிறுவனங்களுக்குரிய சொத்துக்களையும் மனித வளங்களையும் பயன்படுத்துதல் தொடர்பான விபரங்கள் உட்பட தேவையான சான்றுகள் இலங்கை சுங்கத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) வெளிநாடு சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 400,851 கூட்டுத்தொகையான குளிர்தாங்கும் ஆடைப் படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச்செலவினத்தை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் காணப்படவில்லை.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

2012 திசெம்பர் 28 ஆந் திகதிய 157 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டு வரையறைக்குள்ளேயே செலவினங்கள் முகாமை செய்யப்பட வேண்டிய போதிலும், அவ் அறிவுரைகளுக்கு முரணாக பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(i) எரிபொருள் செலவின விடயத்திற்கான மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 27,000,000 தொகையானதுடன், அதில் ரூபா 26,954,018 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவினங்களுக்கு மேலதிகமானவை ரூபா 13,404,494 வெகுமதி நிதியத்தலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தளபாடங்கள், அலுவலக உபரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,800,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 3,751,156 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டிற்காக ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 84,656,355 தொகை முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(iii) எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைகளிற்காக ரூபா 31,660,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 31,642,910 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வேற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 9,358,916 தொகை முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

இலங்கை சுங்கத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 4,751,600 தொகை 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 1,846,600 தொகையான மீதிகள் 2007 ஆம் ஆண்டிலிருந்தும், ரூபா 2,880,000 தொகை 2008 ஆம் ஆண்டிலிருந்தும் ரூபா 25,000 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்தும் மீதியாக இருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஊ) நானாவித வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 யூலை 12 ஆந் திகதி 209/2010 ஆம் இலக்க அரச கணக்குகள், சுற்றறிக்கையின் 4.3.(1) ஆம் பந்தியின் பிரகாரம் வைப்புப் பேரேடுகளின் மீதிகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வைப்புப் பேரேடுகளில் இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த சகல வைப்புக்களுக்காக அரையாண்டு பட்டியல் தயாரித்தல், சமப்படுத்திய கணக்குகளைத் தயாரித்தல், மீதிகளை முன்கொண்டு வருதல் மற்றும் மாதாந்த வைப்பு பொழிப்புக்களின் பொழிப்புக்களைத் தயாரித்தல் என்பவை தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(1), 565(3), (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது வைப்புக் கணக்கில் நானாவித வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய தனிப்பட்ட மீதிகளின் மொத்தத் தொகைக்கும் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட தனிப்பட்ட மீதிகளின் மொத்தத் தொகைகளுக்குமிடையே முறையே ரூபா 287,000 தொகை மற்றும் ரூபா 18,608,074 தொகையான பொருட்படுத்தக் கூடிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக்கூற்றின் மீதிக்குள் ரூபா 336,674 தொகையான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(v) நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படும் போது ரூபா 7,663,624 ஆன வைப்புக்கள் குறைவாகவும் ரூபா 2,174,624 ஆன வைப்புக்கள் அதிகரித்தும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(vi) ‘‘இறக்குமதி வெளிவாரி பரிசோதனைக் கட்டணங்கள் வைப்புக் கணக்கு’’ மற்றும் முழுமையான கொள்கலன் செயற்பாட்டு கட்டண வைப்புக் கணக்கு’’ என்ற வைப்புக் கணக்கில் காணப்பட்ட மீதிகளை விஞ்சி ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் அக்கணக்குகளில் மீதி ரூபா 361,150 ஆன வரவு மீதியாக மாறியிருந்தது.

**(எ) வருமான கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட பதினைந்து (15) கணக்குகளின் பிரகாரம் ரூபா 13,226 மில்லியன் தொகையான வருமான நிலுவை காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலத்துடன் தொடர்புபட்டது. அந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் 15 வருமானக் குறியீடுகளுக்கு உரிய அரையாண்டு

நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டில் கொள்கலன்களை விடுவிக்கும் செயற்பாடு தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நடைமுறை ஆண்டிற்கான கொள்கலன்கள் தொடர்பான 17,062 சுங்க குறிப்புக்களில் 140,624 குறிப்புக்கள், அதாவது 80.33 சதவீதம் இலகுவாக விடுவித்தலின் (Amber Channel) கீழ் 18,748 குறிப்புக்கள் அல்லது அதாவது 10.71 சதவீதம் விரிவாகப் பரீட்சித்தலின் (Detail Channel) கீழ் 2,257 குறிப்புக்கள் அல்லது 1.29 சதவீதம் உயர் ஆபத்து பரீட்சிப்பின் (High risk Channel) கீழும் 6,217 குறிப்புக்கள் அதாவது 3.55 சதவீதம் சிவப்பு பரீட்சித்தலின் (Red Channel) கீழும் முதலீட்டுச் சபையின் கொள்கலன்கள் மற்றும் ஏனையவற்றின் கீழ் 7,216 குறிப்புக்கள் அதாவது 15.55 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் முறையான பரிசோதனை செயற்பாடொன்றுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகவும் 84.45 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் முழுமையான கொள்கலன் பரீட்சிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அம்முறைமையின் கீழ் சுங்க அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக இறக்குமதிகள் விடுவிக்கக்கூடிய முறைமை காணப்பட்டு வந்தது.

- கண்காணிப்புப் பிரிவின் பிரதி பணிப்பாளரால் சுங்க பரிசோதனையின் தன்மை தீர்மானிக்கப்படுகின்றதுடன், அதற்காக முறையான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரிய உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் இறக்குமதியாளர்களின் வரலாற்றுத் தரவுகளின் பிரகாரம் பரிசோதனை முறை தீர்மானிக்கப்படுகின்றதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இறக்குமதியாளர்களின் வரலாற்றுத் தரவுகள் முறைமையொன்று கண்காணிப்பு பிரிவில் வைத்திருக்காமையால் பரிசோதனை முறை உத்தியோகத்தர்களின் விருப்பப்படி தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- ‘‘ஆசிகுடா’’ கணனி மென்பொருளினால் தானியங்கி தெரிவு செய்தல் பரிசோதனை முறையொன்று கண்காணிப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களின் பிரகாரம் மாற்றப்படுவதுடன், இலகுவான விடுவிப்புக்கள் (Amber Channel) கீழ் இருந்து விரிவான பரீட்சித்தல் (Detail Channel) உயர் ஆபத்துப் பரீட்சித்தல் (High risk Channel) ஆகிய வழிகளில் மாற்றங்களை தவிர்க்கும் தகைமை ஏனைய அந்த வழிகளுக்குரிய விடுவிப்புக்களிற்கு (Amber Channel) தொடர்புபடுத்துவதைத் தவிர்க்கும் முறையொன்றும் தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- கப்பற் துறைமுக மேடை எழுதுவினைஞர்கள் அவ்வப்போது நீண்ட அறையில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு அருகே தரித்திருப்பது அவதானிக்கப்பட்டது. தலைமை அலுவலகத்தினுள் செயற்படுத்தப்படும் பாதுகாப்பு கெமரா முறைமையுடன் தொடர்புடைய நீண்ட அறையில் பொருத்தப்பட்டிருந்த கெமரா நீண்ட அறையின் வெளியே தெரியக்கூடிய வகையில் பொருத்தப்பட்டிருந்தது.

- இலங்கை வங்கி கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் 7.03 சதவீத வருடாந்த வட்டி வீதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் 15,600,000 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த நான்கு (04) ஸ்கேனர் இயந்திரங்களுக்கான பராமறிப்பிற்கு காலாண்டு ரீதியாக ரூபா 3,876,000 தொகையும் உபபாகங்களுக்காக ஆரம்ப கிரயமாக இலங்கை சுங்கத்தினால் பாரியளவு தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 175,062 மொத்த சுங்க குறிப்புக்களுக்குரிய 261,165 ஆன கொள்கலன்களில் 24,985 அல்லது 9.57 சதவீதமான சிறிய அளவு எண்ணிக்கையானவை மாத்திரம் ஸ்கேனர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

- 2013 ஆம் ஆண்டில் சுங்க குறிப்புக்களில் 80.33 சதவீதம் அல்லது 140,624 குறிப்புக்கள் இலகு வழிகளின் (Amber Channel) கீழ் விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் கூடியளவு கொழும்பு துறைமுகத்திலிருந்து ஏறத்தாழ 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ரூன்க் கொள்கலன் இறங்கு துறை (RCT) என்ற பெயரில் அழைக்கப்படும் சுங்க பரிசோதனை அலுவலகத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. பரிசோதனை செய்வதற்காக துறைமுகத்திலிருந்து இத்தளத்திற்கு தொடர்புபடுத்தக்கூடிய கொள்கலன்கள் குறிப்பாக (RCT) பரிசோதனைத் தளத்திற்கு வருகை தந்ததா என்பதை உதிப்படுத்துவதற்கு உதவிபுரியும் கொள்கலன் கட்டுப்பாட்டு கணனி முறைமையை (Cargo Control System) அங்குள்ள சுங்க உப அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) முழுமையாக நிரப்பப்பட்ட கொள்கலன்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் பெருமளவு எண்ணிக்கைகளுக்கிடையே ஒன்றோ அல்லது இரண்டோ மாத்திரம் சுங்க பரிசோதனைக்காக ரூன்க் கொள்கலன் இறங்குதுறைக்கும் எஞ்சிய கொள்கல்ககள் இறக்குமதியாளர்களின் களஞ்சியங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. அச்செயற்பாட்டின் பொது ரூன்க் கொள்கலன் இறங்கு துறைக்கு தொடர்புபடுத்தப்படுகிற மாதிரி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரச்சான்றிதழின் பிரகாரம் சுங்க விடுவிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும் இறக்குமதியாளர்களின் களஞ்சியங்களுக்கு அனுப்பப்பட்ட கொள்கலன் தொடர்பான சுங்க மேற்பார்வையொன்று செயற்படாதிருந்ததுடன், அதன் மூலம் முறைகேடுகள் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) பல சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக செயன்முன்னேற்ற அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படாமை மற்றும் அதன் காரணமாக ஏனைய தேவையான பிரிவுகளால் தகவல்கள் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்கு போதியளவு தகவல்கள் காணப்படாமை சம்பவ கோவைகள் தொடர்பாக தொடர்ச்சியாக செயற்படாமை மற்றும் வெளிப் பரிசோதனைகளுக்குரிய எழுத்து மூலமான தகவல்கள் முறையாக கோவை செய்யப்பட்டிருக்காமை போன்ற பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(vi) ஜப்பானில் நடைபெற்ற வாகன ஏலவிற்பனைகளின் போது கூடிய விலை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இலங்கை சுங்கத்தினால் அவ்வாகனங்களின் பெறுமதி மிகவும் குறைவாக குறிப்பிடப்பட்டு வரி கணக்கிடப்பட்டமையால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் பாரியளவு சுங்க வருமானம் இழக்கப்பட்டிருந்தது. இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம், ஏலவிற்பனை விலை மற்றும் செலவிடப்பட்ட மேலதிக கிரயத்தையும் கருத்திற்கொண்டு கப்பலில் ஏற்றல் மற்றும் கிரயம் (FOB) ஜப்பான் யென் 64,255,000 தொகையான 33 வாகனங்களின் வரி நடவடிக்கைகளுக்காக ஜப்பான் யென் 47,298,250 ஆக கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாம் இலங்கை சுங்க வரி நடவடிக்கைகளுக்காக ஜப்பான் யென் குறைந்த பெறுமதி அடிப்படையில் வரி கணிப்பிடப்பட்டமையால் அதிகளவு வரி வருமானமொன்று அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது. அந்த 33 வாகனங்களில் 10 வாகனங்கள் முழு வரிக் கொடுப்பனவு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், பெறுமதி குறைவாக காண்பிக்கப்படாமையால் அந்த 10 வாகனங்களிலிருந்து மாத்திரம் அரசாங்கத்திற்கு அண்ணளவாக ரூபா 5,025,942 தொகை வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(vii) 2013 மே 21 ஆந் திகதி DOPL 854 B ஆம் இலக்க சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம், 2013 மே 21 ஆந் திகதியின் வாகனங்களுக்காக வரி கணிப்பீட்டு பெறுமதியாக ஒவ்வொரு வாகன வகைக்காக உள்ளவாறான கிரய அடிப்படையில் வரி கணிப்பிடப்படாமல் நியம பெறுமதி அடிப்படையில் வரி அளவு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையான விலைக் கொள்கையைத் தீர்மானிப்பதற்காக வாகன வகைகளுக்கு உள்நாட்டு முகவர்கள் சமர்ப்பித்த விலை விபரங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தன. 11 வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஒவ்வொரு வாகனத்திற்கும் ஆகக்குறைந்தது ஜப்பான் யென் 178,500 இலிருந்து அதற்கு குறைந்த நியம விலை குறிப்பிடப்பட்டமையால் அரசின் வருமானம் இழக்கப்படுவது அதிக மட்டத்தில் காணப்பட்டது.

(viii) 1998 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் ஏற்றுமதிக்காக ஆடை உற்பத்தி செய்யப்படுகின்ற முதலீட்டு

சபையின் கீழ் பதிவு செய்யப்பபட்டிருக்காத நிறுவனங்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அந்நடவடிக்கைககள் இலங்கை சுங்கத்தின் முதலீட்டு வசதிகள் பிரிவினால் (INFAC) மேற்பார்வை செய்யப்படுகின்றது. இம்முதலீட்டு வசதிகள் செயற்படுத்தப்படும் பிரிவு (INFAC) மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையே கூட்டிணைப்பு காணப்படாமை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பவற்றை ஒப்பிடுவதற்காக பயன்படுத்துகின்ற விகிதங்களை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான தரவுகள் இல்லாமை இறக்குமதி மூலப்பொருட்கள் மூலம் செய்யப்படுகின்ற உற்பத்திகள் உள்ளவாறாக ஏற்றுமதி செய்யப்படுகின்றதா இல்லாவிட்டால் தீர்வு வரி கொடுப்பனவொன்றில்லாமல் உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றதா என பரிசோதிப்பதற்கு முறையான நடைமுறையொன்று இல்லாமையும் தெரிவு பரிசோதனையின் போது 12 சுங்க குறிப்புகளுக்குரிய ரூபா 3,933,662 ஆன நிலுவை பெறுமதி சேர் வரி வருமானத்தை அறவிடுவதற்கு எதுவித நடைமுறையொன்றும் எடுக்கப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ix) சுங்க குறிப்புக்களை போலியாக பயன்படுத்தி சட்டவிரோதமாக சுங்க வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வெவ்வேறு வகையிலன 10 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டமையால் ரூபா 60 மில்லியனுக்கு மேற்பட்ட வரி வருமானமொன்று அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்குரிய அனைத்து தரவுகளையும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்புபடுத்தல்களை மேற்கொள்ளாமை, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பதிவு செய்கின்ற அனைத்து வாகனங்களுக்குரிய தரவுகள் இலங்கை சுங்கத்தினால் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டு இறக்குமதி தரவுகளுடன் ஒப்பீடு செய்யாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை, மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் சுங்கப் பரிசோதனையொன்று இல்லாமல் இறக்குமதியாளர் கைக்கு கிடைக்கச் செய்யும் வகையில் புலனாய்வு செய்யாமை மற்றம் அதற்கு உதவி புரிந்த நபர்களை இனங்கண்டு சட்டரீதியான நடைமுறைகளை எடுக்காமை போன்ற காரணங்களில் மேற்படி மோசடி செயற்பாடுகள் செய்வதற்கு முடியுமாக இருந்தது.

(x) ஒரு வழக்குக் கோவையின் பிரகாரம், வெளியிடப்பட முடியாத உருப்படிகளாக 45 எல்சீடீ (LCD) மொனிட்டர், 06 மின் அடுப்புக்கள். 05 அதிகுளிரூட்டிகள் நடுத்தர அளவிலான 05 குளிரூட்டிகள் 06 சிறிய அதிகுளிரூட்டிகள், 10 றைஸ் குக்கர்கள் மற்றும் பல மின் உபகரணங்கள் என்பன பயன்படுத்தப்பட்ட பொருட்களாக வகைப்படுத்தப்பட்டு ரூபா 148,330 இற்கு மதிப்பிடப்பட்டு ரூபா 400,000 தண்டப்பணத்தற்கு உள்ளாக விடுவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான இலகுவான தண்டப் பணத்தை விதித்தல் தீர்வை வரி மோசடியில் ஈடுபடும் வியாபாரிகளை ஊக்குவிப்பதாக அமைகின்றது. இதற்கு மேலதிகமாக வெளியிடப்படாத உருப்படிகளை இனங்கண்டு

அரசுடைமயாக்குவதற்குப் பதிலாக விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(xi) பாதுகாப்பு களஞ்சியத்திற்குரிய முறையான களஞ்சிய முறைமையொன்று பின்பற்றத் தவறியமையால் கிரேலைன் II கொள்கலன் பரிசோதனைப் பிரிவின் உருப்படிகள் சில உருக்குலைந்தும் அழிவுற்று வருவதும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக களஞ்சியத்திற்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களின் போது களஞ்சியம் முறைப்படி கையளிக்கப்படாதிருந்ததுடன், களஞ்சிய ஏடுகள் சரியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் பொருட்கள் / உருப்படிகள் கண்டுபிடிப்பதற்கு சிரமமாக இருந்ததுடன், தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சில உருப்படிகள் பௌதீக ரீதியாக சமர்ப்பிப்பதற்கும் முடியாதிருந்தது.

(xii) மத்திய கைதவிர்ப்பு பிரிவின் மூலம் விற்பனைக்கு வழங்கப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருக்காததுடன், அந்தப் பொருட்களை விற்பனைக்கு முன்வைப்பதற்கு நேர்ந்திருந்தது. இப்பொருள் பௌதீக பெறுமதி மதிப்பீடு செய்யும் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள், கொள்வனவாளர்களால் பொருட்களைப் பரீட்சிக்கும் சந்தர்ப்பங்களின் போது பொருட்களின் சில பகுதிகள் காணப்படாமை, முறையற்ற களஞ்சிய முறைமைகள் காரணமாக பொருள் உருப்படிகள் சேதமடைந்திருந்தன. இதன் காரணமாக மத்திய கைதவிர்ப்பு பிரிவின் மூலம் விற்பனைக்கு முன்வைக்கப்படும் பொருட்களிலிருந்து எதிர்பார்த்த வருமானத்தை அரசிற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(xiii) உழைக்கும் போது செலுத்தும் வரி (உ.போ.வ) தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- உத்தியோகத்தர்களுக்கு ஒரே தடவையில் செலுத்தப்படும் படிகளிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி (உ.போ.செ) வரி கணிப்பிடுவதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உ.போ.வ வருமான வரி வாய்ப்பாடு 1/2 முதல் 12 வரை வரி வீதங்களைக் கொண்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் விசாரித்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு கூடிய தேவையான 121 சந்தர்ப்பங்கள் தொடர்பாக இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து குறித்த வீதத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மதிப்பீட்டு ஆண்டில் உத்தியோகத்தர்களின் மாதாந்த நிரந்தர சேவை வருமானம் ரூபா 50,000 இற்கு குறைவாக இருந்த போதிலும், ஒரே தடவையில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளைச் சேர்க்கும் போது வருடாந்த வருமானம் ரூபா 600,000 ஐ மிகைக்கும் சந்தர்ப்பத்தில் உரிய உத்தியோகத்தர்களின் உ.போ.செ. வரி கழிக்கப்படாத 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- ஷமாதாந்த நிரந்தர வருமானத்தை கணிப்பிடும் போது வெளி பரிசோதனைக் கட்டணங்கள், ஒதுக்கப் படிகள் போன்ற மேலதிக கொடுப்பனவுகள் கருத்திற்கொள்ளாமல் கணப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- ஒரு தடவையிலான கொடுப்பனவுகளிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி அறவீடுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் கோவையின் வரி சூத்திர இலக்கம் 02 இன் பிரகாரம், அக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் மதிப்பீட்டாண்டில் அதற்கு முன்னர் செலுத்தப்பட்ட ஒரே தடவையில் திரண்ட படிகள் மாதாந்த நிரந்த உழைப்புக்களுடன் விகிதமாக்கப்பட்டு, வரி விகிதம் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 234 உத்தியோகத்தர்களிடமிருந்து குறைவாக அறவிடப்பட்டிருந்த உழைக்கும் போது செலுத்தும் வரி ரூபா 4,823,846 ஆக இருந்தது.

(xiv) மத்திய தபால் பரிவர்த்தனை சுங்க அலுவலகத்தின் செயலாற்றலை பரிசோதித்த போது வெளிநாட்டு தபால் பிரிவிற்கு மாதமொன்றிற்கு ஏறத்தாழ 50,000 பொதிகள் கிடைக்கப்பெறுவதுடன், அதில் சுங்க பதவியணியினரால் தமது விருப்பின் பேரில் தெரிவுசெய்யப்பட்ட 1 சதவீத அளவில் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றமையால் சுங்க வரிக்கு உரித்தான பொருட்கள் விலக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(xv) சுங்கத் திணைக்களத்தின் கணனி முறைமை தகவல்களின் பிரகாரம், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த உயர் பெறுமதியுடைய 41 மோட்டார் வாகனங்களின் செசி இலக்கங்கள், சட்டரீதியாக சுங்க வரி செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தபட்டிருக்கவில்லை.

(xvi) றுகுணு மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் சுங்க நிவாரண பிரிவிற்கு இரண்டு உதவி நிவராண உத்தியோகத்தர்கள், சுங்க பரிசோதனை உத்தியோக்கத்தரொருவர் மற்றும் சுங்க பரிசோதகரொருவர் இணைக்கப்பட்டிருந்தனர். எனினும் கப்பல் தொடர்பாக மரபுரீதியான சுங்க நடவடிக்கைகள் தவிர ஏனைய சுங்க செயற்பாடுகள் மற்றும் புலனாய்வுகள் எதுவும் நடாத்தப்பட்டமைக்கு எழுத்துமூல தகவல்கள் காணப்படாமல் இருந்ததுடன், சம்பவ கேவைகள் எதுவும் திறக்கப்பட்டிருக்கவில்லை.

(xvii) 2009 ஆம் ஆண்டின் போது தரைப்படையின் பொறுப்பிற்குட்பட்ட ‘பாரா – 3’ கப்பலின் பழுதடைந்த இரும்பினை தரைப்படையினால் வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 80,300,000 தொகை தரைப்படை உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 1971 இன் 52 ஆம் இலக்க வியாபார கப்பல் அதிகாரச்சட்டத்தின் 238 ஆம் பிரிவின்

பிரகாரம் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உடைந்த இரும்புகளாக கருதி சுங்க கட்டளைச் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த பழுதடைந்த இரும்பிற்கு சுங்க வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(xviii) முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 4,590,000 பெறுமதியான 121 பறவைகள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டு தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு கையளித்ததன் பின்னர் மீண்டும் இறக்குமதியாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 2.46 மில்லியன் ஆன வரி வருமானமொன்று அரசினால் இழக்கப்பட்டிருந்தது.

(xix) இறக்குமதியாளர்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஏலவிற்பனை செய்யும் போது சுங்கத்தினால் அதற்காக பரிந்துரைக்கப்படுகின்ற விலையை விட கொள்வனவாளர்கள் கோரப்படும் விலை கூடிய பெறுமதியைக் கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதனால் சுங்கத்தினால் வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பெறுமதி அதன் உண்மையான சந்தை பெறுமதியை வெளிப்படுத்துகின்றதா என்பது சர்ச்சைக்குரியதாக இருந்தது

**(ஏ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் இணக்கக்கூற்றுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 24701 ஆம் விடய இலக்கமுடைய அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,947,978 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தம் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 56,557 ஆன வேறுபாட்டிற்கு காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இடமாற்றம் பெற்றுச் சென்ற பதினாறு (16) உத்தியோகத்தர்களின் ரூபா 1,766,620 கூட்டுத்தொகையான கடன் மீதி நிதிப் பிரமாணம் 485(4) மற்றும் 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தீர்க்கக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ஓய்வு பெற்ற, மரணித்த, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 3,935,067 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன. இது தொடர்பாக

தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக, இடர் கடன் எல்லையான ரூபா 250,000 ஐ விஞ்சி 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 976,387 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆகக்கூடிய இடர்கடன் எல்லையை விஞ்சிய கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 07 சந்தர்ப்பங்களில் ஆதனக் கடன் பெற்றிருந்த 06 உத்தியோகத்தர்களால் 06 வாரங்களுக்குள் காணியின் உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.1.3 மற்றும் 11.9.1 ஆம் பிரிவுகள் முழுக்கடன் தொகையையும் மீளச் செலுத்தி முடியும் வரை மாதாந்த கடன் தவணையை இரண்டு மடங்காகவும் வட்டி வீதத்தை 5 சதவீதமாக அதிகரித்து தவணைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) ஏனைய முற்பணக் கணக்கு**

**கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கு மீதான செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்கள் என்பனவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ரூபா 35,765 ஆக இருந்ததுடன், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் முற்பணக் கொடுப்பனவு மீதி இணக்கம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வெகுமதிப் பணம் கொடுப்பனவின் போது முழு முற்பணத்தையும் தீர்வு செய்யாமை, முற்பணங்களின் ஒரு பகுதியை தீர்ப்பனவு செய்தல் மற்றும் ஏடுகளைப் பராமரித்தல் போன்ற குறைபாடுகள் காரணமாக அல்லது தீர்வு செய்தல் பிழை காரணமாக மிகை பெறுவனவுகளாக 2007 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,764,113 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கவோ அல்லது ஏனைய முறையொன்று மூலமோ தீர்வுசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முற்பணக் கொடுப்பனவிற்குரிய புலனாய்வு முடிவில் சுங்க குற்றங்கள் அல்லது பெற்றுக்கொள்ளப்படும் முற்பணம் தீர்ப்பதற்கு பெறப்பட்ட வருமானம் போதாமை போன்ற விடயங்கள் அடிப்படையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் அல்லது தீர்ப்பனவுகள் சந்தேகத்திற்குரிய மீதிகள் இனங்காணப்படாமலும் நிதிப்

பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) முற்பண மீதிகள் தொடர்பாக அறிக்கைகள் மற்றும் ஏடுகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. போதியளவு கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீதிகளை அவ்வப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 12.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 12.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 11.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தை அமுல்ப்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

### 12.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை சுங்கத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே காண்பிக்கப்பட்ட சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) இலங்கை சுங்கத்தினால் ரூபா 859,500 கிரயத்தில் 2007 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஏழு (07) கைவிரல் அடையாள இயந்திரங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு இந்த கைவிரல் அடையாள இயந்திரங்களுக்காக வருடாந்தம் ரூபா 153,380 தொகையான சேவைக்கட்டணமும் செலுத்தப்பட்டிருந்ததுடன், கைவிரல் அடையாள இயந்திரங்களின் பயன்பாட்டை நிராகரித்திருந்தனர்.

(ii) கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக 7.03 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 15,600,000 தொகையான கடன் தொகையைப் பயன்படுத்தி 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நான்கு (04) பரிசோதனை ஸ்கேன் இயந்திரங்களும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தினால் அதன் எண்பத்தேழு (87) பிரிவுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய பூர்த்தி செய்யப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

இலங்கை சுங்கத்தினால் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 36’x15’ அளவிலான காணித்துண்டொன்று வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) நடைமுறையல்லா சொத்துக்கள்**

நடைமுறையல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிப்பிரமாணம் 802(3) மற்றும் 2009 யூன் 08 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி என்பனவற்றின் பிரகாரம், வாகனங்கள் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய சுங்க கட்டிடத்திற்கு பழைய சுங்க கட்டிடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள கோவைகள் எதுவும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை சுங்கத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 167,338,727 ஆக இருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய 231/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.11 பந்தியின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்ப்பதற்குரிய பொறுப்புக்களாக ரூபா 167,338,727 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது அப்பொறுப்புக்களுக்கு மேலதிகமாக ரூபா 193,430,043 ஆன தொகை தீர்வு செய்யப்பட்டிருந்தன.

(ii) வழங்கல் மற்றும் சேவைகள் செலவினம் தொடர்பாக பொறுப்புக்களுக்கு உட்படும் போது நிதிப் பிரமாணம் 94(2) இற்கு முரணாக 247-1-1-1403 செலவின விடயத்தின் எல்லையை விஞ்சி ரூபா 9,562,102 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**12.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் | 23 சந்தர்ப்பங்களில் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 வீதம் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் உத்தியோகத்தரொருவருக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்காக உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.3 மற்றும் 6.14 ஆம் பிரிவுகள் | 2011 மார்ச் மாதத்தின் போது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதியை கையளிக்காமல் இருந்ததுடன், அந்த உத்தியோகத்தரின் சகோதரி அனுமதியின்றி அவ்விடுதியில் வசித்துவருகின்றார். 2013 சனவரி மாதத்தின் போது ஓய்வுபெற்ற இன்னுமொரு உத்தியோகத்தர் 2013 மே வரை வாடகை கொடுப்பனவொன்றில்லாமல் உத்தியோகபூர்வ விடுதியில் குடியிருந்தார். |

| | | |
|---|---|---|
| (iii) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.10 ஆம் பிரிவு | 2012 செப்தம்பர் மாதத்தின் போது இறந்து போன உத்தியோகத்தர் வசித்திருந்த உத்தியோகபூர்வ விடுதி 2013 ஏப்ரல் மாதம் வரை பயன்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்காக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | 02 உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக வாடகை நிலுவை ரூபா 153,110 தொகையும் அதில் ஒரு உத்தியோகபூர்வ விடுதிக்காக நிலுவை தண்டப்பண வாடகை ரூபா 27,802 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (v) | XIX ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ விடுதியில் அனுமதியின்றி குடியிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக இப்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | கட்டளை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆரம்ப புலனாய்வினை பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 08 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (vii) | XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.12 ஆம் பிரிவும் 22.1 ஆம் பிரிவும் | நியதிகளின் பிரகாரம் 11 சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை

---

| | |
|---|---|
| 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 06/2004(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு முறைப்பாட்டுக் கடிதத்தை வழங்கி ஓராண்டிற்குள் விசாரணை பூர்த்தி செய்வதற்கு ஒழுக்காற்று உத்தியோகத்தர் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு 02 சந்தர்ப்பங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை

---

| | |
|---|---|
| 5.6 வழிகாட்டி | ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு தொடர்பாக விதந்துரைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**12.7 செயலாற்றல்**

---

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் முன்னேற்றங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

வருமான சேகரிப்பு

--------------------------------

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட வரி வருமானம் மற்றும் உள்ளவாறான வரி வருமானம் முன்னைய ஆண்டின் வரி வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| வரி வகை | 2013 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | 2013 ஆம் ஆண்டு உள்ளவாறான வரி வருமானம் | 2013 ஆம் ஆண்டு உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | 2012 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | 2012 ஆம் ஆண்டு உள்ளவாறான வரி வருமானம் | 2012 ஆம் ஆண்டு உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **வெளிநாட்டு சந்தை அடிப்படையில் வரி** | | | | | | |
| இறக்குமதி வரி | 82,591 | 74,668 | 90.41 | 76,830 | 73,489 | 95.65 |
| ஏற்றுமதி வரி | 20 | 22 | 110.00 | 20 | 21 | 105.00 |
| துறைமுக மற்றும் விமான நிலைய வரி (இறக்குமதி) | 61,004 | 61,506 | 100.82 | 75,211 | 70,111 | 93.22 |
| செஸ் வரி – (இறக்குமதி) | 37,362 | 33,004 | 88.34 | 29,287 | 29,604 | 101.08 |
| பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் வரி | - | 1 | 100.00 | - | - | - |
| செஸ் வரி – (ஏற்றுமதி) | 3,120 | 3,087 | 98.94 | 3,120 | 3,137 | 100.54 |
| விசேட வியாபாரப் பொருட்கள் வரி | 50,106 | 46,705 | 93.21 | 36,608 | 33,666 | 91.96 |
| **உற்பத்தி வரி** | | | | | | |
| சிகரட் | 58,222 | 58,534 | 100.54 | 54,924 | 53,529 | 97.46 |
| மதுபானம் | - | 0.1 | | - | 39 | - |
| பெற்றோலியம் | 35,849 | 27,131 | 75.68 | 23,000 | 28,466 | 123.77 |
| மோட்டார் வாகனம் | 71,906 | 55,517 | 77.21 | 57,510 | 46,496 | 80.85 |
| ஏனையவை | 5,347 | 2,516 | 47.05 | 5,132 | 3,336 | 65.00 |
| **விற்பனை மற்றும் கட்டணங்கள்** | | | | | | |
| ஆடைகளுக்கான உள்நாட்டு செலவினக் கட்டணம் | 95 | 92 | 96.84 | 100 | 105 | 105.00 |
| கூட்டுத்தொகை | **405,622** | **362,783.1** | **89.78** | **361,742** | **341,999** | **96.32** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு எதிராக உள்ளவாறான வருமானம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 95 சதவீதமும் 2013 ஆம் ஆண்டின் போது 90 சதவீதமுமாக இருந்தது. அதன் பிரகாரம் அதன் செயலாற்றல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது.

(ஆ) துறைமுக மற்றும் விமான நிலைய வரி (இறக்குமதி) மற்றும் சிகெரட் உற்பத்தி வரி ஆகிய 02 வருமான குறியீடுகள் மூலம் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமான இலக்கின் கூட்டுத்தொகை ரூபா 50,000 மில்லியனால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வரி வருமானங்களின் உள்ளவாறான செயலாற்றல் முறையே 100.82 மற்றும் 100.54 சதவீதமாக இருந்தன. இறக்குமதி வரி, விசேட வியாபாரப் பொருட்கள் வரி மற்றும் மோட்டார் வாகன உற்பத்தி வரி ஆகிய பிரதான 3 வரி வருமானக் குறியீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வருமானம் தொடர்பாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் திரட்டிய பெறுமதி சேர் வரி வருமானமான ரூபா 217,687 மில்லியனில் 48.01 சதவீதம் அதாவது ரூபா 104,517 மில்லியன் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியாக ரூபா 22,396 மில்லியன் இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 12.8 வங்கிக் கணக்கினை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

### (அ) சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை

இலங்கை சுங்கத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சீராக்கம் தொடர்பான தகவல்கள்** | **காலப்பகுப்பாய்வு** | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **6 மாதங்களுக்கு மேற்பட்ட 1 ஆண்டிற்கு கீழான** | **1 ஆண்டிற்கு மேற்பட்ட 3 ஆண்டுகளிற்கு கீழான** | **3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வசூலிக்கப்படாத வைப்புக்கள் | - | 4,166,667 | - | 4,166,667 |
| கொடுப்பனவுக்கு வழங்கப்பட்டு ஆனால் மாற்றப்படாத காசோலைகள் | 18,303 | - | - | 18,303 |
| இனங்காணப்படாத வரவு | - | - | 4,166,667 | 4,166,667 |

மீதிகள்

(i) வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு சமரபபிக்கப்படாத 06 மாதங்களிற்கு மேலாக ரூபா 18,303 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டு ஆண்டுகளை விடப் பழமை வாய்ந்த ரூபா 4,166,167 தொகையான காசோலையொன்று இனங்காணப்படாத பெறுவனவாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக சரியான கணக்கீட்டு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 396(ஆ) பிரகாரம், கொடுப்பனவு செய்வதற்குள் ஒவ்வொரு காசோலையினதும் செல்லுபடிக்காலம் முடிவடைந்ததும் மீண்டும் அதனை செல்லுபடியாக்குவதற்காக அனுப்புமாறு பெறுவோனுக்கு எழுதி அறிவிக்க வேண்டிய போதிலும், காலாவதியான காசோலைகள் தொடர்பாக அவ்வாறான கட்டுப்பாட்டு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) காசோலைகளை கையளிக்கும் பதிவேடு காசோலை இலக்க வரிசைக்கு இணங்க பேணப்பட்டிருக்கவில்லை. ஆதலால் வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் தீர்வையாகாத காசோலைகளில் குறித்த தரப்பினரால் பொறுப்பேற்காத காசோலைகள் தொடர்பான தகவல்கள் சரியாக இனங்காண முடியாதிருந்தது.

(v) சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதிக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள், காசோலைகளை கையளிக்கும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) தொடரிலக்கத்தின் பிரகாரம் காசோலைகள் வழங்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு வழங்கப்படும் காசோலைகள், காசேட்டில் தொடராக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காசோலைகள் இலக்க ஒழுங்கில் தொடராக அறிக்கையிடாத சந்ர்ப்பங்கள் காணப்பட்டன.

(vii) நிதிப்பிரமாணம் 386(3) பிரகாரம் எழுதப்படும் ஒவ்வொரு காசோலையினதும் அடியிதழில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 12.9 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கணக்குகள் பிரிவின் சம்பள பொழிப்புக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரொருவரால் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அண்ணளவாக ரூா 26,150,604 தொகையொன்று

மோசடி செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான குறித்த பரிசோதனை நடவடிக்கைகள் குற்றத்தடுப்பு புலனாய்வுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக புலனாய்வின் போது சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாமை, சம்பளக் கொடுப்பனவின் சரியானதன்மை தொடர்பாக சான்றுதிப்படுத்தாமை மற்றும் அண்ணளவாக 05 ஆண்டு காலம் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான தரவுகளை கணனி மயப்படுத்தும் செயற்பாட்டில் ஒரு உத்தியோகத்தரே ஈடுபடுத்தப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. கணக்காய்விற்காக கோரப்பட்டிருந்த மேற்குறித்த மோசடிகளுக்குரிய நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், மோசடிக்குரிய பணத்தை மீளஅறவிடுவதற்காக எடுக்கப்பட்ட நடைமுறைகளும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு சுங்க உத்தியோகத்தர்கள் 2013 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வெளிநாடு சென்றிருந்த காலப்பகுதிக்காக ரூபா 15,558 ஆன மேலதிக நேரப் படிகளை பெற்றுக்கொண்டிருந்தனர்.

**12.10 இழப்பு மற்றும் சேதங்கள்**

இரண்டு வாகனங்கள் விபத்திற்குட்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட ரூபா 25,736 ஆன நட்டம் தொடர்பாக பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**12.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உரிய காலப்பகுதியில் மின்சாரப் பட்டியலை கொடுப்பனவு செய்யாத காரணத்தினால் ரூபா 999,323 ஆன தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நியமனத்தை வழங்குவதற்கு முன்னர் பயிற்சி பெற்ற சுங்க காப்பாளர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரியொருவர் நியமனத்தைப் பொறுப்பேற்காத காரணத்தினால் அந்த உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் செலவிடப்பட்ட ரூபா 43,684 ஆன செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது.

**12.12 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) களஞ்சிய கணனி முறைமை மற்றும் களஞ்சிய இருப்புப் பதிவேடுகள் என்பன நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது இருப்பு மட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், இருப்புக் கட்டுப்பாட்டிற்கான கணனி மென்பொருள் செயற்பாடற்றிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் முதல் 06 மாதங்களில் எழுபது உத்தியோகத்தர்களின் முப்பத்து நான்கு வெளிநாட்டு பிரயாணங்களுக்காக வருடாந்த மிகை மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்தும் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்தும் மொத்தம் ரூபா 23,661,267 செலவிடப்பட்டிருந்தது. அவ்வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு செலவிடப்பட்ட பணம் மற்றும் அதனால் அடைந்த நலன்கள் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வெளிநாட்டுப் பயிற்சிக்காக சமூகமளித்த சில உத்தியோகத்தர்கள் அப்பயிற்சி தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களும் வெளிநாடு சென்ற திகதி மற்றும் நேரம் மற்றும் இலங்கைக்கு வருகை தந்த திகதி மற்றும் நேரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டு பிரயாண கடவுச்சீட்டின் பிரதியொன்று கோவைக்கு உட்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(ஈ) விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம், சுங்க உத்தியோகத்தர்களுக்காக யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொண்ட வீடொன்றின் மாத வாடகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், குத்தகையாளருடன் மேற்கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 25,000 தொகை மற்றும் வருடாந்தம் 5 சதவீதப் படி வாடகை அதிகரிக்கும் வகையில் கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி 2011 பெப்ரவரி 01 ஆந் திகதியில் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் மாதாந்த வாடகையாக ரூபா 27,560 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை சுங்கத்திற்குரிய யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தின் தாபிக்கப்பட்டிருந்த காணி அளவை வரைபடத்தை தயாரிப்பதற்காக 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி ரூபா 111,542 தொகை யாழ்ப்பாண நில அளவை அத்தியட்சகருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணி அளவை செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஊ) புதிய சுங்க தலைமையகத்திற்கு தளபாடங்கள் வழங்கல் தொடர்பான ஒப்பந்தத்தைப் பரிசோதித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி கோரலின் இறுதி திகதி 2011 மே 09 ஆந் திகதியாக இருந்த போதிலும், அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 வழிகாட்டிகளுக்கு முரணாக ஒப்பந்தக்காரொருவரை தெரிவுசெய்தல் 15 மாதங்களின் பிறகு அதாவது 2012 செப்தெம்பர் 12 அந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்களால் கொள்வனவு செயற்பாட்டின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்கு ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வியின் தகுதிக் காலம் 120 நாட்களாக இருந்த போதிலும், வழங்குனர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக நீண்டகாலம் எடுத்திருந்தமையால் 05 சந்தர்ப்பங்களின் போது கேள்வியின் தகுதிக் காலத்தை நீடிப்பதற்கு நேர்ந்திருந்தது. 04 நிறுவனங்கள் செல்லுபடிக் காலத்தை நீடிக்காமல் ஒப்பந்தத்திலிருந்து விலகியிருந்தன. இதன்

காரணமாக ஒவ்வொரு தளபாட பொருட்களிற்கும் திறந்த போட்டித்தன்மை இல்லாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) கச்சிதமான களஞ்சிய வசதிகள் காப்பகம் மற்றும் பெட்டக ஒப்பந்தத்திற்காக (Storage Facilities Compact Storage and Lockers) கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனி அனுமதிக்கப்பட்ட விதந்துரைப்புக்களுடன் இணங்காமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே அக்கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) அரச கூட்டுத்தாபனமொன்றின் அறிக்கையொன்றின் பிரகாரம், ஒப்பந்தத்திற்காக தொழில்நுட்ப மற்றும் நிதி தகைமைகள் பூர்த்தி செய்திருந்த தனியார் கம்பனியொன்றின் கேள்வியின் தகுதிக்காலம் ஆரம்ப கூறுவிலை ஆவணங்களுக்கான 120 நாட்களுக்கு பின்னரும் 3 சந்தர்ப்பங்கள் வரை தகுதிக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதுவரை தகைமைகளைப் பெற்றிருந்த ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யாமையால் அக்கம்பனி கொள்வனவிலிருந்து விலகியதன் காரணமாக அதற்குப் பின்னர் தகைமை பெற்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியதன் அடிப்படையில் ரூபா 44,462,794 தொகையான மேலதிக கிரயமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

(v) தளபாடங்களை வழங்குவதற்கான ஒப்பந்தத்திற்குரிய கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக வழங்குநருக்கு இருக்க வேண்டிய பின்தகைமை தொடர்பான பத்திரிகை அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. போதியளவில் தகைமைகளை கொண்டிராத நிறுவனங்கள் சமர்ப்பித்த கூறுவிலைகள் நிராகரிக்கப்படாமல் மதிப்பிடுவதற்கும் அந்நிறுவனங்களுக்கு ஒப்பந்தத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(vi) கொள்வனவு நடைமுறையின் இறுதி மதிப்பீட்டின் பிரகாரம், நிறைவேற்று பதவியணியினருக்கான தளபாடங்கள் உள்நாட்டு உற்பத்தியாக இருக்க வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வழங்கப்பட்டிருந்த தளபாடங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) சுங்கத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு பொருத்தமான வழங்குனர் ஒருவரைத் தெரிவுசெய்யும் கொள்வனவு நடைமுறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4 வழிகாட்டியின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக விசேட அறிவுடன்கூடிய உத்தியோகத்தரொருவரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொள்வனவு நிபந்தனைகளின் பிரகாரம், வழங்குனருக்கு இலவசமாக வழங்கப்படும் சிற்றுண்டிச்சாலை வளவு, தளபாடங்கள், சமையலறை

உபகரணங்கள், பீங்கான் கோப்பை, மின்சக்தி மற்றும் நீர் வழங்கல் போன்ற வசதிகள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு பிரதான உணவு வேலைகளின் மதிப்பிடப்பட்ட விலைகள் தயாரிக்கப்பட்டு அவ்விலையை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 12.13 மனிதவள முகாமைத்துவம்

#### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 343 | 304 | 39 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 1,876 | 1,218 | 658 |
| (இ) | இரண்டாம் நிலை | 237 | 237 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 488 | 311 | 177 |
| | மொத்தம் | 2,944 | 2,070 | 874 |

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை சுங்கத்தின் ஊழியர் வெற்றிடங்கள் 874 ஆக இருந்தது.

## 13. தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம்

### 13.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மதுவரித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்குகள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 மார்ச் 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம்

என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 13.2 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 13.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மதுவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஏ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 13.4 தொடக்கம் 13.11 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் தகவல்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| மோட்டார் வாகனப் பட்டியல் | நிதிப் பிரமாணம் 1647(உ) |
| கணனி மற்றும் உப பாகங்கள் வன்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| வருமானப் பதிவேடு / வருமான அறிக்கை | நிதிப் பிரமாணம் 175(1)(ஆ) |

**(ஆ) கணக்காய்விற்கு சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம், ரூபா 176,710 கூட்டுத்தொகையான 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறுப்புப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாத காரணமாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 18,129,743 ஆன பொறுப்புக்கள் கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மதுவரித் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவொன்றுக்கு 2015 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களப் பதிவேடுகளின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 109,669,060 தொகையான கட்டுநிதி திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டியிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் அனுப்பப்பட்டிருந்த ரூபா 85,176,353 தொகை திறைசேரி பதிவேடுகளில் 09 மாத தாமதத்தின் பின்னரே அதாவது 2014 செப்தெம்பர் மாதத்திலே சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) முறையான அங்கீகாரமொன்றில்லாமல் ரூபா 7,500 ஆன எல்லையை விஞ்சி ரூபா 50,000 மற்றும் ரூபா 60,000 ஆன சில்லறைக் காசு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/000/0015/0128/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 80,485,775 ஆக இருந்ததுடன், அவ்வைப்பு மீதிகள் தொடர்பாக தனிப்பட்ட மீதி பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10.02.04.01 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கின் பிரகாரம், ரூபா 1,527 மில்லியன் தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானங்கள் 06 மாதங்கள் முதல் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட கால வீச்சிலிருந்து காணப்பட்டு வந்த போதிலும், அந்நிலுவை வருமானத்தை

அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ii) மதுசாரத்தை உள்நாட்டில் கொள்வனவு செய்யும் போது அல்லது இறக்குமதி செய்யும் போது அறவிடப்படுகின்ற நிறுத்தி வைத்தல் வரித்தொகை, ஸ்பிரிட்டைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானத்திற்காக மதுவரி செலுத்தும் போது ஈடுசெய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உற்பத்திக்கு பயன்படுத்தாத எஞ்சிய ஸ்பிரிட் இருப்பிற்கு ஈடுசெய்வதற்கு இடமளிக்கப்படும் ரூபா 762,458,068 ஆன நிறுத்தி வைத்தல் வரித்தொகையை அடுத்துவரும் ஆண்டின் போது மதுவரி கொடுப்பனவின் போது ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி 10.02.04.01 இன் வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) புகையிலை வரியின் (10.02.06.00) கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 2,007,948 ஆன மதுவரி வருமானத்தின் (10.02.04.01) கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(எ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இல. 24801 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 2,933,571 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

## 13.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் அனைத்து பிரிவுகளையும் மேவும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 13.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 13.5.1 பயனற்ற சொத்துக்கள்

2010 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 331,272 தொகையான 15 நிறைவேற்று கதிரைகள், 50 கைப்பிடியுடனான கதிரைகள், 02 அலுமாரிகள் மற்றும் 02 மேசைகள் என்பன 2013 ஆம் ஆண்டில் களுத்துறை உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை திறந்துவைக்கும் வரையில் அக்கட்டிடத்தினுள்ளே பயனற்றுக் காணப்பட்டன.

### 13.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/ மெய்மையாய்வு சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அந்த அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் அனைத்து பொருட்களையும் முழுமையாக மேவும் வகையில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள் மற்றும் குறைவுகள் தொடர்பாக திணைக்களம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 13.6 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (i) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| • 1912 இன் 08 ஆம் இலக்க மதுவரிக் கட்டளைச் சட்டம் | மதுவரியை உரிய காலத்தில் செலுத்தாமை காரணமாக சாட்டுதல் செய்யப்படுகின்ற தாமதக் கட்டணம், மதுவரி வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 14,018,503 ஆன தாமதக் கட்டணங்கள் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் 20.03.02.99 (நானாவித) வருமான குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| • 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி வெகுமதி நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| • நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) | வருமான மதிப்பீடுகளை மாற்றம் செய்வதற்கு நேர்ந்தால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதற்கு காரணத்துடன் அது தொடர்பாக அரச |

நிதிக்கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 110(2) — கணக்கீட்டு உத்தியோகத்தர் நிதியாண்டின் போது ஏற்பட்ட அனைத்து நட்டங்கள் தொடர்பாக கூற்றொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், நட்டத்தையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 272(1) — வெகுமதி நிதியத்திலிருந்து செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச்சீட்டுக்கள் வேறாக கோவை செய்யப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 316 — அனுமதிப்பத்திரங்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், காசுப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் நிதிப் பெறுமானமுள்ள ஏனைய படிவங்கள் என்பன பாதுகாப்பு பெட்டியொன்றில் வைக்கப்பட வேண்டிய போதிலும், இந்த பதிவேடுகள் பதிவேட்டறையில் பாதுகாப்பற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

- நிதிப் பிரமாணம் 342 — காசுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களை பெற்றுக்கொண்ட திணைக்களம் அப்புத்தக அடியிதழ்களை பாதுகாப்பாக வைக்கவும் அவற்றை முறையாக பயன்படுத்துவது தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அவ்வாறான பொறுப்புகளுடன் அத்தகைய அடியிதழ்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 371(2) — பதவிநிலைத்தரமல்லாத உத்தியோகத்தரொரு வருக்கு ஆறு சந்தர்ப்பங்களில் ரூபா 56,980 தொகை செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.
  4 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட செயல் நிமித்த கட்டுநிதி நோக்கம் நிறைவேறிய பின்னர் 02 வாரங்கள் முதல் 2½ மாதங்களுக்கு இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் அச் செயல் நிமித்த கட்டுநிதி தீர்க்கப்பட்ட 4 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) — ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த கட்டுநிதியின் பெறுமதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களில் ரூபா 111,298 தொகையான செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

- நிதிப் பிரமாணம் 447(7) — திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) செலவினப் பேரேட்டின் கணக்குகள் ஒவ்வொரு மாதத்தின் இறுதி திகதியில் சமம்படுத்தப்பட வேண்டிய போதிலும், 04 செலவின விடயங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 756 — பொருள் மெய்மையாய்வு சபை திசெம்பர் 15 ஆந் திகதி வரையில் அல்லது அதற்கு அண்மித்த திகதியிலோ நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 1646 — ஒவ்வொரு மாதத்திற்கான ஓட்டப் பதிவேடுகள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதி முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு உள்ளன.

(i) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் அதற்குரிய திருத்தங்களின் பிரகாரம், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கிடைக்கும் வழங்கல் மற்றும் சேவைகளின் பெறுமதி காலாண்டிற்கு ரூபா 03 மில்லியன் அல்லது ஓராண்டிற்கு 12 மில்லியன் அல்லது அதற்கு கூடியதாக இருந்தால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு கண்டிப்பாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 பெப்ரவரி 12 ஆந் திகதிய 912 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம், அறவிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வரி செலுத்தாத அனுமதிப்பத்திரதாரருக்கு அவ்வரிகளுக்கு மேலதிகமாக கட்டணமொன்றாக அவ்வரியின் மீது மாதமொன்றுக்கு மூன்று சதவீதப் படி மிகை அறவீடொன்று செலுத்துவதற்கு உட்பட்ட போதிலும், திணைக்களத்தினால் தாமதமான தினத்தின் அடிப்படையில் மிகை அறவீடொன்று அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மதுவரி அறிவித்தலின் பிரகாரம் மிகை அறவீடு கணிப்பிடப்பட வேண்டிய முறை மற்றும் திணைக்களம் மிகை அறவீட்டை அறவிடும் முறைக்கிடையே வேறுபாடொன்று காணப்பட்டது.

**13.7 செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) மதுவரி அனுமதிப்பத்திர கோவைகள் முறையாக பராமரிக்காமை**

ஒவ்வொரு மதுவரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக அது செயற்படுத்த திகதியிலிருந்து சகல தகவல்களையும் கோவையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சில கோவைகளில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிலைய மாற்றம்
(ii) அனுமதிப்பத்திர உரிமையாளர் மாற்றம்
(iii) பிணை வைப்புச் செய்வதற்குரிய ஆவணங்கள்
(iv) மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் குற்றங்களுக்குரிய தகவல்கள்

(ஆ) **மதுவரி அனுமதிப்பத்திர முறைமையில் போதியளவு தகவல் இன்மை**

மதுவரி அனுமதிப்பத்திர தகவல் முறைமையொன்றில் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்படவில்லை.

(i) அனுமதிப்பத்திர வளவின் ஆரம்பிக்கப்பட்ட திகதி
(ii) செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புப் பணம்
(iii) அனுமதிப்பத்திர வளவு மாற்றங்களுக்குரிய தகவல்கள்
(iv) அனுமதிப்பத்திரதாரர் மாற்றங்களுககுரிய தகவல்கள்
(v) அனுமதிப்பத்திரதாரர் அல்லது அனுமதிப்பத்திர வளவு மாற்றங்களின் போது செலுத்தப்பட்டிருந்த தொகை

**13.8 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடு**

வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைக்கின்ற பணத்தை இனங்கண்டு உரிய வருமானக் குறியீடுகளில் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 43,989,776 தொகை இனங்காணப்படாத வைப்பாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**13.9 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

களுத்துறை மதுவரி அலுவலகத்தின் 2014 பெப்ரவரி 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட சிறு காசுக் கட்டுநிதி பரிசோதனையின் போது ரூபா 10,572 ஆன காசு குறைவு கண்டறியப்பட்டது.

**13.10 இழப்பு மற்றும் சேதங்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக இழப்பினை மதிப்பிட்டு ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் ரூபா 93,843 ஆல் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**13.11 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதுவரி அறிவித்தல் 937 இன் பிரகாரம் மதுபான ஏற்றுமதியாளர்களுக்கு 30 நாட்களுக்குள் ஆவணங்கள் சமர்ப்பித்தவுடன் வரிச் சலுகை வழங்கப்பட

வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது 30 நாட்கள் கடந்ததன் பின்னரும் 03 உற்பத்தி நிறுவனங்களுக்குரிய ரூபா 11,728,950 ஆன வரிச் சலுகை வழங்குவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களுத்துறை மதுவரி அலுவலகத்தின் தொழில்நுட்ப குற்ற அறிக்கை பதிவேடுகளின் பிரகாரம் 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 54 தீர்வுகாணப்படாத தொழில்நுட்ப குற்றங்கள் காணப்பட்டன.

## 13.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 37 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 379 | 308 | 71 |
| (iii) | இரண்டாம் நிலை | 856 | 575 | 281 |
| (iv) | ஆரம்ப நிலை | 129 | 126 | 03 |
| | மொத்தம் | 1,421 | 1,046 | 375 |

திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 375 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) விடுமுறை பதிவேடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிராந்திய அலுவலகங்களில் சேவை புரியும் உத்தியோகத்தர்களின் வருகைப் பதிவேடு பிரதான அலுவலகத்திற்கு சமர்ாப்பித்தல் மற்றும் விடுமுறை தொடர்பாக மாதாந்த அறிக்கை சமர்ப்பித்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. அது தொடர்பாக திணைக்களத்தினால் முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உத்தியோகத்தரொருவர் ஒரு திணைக்களத்திலிருந்து இன்னுமொரு திணைக்களத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் போது தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.9 பிரிவின் பிரகாரம், அவ்வாறு இடமாற்றப்பட்ட திணைக்களத்தின் தலைவரால் புதிய திணைக்களத்தின் தலைவருக்கு உத்தியோகதத்ர்களின் விடுமுறை தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின்

அத்தகவல்களை விடுமுறை பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 14. தலைப்பு 249 – திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்

### 14.1 கணக்காய்வின் நோக்கெல்லை

திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 23 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 14.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கூற்றுக்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 14.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 14.4 மற்றும் 14.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

-------------------------

06 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 198,464,300,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 158,086,618,997 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 40,377,681,003 தொகையான சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டின் 16 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்கு**

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் 13 வருமானக் குறியீடுகளுக்குரிய திருத்திய மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கிடையே வேறுபாடு 1 சதவீதத்திலிருந்து 186 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட 06 வருமான கணக்குகளின் பிரகாரம் ரூபா 7,785,283,388 ஆன வருமானம் நிலுவையாக இருந்தது. அந்நிலுவை வருமானம் 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 20.02.01.99 ஆம் வருமானக் குறியீட்டின் ஏனைய நீண்டகால குத்தகை கணக்கிற்குரிய மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 1,492,058 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தவறான செலவு வைத்தல்களை சரிசெய்வதற்கு 2014 செப்தெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 20.02.02.01 ஆம் வருமானக் குறியீட்டின் வட்டி – கடன் வழங்கல் மீதான வட்டி தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அரச கூட்டுத்தாபனத்தின் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,987,890 தொகையான நிலுவைக் கடன் வட்டி அறவிடுவதற்கு இயலாததாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(v) 20.02.02.01 ஆம் வருமானக் குறியீட்டின் வட்டி – கடன் வழங்கல் மீதான வட்டி தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சங்கமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,814,034 தொகையான நிலுவை வட்டியை அறவிடுவதில் முக்கியமற்ற நிலைமை அவதானிக்கப்பட்டது.

(vi) 20.06.04.00 ஆம் வருமானக் குறியீட்டின் கடன் அறவீடு தொடர்பில் அரச கூட்டுத்தாபனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 773,340,000 ஆன நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்காததாக கணக்காய்வில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(vii) அரசாங்கம், சங்கம், கூட்டுத்தாபனம் மற்றும் கம்பனி என்பவற்றிற்கு ரூபா 147,714,479 தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை ஒன்றிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இல. 24901 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 149,251 ஆக இருந்தது.

## 14.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/ மெய்மையாய்வு சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசினால் முதலீடு செய்யப்பட்டிருந்த பங்கு மூலதனம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான பங்குச் சான்றிதழ்களின் பாதுகாப்பு, உள்ளதன்மை மற்றும் தற்போதைய பெறுமதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதுகாப்பறையில் உள்ள கம்பனி 218 பங்குச் சான்றிதழ்களில் 21 சான்றிதழ்கள் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(iii) பௌதீக மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கம்பனி பங்குச் சான்றிதழ்கள் மற்றும் பெயரளவுப் பெறுமதி, பங்குகளின் எண்ணிக்கை மற்றும் பெயரளவுப் பெறுமதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குளின் அளவு மற்றும் பெயரளவுப் பெறுமதி என்பவற்றிற்கிடையே இணக்கமின்மை வெளிப்படுத்தப்பட்டது.

(iv) குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 53 கம்பனிகளில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் அளவுகளின் விபரங்கள் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டு மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 14.5 செயலாற்றல்

கட்டுநிதிக் கணக்கை ஆரம்பிப்பதற்காக அதிகாரமளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான கடமையாக இருந்த போதிலும், 1997 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை திணைக்களமொன்றிற்கும், 02 அமைச்சுக்களுக்கும்

ஆணைக்குழுவொன்றிற்கும் வழங்கப்பட்ட ரூபா 1,945,933,340 தொகையான 10 கட்டுநிதி மீதிகளைத் தீர்வு செய்வதற்கு 01 ஆண்டு முதல் 16 வரையான வீச்சிலான காலம் தாமதமாகியிருந்தது.

## 14.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 15 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 82 | 70 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 18 | - |
| | மொத்தம் | 122 | 104 | 18 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியில் நிலவிய வெற்றிடங்கள் 18 ஆக காணப்பட்டதுடன், இவ்வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 06 பதவிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அத்திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 123 ஆக காண்பிக்கப்பட்டமையால் 01 பதவி வித்தியாசமாக இருந்தது.

(இ) சம்பந்தப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அத்திகதியில் பின்வரும் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விட 09 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டதுடன், பதவியணி தேவைப்பாட்டை கருதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலங்கை கணக்காளர் சேவை I | 05 | 08 | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 05 | 09 | 04 |
| அலுவலக உதவியாளர் | 01 | 03 | 02 |
| மொத்தம் | 11 | 20 | 09 |

## 15. தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்

### 15.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 15.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி அரச கணக்குகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 15.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான விடய இல. 25001 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு மரணித்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 301,936 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**(ஆ) வணிகமற்ற முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இல. 25003 இன் நானாவித முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் அவதனிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நெல் கொள்வனவு செய்வதற்கு 13 மாவட்ட செயலகங்கள், சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் திணைக்கள மொன்றிற்கும் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை 15 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 468,267,162 ஆக இருந்ததுடன், அம் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதி ரூபா 454,991,711 ஆன மீதியை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) அனுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நெல் கொள்வனவிற்கான முற்பணத்திலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,023,818 தொகை அச்சங்கம் கலைக்கப்பட்டதன் பின்னர் தீர்க்கப்படுவதாக அனுராதபுரம் மாவட்ட செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விவசாயக் கம்பனியொன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 480,000 தொகையான முற்பணம் மற்றும் கூட்டுறவுச் கம்பனியொன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,264,300 தொகையை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அம் முற்பணங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு சதொச நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,652,916 தொகையை பதிவழிப்பதற்கு 2013 திசெம்பர 27 ஆந் திகதிய எஸ்ஏ/கணக்கு/4/7000/422 என்ற கடிதத்தினால் திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து நெல் கொள்வனவு செய்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் அரிசியாக்கப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட விலையினை விடக் குறைவாக விற்பனை செய்யப்பட்டிருந்தமையினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 8,757,384 ஆக இருந்தது. இந்த நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மகாவலி அமைச்சினால் நெல் கொள்வனவிற்காக பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையை ரூபா 3,605,525 செலுத்தியதாக 2012 மே 25 ஆந் திகதிய எஸ்ஏ/கணக்கு/4/7000/431 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் நீர்ப்பாசன

மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் தலைமைக் கணக்காளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அம்மீதி சரியானதென அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இம்முற்பண செயற்பாட்டின் கீழ் மகாவலி அமைச்சிற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 3,605,525 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணம் 106 இன் பிரகாரம் காணாமல் போன காசு, முத்திரை மற்றும் பற்றுச்சீட்டுக்கள் போன்றவற்றிற்காக அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,096,624 தொகையான முற்பணங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 2,442,080 தொகை நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பதிவழிப்பதற்கு கட்டளையைப் பெற்றுக்கொண்டு அதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 08 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 34 | 29 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 08 | 07 |
| | மொத்தம் | 69 | 47 | 22 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 16. தலைப்பு 251 – மதிப்பீட்டுத் திணைக்களம்

### 16.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 16.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 16.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 16.4 தொடக்கம் 16.10 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பொது வைப்பு ரூபா 14,283 தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 391,348,397 தொகையான வருமான நிலுவை காணப்பட்டதுடன் அந்நிலுவை வருமானம் 1 முதல் 06 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சைக் கொண்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 128(2)(ஈ) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால், அவ்வருமானத்தின் பகுதி வேறு அலுவலகங்கள் மூலம் சேகரிக்கப்படுமாயின் அவ் அலுவலகங்களிலிருந்து அறிக்கை பெற்றுக்கொண்டு அத்தகவல்கள் அரச வருமானக் கணக்குகளிலும் அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், சில மாகாண அலுவலகங்களில் மாத்திரம் சில மாதங்களுக்கான அறிக்கை கோரப்பட்டிருந்தது. அனைத்து மாகாண அலுவலகங்களிலிருந்தும் வருமான அறிக்கை பெற்றுக்கொண்டு நிதிப்பிரமாணம் 128(2)(எ) பிரகாரம் திறைசேரியின் கணக்குகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடய இலக்கம் 25101 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 706,378 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மொத்த கடன்மீதி பெறுமதியில் 91 சதவீதம் அதாவது ரூபா 639,852 தொகை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மீதியாக இருந்ததுடன், மொத்த நிலுவை கடன் மீதியில் 30 சதவீதம் அதாவது ரூபா 214,669 தொகை மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாக இருந்தது.

(iii) கடன்வழங்கல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட வேண்டிய சீ.சீ.10 பதிவேடு மற்றும் இடமாற்றம் பெற்று வந்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களப் புத்தகங்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 16.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 16.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2014 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 16.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 16.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் 2014 செப்தெம்பர் 29 ஆந் திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 இன் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்து அசைவு அறிக்கையின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், இயந்திராதிகள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்குரிய பெறுமதி முறையே ரூபா 27,255,402, ரூபா 16,711,508 மற்றும் ரூபா 24,557,244 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,972,347 ஆக இருந்ததுடன், இயந்திரம் மற்றும் பொறிகள் ரூபா 475,002 ஆக இருந்தது, எவ்வாறாயினும் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ஆண்டினுள் கொள்வனவாக ரூபா 306,242 பெறுமதியான காற்றுச்சீராக்கி இயந்திரம் மற்றும் ரூபா 189,280 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரம் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 115,000,000 ஆக நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்து அசைவு (குறிப்பு இலக்கம் 1) அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திற்குரிய முறையே 0.071 ஹெக்டெயர் மற்றும் 70 பேர்ச் அளவிலான காணியில் கதிர்காமம் மற்றும் கண்டி சுற்றுலா விடுதிகள் இரண்டும் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்குரிய கிரயம் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சொத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேடு முறையாக பேணப்படாத காரணத்தினால் 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 245,200,000 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 16.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 110 | இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திணைக்களச் சுற்றறிக்கை | |
| 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 434 ஆம் இலக்க வருமானம் சேகரித்தல் தொடர்பான சுற்றறிக்கை | அரச நிதி உதவியில் இயங்கும் நிறுவனங்களிலிருந்து மதிப்பீட்டுக் கட்டணம் அறவிடக் கூடாத போதிலும், அதற்கு முரணாக மதிப்பீட்டுக் கட்டணமாக ரூபா 4,452,558 தொகை மேற்குறிப்பிட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது |

## 16.7 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களின் போது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க இலக்குகள் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | **விபரம்** | **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் (அலகுகள்)** | **2013 இன் உள்ளபடியான செயலாற்றல் (அலகுகள்)** | **இலக்குகளின் அடைவின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு தொடர்பான நிலைமை அறிக்கை | 13,818 | 5,772 | 42 |
| (ஆ) | காணிகள் - நானாவிதம் | 58,653 | 26,269 | 45 |
| (இ) | தனியார் ஆதனங்களின் வாடகை மதிப்பீடு | 6,851 | 6,247 | 91 |
| (ஈ) | கட்டிட வீதவரி மதிப்பீடு | 1,676 | 1,317 | 79 |
| (உ) | ஆட்சேபனைகளின் மீள்மதிப்பீடு | 10,665 | 7,646 | 72 |

**16.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்**

**சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **சீராக்கம் தொடர்பான தகவல்கள்** | **காலப்பகுப்பாய்வு** | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | | **06 மாதங்களுக்கு மேற்பட்ட 01 ஆண்டிற்கு கீழான** | **01 ஆண்டிற்கு மேற்பட்ட 03 ஆண்டுகளிற்கு கீழான** | **03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட** | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | தீர்வு செய்யப்படாத வைப்புக்கள் | 12,075 | 262,900 | 15,415 | 290,390 |
| (ஆ) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 81,694 | - | - | 81,694 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இனங்காணப்படாத வரவுகள் | 199,334 | 12,120 | - | 211,454 |
| (ஈ) | போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாத மறுக்கப்பபட்ட காசோலைகள் | 12,075 | - | - | 12,075 |

## 16.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**மனித வள அபிவிருத்தி – வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு கற்கைநெறி (ஆர்ஜசீஎஸ்)**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறித்த பட்டப்படிப்பு கற்கைநெறியைப் பின்பற்றுவதற்காக பத்து விண்ணப்பதாரிகள் சமூகமளித்திருந்ததுடன், 1998 பெப்ரவரி 21 ஆந் திகதிய 05/1998 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் கற்கைநெறி ஆரம்பத்தின் போது உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒன்பது உத்தியோகத்தர்கள் தாமதமாக மேற்கொண்டிருந்ததுடன், ஒரு உத்தியோகத்தர் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த கற்கைநெறிகளைப் பின்பற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தொடர்ந்தும் கற்கைநெறிக்கு சமூகமளிப்பதில்லையென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது வரையில் உத்தியோகத்தருக்காக திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 4,170 ஸ்ரேலிங் பவுண்கள் பயனற்ற செலவினமாக இருந்தது.

(இ) 2013 செப்தம்பர் 13 ஆந் திகதி பிரிவுத் தலைவர்களின் கூட்டத்தின் போது மேற்குறித்த கற்கைநெறியில் சித்தியடையாத இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் திணைக்களம் மீண்டுமொரு முறை நிதிஏற்பாடு வழங்குவதாகவும் இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தியடையாவிட்டால் அக்கட்டணத்தை குறித்த உத்தியோகத்தரால் தனிப்பட்ட ரீதியில் செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தியடையாத மூன்று உத்தியோகத்தர்களுக்கு 1,735 ஸ்ரேலிங் பவுண்கள் மீண்டும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 16.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரின் நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 86 | 53 | 33 |
| (ii) | மூன்றாம் நிலை | 362 | 353 | 09 |
| (iii) | இரண்டாம் நிலை | 144 | 106 | 38 |
| (iv) | ஆரம்ப நிலை | 90 | 80 | 10 |
| (v) | ஏனையவை(அமைய அடிப்படை) | - | 02 | - |
| | மொத்தம் | 682 | 594 | 90 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 90 ஆக இருந்ததுடன் அதில் 33 சிரேஷ்ட நிலையில் உள்ள வெற்றிடங்கள் உள்ளடங்குகின்றது.

## 17. தலைப்பு 252 – தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 17.4 தொடக்கம் 17.10 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) பாதீட்டு விலகல்கள்**

07 செலவின விடயங்களுக்காக ரூபா 91,300,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 80,818,379 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் ரூபா 10,481,621 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 6 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் 6000/0000/00/0015/0132/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 66,254,054 ஆக இருந்தது. அம்மீதியில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 மே 05 ஆந் திகதி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது வைப்புக் கணக்கு கூற்றின் பிரகாரம் 2013 சனவரி 01 இல் உள்ளவாறு கணக்கின் மீதி ரூபா 23,018,245 ஆக இருந்த போதிலும், ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது வைப்புக் கணக்கில் குறிப்பிடப்பட்ட மீதி ரூபா 39,803,307 ஆக இருந்தமையால் அம்மீதிகள் இரண்டிற்கு இடையே வேறுபாடு ரூபா 16,785,061 ஆக இருந்ததுடன், அவ்வேறுபாட்டிற்கு காரணம் தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது வைப்புக் கணக்கு மீதியில் ரூபா 6,264,164 தொகையான இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான 25201 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிணக்கக்

கூற்றின் படி அத்திகதியில் அறவிடுவதற்கு நிலுவையாக உள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,309,500 ஆக இருந்தது.

## 17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 17.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் 2013 ஆம் ஆண்டின் போது 03 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைககள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 17.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்ப்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றுநிருபத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களும் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது 03 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 17.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

நிதிப் பிரமாணம் 715(2) மற்றும் (3) இன் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பாளர்களினதும் களஞ்சிய உத்தியோகத்தர்களினதும் கடமைகள் புறம்பாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்திற்குரிய பிரதான களஞ்சியத்தின் களஞ்சியப் பொறுப்பாளரும் களஞ்சிய உத்தியோகத்தரும் மேற்குறித்த நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட கடமைகளை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை.

## 17.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கீழ்குறிப்பிடப்படும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே காட்டப்பட்டுள்ள இயந்திரங்கள் பொறிகள் செயற்பாடற்றோ அல்லது குறைவான பயன்பாட்டுடனோ காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| இயந்திரங்கள் பொறிகள் | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்ற அல்லது குறைவான பயன்பாட்டு காலம் |
|---|---|---|
| மத்திய காற்றுச்சீராக்கி இயந்திரம் | 01 | 2012 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை |
| புள்ளிவிபரவியல் தரவு நிழற்பிரதியெடுக்கும் இயந்திரங்கள் | 02 | 10 ஆண்டுகள் |
| தந்தி செய்தி தயாரிக்கும் இயந்திரம் | 01 | 20 ஆண்டுகள் |
| புத்தகங்கள் கட்டும் இயந்திரம் | 01 | 10 ஆண்டுகள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/பொருள் மெய்மையாய்வு/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அந்த அறிக்கையை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**17.7 செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மாவட்ட மட்டத்தில் சனத்தொகை மற்றும் குடிசன மதிப்பீடு தொடர்பான 2011 இன் இறுதி அறிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அச்செயற்பாடு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நெல் அறுவடையை மதிப்பீடு செய்தல் கணிப்பீடு 2012/2013 பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் என்பவற்றிற்குரிய அறிக்கைகளின் வெளியீடு இவ்வாண்டின் செயற்பாடொன்றாக இருந்த போதிலும், 2012/2013 பெரும்போகத்திற்குரிய மாவட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்ததுடன், 2013 இன் சிறுபோகத்தின் இறுதி அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் என்பவற்றின் அலகு உற்பத்தியின் கிரயம் கணக்கிடல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளிக்கள ஆய்வு மூலம் தகவல் சேகரித்தல் மற்றும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல் சேகரித்தல் என்பன மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் வருடாந்த கைத்தொழில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டில் கைத்தொழில் புள்ளிவிபரங்களை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் கணிப்பீட்டிற்குரிய தரவுகளை திருத்துதல், நிரற்படுத்தல், கணனியில் உள்ளடக்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆண்டிற்குரிய கைத்தொழில் கணிப்பீட்டிற்கான வெளிக்கள பரிசோதனைகள் பூர்த்தி செய்வது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வினாக்கொத்து மற்றும் ஏனைய பதிவேடுகள் உரிய நிறுவனங்களுக்கு தபாலில் அனுப்பும் நடவடிக்கைகள் மாத்திரம் 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் கைத்தொழில் பிரிவின் உற்பத்திகளின் அதிகரிப்பு வீதம் கணக்கிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தினால் தொழில்நுட்ப கணிப்பீடு 1990 ஆம் ஆண்டிலிருந்து காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இவ்வாண்டின் போது காலாண்டு ரீதியில் அறிக்கை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இறுதி மூன்று காலாண்டினது கணிப்பீட்டு நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2012 ஆம் ஆண்டின் இறுதி மூன்று காலாண்டுகளினது அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012/13 ஆம் ஆண்டின் பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் என்பவற்றிற்குரிய புள்ளிவிபர அறிக்கைகள் வெளியிடல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இவ்வாண்டின் போது 2012/13 பெரும் போகத்தின் இறுதி அறிக்கை மாத்திரம் தயாரித்து வெளிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் சிறுபோகத்தின் அறிக்கைக்குரிய தரவுகள் எதிர்வுகூறல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஏ) இலங்கையின் தேசிய கணக்குகள் தயாரித்தலின் பொறுப்பு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டொன்று அல்லது காலாண்டு முடிவுற்றவுடனேயே அக்காலப்பகுதிக்குரிய தேசிய கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் ஆண்டு முடிவடைந்து 75 நாட்களுக்குள் வெளியிடுவது திணைக்களத்தின் தேசிய கணக்குப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் தேசிய கணக்குகள் தயாரித்தல் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உற்பத்தி விலை சுட்டி மூலம் உற்பத்தி விலை மாற்றங்களின் சராசரி அளவீடு மேற்கொள்ளப்படுகின்றதுடன், மீளாய்வாண்டின் போது பொருளாதார நடவடிக்கைகள் நிறுவனத்திற்காக நிறையளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலக்கை நோக்கி அடையப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உள்நாட்டு மட்டத்தில் சில்லறை மற்றும் உற்பத்தி விலை விபரங்களுக்குரிய தரவு முறைமையொன்று பேணுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் கொழும்பு மாவட்டத்தின் வாராந்த சில்லறை விலை விபரங்களின் விலகல் மாத்திரம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

(ஓ) திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவு மூலம் கணனி மற்றும் புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முறையே 80 உத்தியோகத்தர்களுக்கும் 120 உத்தியோகத்தர்களுக்கும் வெளி மாவட்டங்களில் 40 உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கு திணைக்களத்தின் பயிற்சி பிரிவினால் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், செயலாற்றல் அறிக்கையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், எந்தளவு உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர் என்பது தொடர்பாக குறிப்பிப்பட்டிருக்கவில்லை.

## 17.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் வாகனத் திருத்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 37 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 616,443 ஆன வாகனத் திருத்தங்கள் பின்வரும் விடயங்கள் காரணமாக திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வெளிப்படையாக மேற்காள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த கராஜ் பிரதேசம் மற்றும் வாகனத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் திகதியில் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பிரதேசம் என்பவற்றிற்கிடையே கருத்திற்கொள்ளக்கூடிய இணக்கமின்மையொன்று இருந்தது.

(ஆ) திருத்தங்களுக்குரிய முறையான அங்கீகாரங்கள் காணப்படவில்லை.

(இ) திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கு உரிய வாகனங்களின் ஓட்டப்பதிவேடுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முறையான அங்கீகாரங்களுடன் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களுக்கும் அவற்றின் கொடுப்பனவு திகதிகளுக்கும் இடையே பரஸ்பர வேறுபாடு காணப்பட்டது.

## 17.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழே காட்டப்பட்டுள்ள முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது பொருளாதார கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 6,027,840 செலவு செய்து 18,000 கணக்கெடுப்பு பேக் கொள்வனவு செய்வது தொடர்பாக கொள்வனவு செயற்பாட்டை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணக்கெடுப்பு பேக் உரிய விதந்துரைப்புகளுக்கு இணங்க காணப்படவில்லை.

(ii) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.6.1(V) ஆம் வழிகாட்டியின் பிரகாரம் குறித்த தரத்திற்கு இணங்க பேக் வழங்குவதற்காக எழுத்துமூல உறுதியுரையொன்றை வழங்குனரிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(iii) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கூறுவிலை திறப்பது தொடர்பான அறிக்கை பதிவுகள் மாதிரியின் நிதிசார் தகவல்களின் கீழ் வங்கியின் பெயர் மற்றும் கேள்வி பாதுகாப்புத் தொகை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் I ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களினது அலுவலகங்கள் முடியுமான வரை அரசின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட வேண்டும். தனியார் கட்டிடங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு மிக விசேட சந்தர்ப்பத்தின் போது அரசின் மதிப்பீட்டின் பிரகாரம் மாத்திரமே அனுமதி வழங்கப்படுகின்ற போதிலும் அதற்கு முரணாக திணைக்களத்தினால் தனியார் கட்டிடமொன்றில் இரண்டு மாடிகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டு 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை அரசின் மதிப்பீட்டை விட ரூபா 2,347,480 தொகை கூடுதலாக வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

**17.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட் பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 259 | 131 | 128 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 494 | 347 | 147 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 920 | 694 | 226 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 202 | 176 | 26 | - |
| (v) | ஏனையவை(பட்டதாரி பயிலுனர்கள்) | - | 05 | - | 05 |
| | மொத்தம் | 1,875 | 1,353 | 527 | 05 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 527 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பட்டதாரி பயிலுனர்களை நிரந்தரமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**18. தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

**18.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒத்தோபர் 27 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**18.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**18.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இல் குறிப்பிடப்படும் பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 18.4 தொடக்கம் 18.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலதன செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது.

(iii) 03 செலவின விடயங்களுக்காக ரூபா 3,930,000 கூட்டுத்தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 614,268 கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 3,315,732 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**18.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 371 | பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த கட்டுநிதியின் பெறுமதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அப்பிரமாணங்களுக்கு முரணாக ஒரு சந்தர்ப்பத்தின் போது திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 25,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அரச நிதி சுற்றறிக்கை | |
| 2008 மே 28 ஆந் திகதிய 428 ஆம் இலக்க சுற்றறிக்கை | சிறு கட்டுநிதியிலிருந்து செலுத்தக்கூடிய ஆகக்கூடிய பெறுமதி ரூபா 1,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணாக மூன்று சந்தர்ப்பங்களில் சில்லறைக் கட்டுநிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |
| (இ) அரச கணக்குகள் சுற்றுநிருபம் | |
| 2004 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 174 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்து குறியீடுகள் இலக்கமிடப்பட்டிருக்கவில்லை. |

## 18.5 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது அரசினால் பிரதான அபிவிருத்தி தலைப்பின் கீழ் 1,967 சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துவதற்காக ரூபா 481 பில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் 125 செயற்திட்டங்கள் மாத்திரம் 2013 ஆம் ஆண்டில் திரட்டிய அபிவிருத்தி தகவல்கள் முறைமை மூலம் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 1,751 உள்ளூர் செயற்திட்டங்களில் எதுவித செயற்திட்டங்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தி தகவல் முறைமை மூலம் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் காலாண்டு ரீதியாக விசாரணை செய்வதற்கு வரிசை அமைச்சுக்கு இணைக்கப்பட்ட இணையத்தள தரவு முறையொன்று திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்தது. 2013 ஆண்டு இறுதி வரையிலும் 216 வெளிநாட்டு நிதியிடப்பட்ட

செயற்திட்டங்களில் 195 மற்றும் 1,751 உள்நாட்டு நிதி நிதியிடப்பட்ட செயற்திட்டங்களில் 400 செயற்திட்டங்களின் தகவல்கள் மாத்திரம் இம்முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதின் உண்மை நிலைமையை கண்டு கொள்வதற்கு 31 வெளிக்கள சுற்றுலாக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 65 செயற்திட்டங்களின் வெளிக்கள அவதானிப்புக்களை மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்களிலிருந்து 18 செயற்திட்டங்களின் வெளிக்கள அவதானிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்ட மேற்பார்வையின் போது வெளிக்கள சுற்றுலாக்கள் மூலம் முக்கியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் வெளிக்கள சுற்றுலாவின் மூலம் செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ஈ) வெளிநாட்டு நிதிய பயன்பாட்டில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவது திணைக்களத்தின் நோக்கமாக இருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய 37 செயற்திட்டங்களின் வேலை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டக் காலம் பூர்த்தி செய்வதற்கு அண்மித்திருக்கையில் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 50 சதவீதத்திற்கு குறைவாக செலவிடப்பட்டிருந்த 80 செயற்திட்டங்கள் காணப்பட்டன.

(iii) செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த 3 செயற்திட்டங்கள் மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதியை விட 101 சதவீதத்திலிருந்து 136 சதவீதம் வரை விஞ்சி காணப்பட்டன.

**18.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 22 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 17 | 18 |
| (iii) | இரண்டாம் நிலை | 01 | 01 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 16 | 02 |
| | மொத்தம் | 88 | 56 | 32 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 19. தலைப்பு 296 – இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

### 19.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றம் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 19.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையிலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 19.4 தொடக்கம் 19.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு 13 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்கு**

மீளாய்வாண்டின் ரூபா 545,000,000 தொகையான ஆரம்ப தேறிய நிதியேற்பாடு ரூபா 520,000,000 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 458,372,096 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தின் 84 சதவீதமும் திருத்திய மதிப்பீட்டு வருமானத்தின் 88 சதவீதமாக இருந்தது.

**19.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றுநிரூபத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது.

**19.5 இணக்கமின்மை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 473,750 பெறுமதியான தளபாடங்கள் அப்பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 839,927 பெறுமதியான கணனிகள் உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் அப்பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**19.6 செயலாற்றல்**

2013 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 05 தொகுதிகளின் கீழ் வருமான இலக்குகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்குரிய செயற்பாடுகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்காக ஆரம்ப மதிப்பீட்டு வருமானம் ரூபா 545 மில்லியனாக இருந்த போதிலும்,

ரூபா 320 மில்லியன் இலக்கிடப்பட்ட வருமானத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய செயன் முன்னேற்றம் பின்வருமாறு

| | தொகுதி | அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | வருமானம் |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | மருந்துகள் (1) | 2,104 | 83,036,455 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் (2) | 1,288 | 125,202,590 |
| (iii) | இரசாயனப் பொருட்கள் (3) | 4,301 | 190,727,940 |
| (iv) | தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் ஏனையவை | 3,406 | 46,973,837 |
| (v) | ஏனைய இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் | 1,427 | 1,205,917 |
| | மொத்தம் | 12,526 | 447,146,739 |

## 19.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 08 | 06 | 02 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 60 | 57 | 03 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 19 | 15 | 04 |
| | மொத்தம் | 89 | 79 | 10 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 20. தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்

### 20.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 20.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 20.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 20.4 தொக்கம் 20.6 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணாமை

2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 08 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட காரணத்தினால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 15 சதவீதத்திலிருந்து 48 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 20.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 யூலை 27 ஆந் திகதியிலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 20.5 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர், பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை தொடர்புபடுத்தல்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான விபரம் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | 2012 ஆம் ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட வழக்குகள் | 2013 இல் கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2013 இல் முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 35 | 40 | 22 | 53 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 25 | 11 | 06 | 30 |
| உயர் நீதிமன்றம் | 02 | - | 02 | - |
| மாவட்ட நீதிமன்றம் | 02 | 03 | - | 05 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | 03 | 06 | 01 | 08 |
| மொத்தம் | **67** | **60** | **31** | **96** |

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 127 வழக்கு நடவடிக்கைகள் இத் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள போதிலும், 31 வழக்கு நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 04 வழக்குகள் மற்றும் 2010 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 08 வழக்குகள் 2014 யூலை 31 ஆந் திகதி வரையில் முடிவடையாதிருந்தன.

**(ஆ) சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கிடையே உடன்படிக்கை மற்றும் வரைவு அதிகாரச்சட்டங்கள் தொடர்புபடுத்தலின் செயன்முன்னேற்றம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கிடையே உடன்படிக்கை மற்றும் வரைவு அதிகாரச்சட்டங்கள் தொடர்புபடுத்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| **திணைக்களம்** | **2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை** | **2013 ஆம் ஆண்டில் வேலை உடன்படிக்கை தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை** | **வேலை முடிவடையாத கோவைகளின் எண்ணிக்கை** | **வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 23 | 96 | 19 | 100 |
| ஏனைய திணைக்களங்கள் | 01 | 01 | 01 | 01 |
| மொத்தம் | **24** | **97** | **20** | **101** |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்து தொடர்புபடுத்தலுக்காக அனுப்பியிருந்த 119 கோவைகளில் 100 கோவைகளின் தொடர்புபடுத்தல் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 19 கோவைகளின் தொடர்புபடுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய திணைக்களங்களிடமிருந்து தொடர்புபடுத்தலுக்காக கிடைக்கப்பெற்ற 02 கோவைகளில் 01 கோவையின் தொடர்புபடுத்தல் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மற்றைய 01 கோவையின் தொடர்புபடுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்புடைய வரைவுகளை தொடர்புபடுத்தும் செயற்பாடு**

2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் 21 திருத்திய அதிகாரச்சட்டங்களை பாராளுமன்றத்தில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**20.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 23 | 08 | 15 | - |
| (ஆ) | இரண்டாம் நிலை | 06 | 03 | 03 | - |
| (இ) | ஆரம்ப நிலை | 07 | 04 | 03 | - |
| (ஈ) | ஏனையவை(அமைய /தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 36 | 16 | 21 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 பிரிவின் பிரகாரம் அரச சேவையின் ஒவ்வொரு பதவிக்கும், பதவியினது சம்பள அளவு, தேவையான தகைமைகள், வயதெல்லை மற்றும் குறித்த ஏனைய விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டிய போதிலும், திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களத்தினால் அரச முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து பதில்கடமை அடிப்படையில் கணக்காளரொருவரும் தற்காலிக அடிப்படையில் அலுவலக உதவியாளர் ஒருவரும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 21. தலைப்பு 324 – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்

### 21.1 கணக்காய்வின் நோக்கெல்லை

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒத்தோபர் 24 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 21.2 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 21.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 21.4 தொக்கம் 21.5 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலதன செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 08 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட காரணத்தினால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திலிருந்து 44 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தன.

**21.4 செயலாற்றல்**

------------------------

2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்ட செயற்பாடுகளின் மூலம் உள்ளகக் கணக்காய்வினை பலப்படுத்துவதற்காக வழிகாட்டல் மற்றும் திறைசேரியின் பிரதிநிதித்துவத்தை வழங்கி அதற்கு நேரடியாக கூட்டிணைத்தல் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பாடாக இருந்தது. அதன் பிரகாரம் காலாண்டிற்கு ஒரு தடவைப்படி வருடத்திற்கு உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது 04 தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நிதி, திட்டமிடல் அமைச்சிற்காக 01 கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்தியிராத 02 அமைச்சுக்களும், ஒரு கூட்டத்தினை மாத்திரம் நடாத்திய 05 அமைச்சுக்களும், இரண்டு கூட்டங்களை மாத்திரம் நடாத்திய 09 அமைச்சுக்களும், மூன்று கூட்டங்களை மாத்திரம் நடாத்திய 13 அமைச்சுக்களும் காணப்பட்டன.

(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் கணக்காய்வு தொடர்பாக வழிகாட்டல் மற்றும் விசேட புலனாய்வுகள் நடாத்துதல் தொடர்பாக வழிகாட்டலொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான வழிகாட்டலொன்று தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளின் உள்ளகக் கணக்காய்வு செயன்முன்னேற்ற கூட்டங்களை மீளாய்வு செய்தல் திணைக்களத்தின் செயற்பாடாக இருந்த போதிலும், எந்தளவில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயலாற்றல் கணக்காய்வினை அறிமுகப்படுத்துவது திணைக்களத்தின் செயற்பாடாக இருந்த போதிலும், அவ்வாறான உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளின் எண்ணிக்கை எந்தளவு என்பது தொடர்பான அறிவூட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டுமென செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**21.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 17 | 11 | 06 |
| (ஆ) | இரண்டாம் நிலை | 20 | 13 | 07 |
| (இ) | ஆரம்ப நிலை | 11 | 09 | 02 |
| | மொத்தம் | 48 | 33 | 15 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**22. மிலோதா நிறுவகத்தின் 2013 மே 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**22.1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மிலோதா நிறுவகத்தின் 2013 மே 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஐந்து மாத காலப்பகுதிக்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**22.1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**22.1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 22.1.4 உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக மிலோதா நிறுவனத்தை உருவாக்குதல்

---

மிலோதா நிறுவகத்தில் காணப்பட்ட நிதிச் சொத்துக்கள் அதாவது நிலையான வைப்புக்கள் ரூபா 96,500,000 தொகை, கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 1,617,384 தொகை, கையிலுள்ள காசு ரூபா 1,364,393 தொகை, சில்லறைக் காசு முற்பணம் மற்றும் எரிபொருள் முற்பணம் ரூபா 10,000 என்பவற்றுடன் மொத்த சொத்துக்கள் ரூபா 99,491,776 தொகையும் ரூபா 82,289 தொகையான பொறுப்புக்களுடன் ரூபா 99,409,488 தொகையான தேறிய சொத்துக்கள் மற்றும் பழைய சுங்க கட்டிடத்தை புனரமைப்பதற்காக நிதி முகாமைத்துவ புனரமைப்பு செயற்திட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 151,319,381 தொகையான நிதியைப் பயன்படுத்தி 2014 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய சீஎம்/12/1129/504/100 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் 2013 மே 17 ஆம் திகதி முதல் இந்நிறுவகம் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக உருவாக்கப்பட்டிருந்தது.

மிலோதா நிறுவகத்தைக் கலைக்கும் போது ரூபா 1,082,127 தொகையான நிலையான சொத்துக்கள், ரூபா 210,414 ஆன ஊழியர் கடன்கள் மற்றும் ரூபா 663,590 தொகையான ஊழியர் பணிக்கொடை நிதி என்பனவற்றை புதிய கம்பனிக்கு ஒப்படைப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், புதிய கம்பனியின் கணக்குகளின் பிரகாரம் அச்சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றிருக்கவில்லை.

### 22.1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 22.6.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 22.2 நிதிக்கூற்றுக்கள்

### 22.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 22.6.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மிலோதா நிறுவகத்தின் 2013 மே 31 இல் முடிவடைந்த 05 மாத காலத்திற்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 05 மாத காலத்திற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 22.2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 22.2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமங்கள்

இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 16 இற்கு முரணாக நிலையான சொத்துக்களுக்காக செலவிடப்பட்ட மூலதனத் தன்மையிலான செலவினம் ரூபா 1,082,128 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கையும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

#### 22.2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

வரையறுக்கப்பட்ட அக்கடமி ஒவ் பினான்சியல் ஸ்ரடீஸ் (உத்தரவாதக்) கம்பனிக்கு நிதிசார் அல்லாத சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்கீட்டுக் கொள்கை 6 இன் பிரகாரம் மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,758,873 தொகையும் ரூபா 1,082,128 தொகையான மூலதனச் செலவினமும் மூலதனச் சொத்துக்களாக புதிய கம்பனிக்கு கையளிக்கப்படாமல் மீண்டெழும் செலவினமாக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

#### 22.2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| செலவின வகை | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| உத்தேசிக்கப்பட்ட புதிய மிலோதா கட்டிடத்திற்காக ஏற்பட்ட செலவினம் | 4,055,288 | 5,619,121 |
| காலாவதியான மூலப்பொருட்கள் | 153,452 | - |

### 22.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 613,295 தொகையும் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களிடமிருந்து முற்பணமாக கிடைத்த கட்டணங்களாக நிறுவகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,838,980 ஆன கட்டணங்கள் தீர்த்து வைக்கப்பட்ட முறை தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 22.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 753(1) | பொருள் வழங்கல் கட்டளை தயார் செய்யப்பட்டு அதன் மூலப்பிரதி பொருட்களுடன் பொருட்களை பொறுப்பேற்கும் நபருக்கு அனுப்பி இரண்டாம் பிரதியை தனது பொறுப்பில் வைத்திருக்க வேண்டிய போதிலும், ரூபா 15,118,141 பெறுமதியான நிலையான சொத்துக்களின் கையளித்தல்களுக்குரிய வழங்கல் கட்டளைகளைத் தயாரித்து அவற்றை பொருட்களுடன் அனுப்பி பிரதிகளை தனது பொறுப்பில் வைத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 753(2) | பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் அப்பொருட்களை பொறுப்பேற்ற உத்தியோகத்தரால் பெறுவனவுக் குறிப்பொன்றை தயாரித்து மூலப் பிரதியை பொருட்களை பொறுப்பேற்கும் உத்தியோகத்தருக்கு அனுப்பி இரண்டாம் பிரதியை தனது பொறுப்பில் வைத்திருக்க வேண்டிய போதிலும் மேற்குறித்த பெறுமதியுடன் கூடிய நிலையான சொத்துக்களுக்காக பெறுவனவு குறிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 373(1) | புதிய கம்பனியை உருவாக்குவதற்கு முன்னர் நிறுவகத்தில் காணப்பட்ட கட்டுநிதி மீதி திறைசேரியின் அரச நிதிக் கணக்குகள் திணைக்களத்திற்கு மீள ஒப்படைக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக இந்நிறுவகத்தின் 2013 மே 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 10,000 தொகையான குறித்த பணிக்கான கட்டுநிதி மீதி புதிய மிலோதா நிறுவகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) <u>பொது முயற்சிகள் சுற்றறிக்கை</u><br>2005 யூலை 13 ஆம் திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியை திறைசேரி உண்டியல்களில் அல்லது வேறு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தால் அத்தொகை 2005 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 4670 ஆம் இலக்க அரச நிறுவனங்களில் தற்காலிக மிகைப் பொறுப்பு நிதியத்தின் கணக்கின் கீழ் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ரூபா 96,500,000 தொகை மக்கள் வங்கியின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

### 22.3 நிதி மீளாய்வு

#### 22.3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 மே 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஐந்து மாத காலப்பகுதிக்காக நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,358,377 பற்றாக்குறையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,975,277 ஆக இருந்தது. இந்நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் குறைவடைந்தமை, வட்டி வருமானம் குறைவடைந்தமை மற்றும் உத்தேச மிலோதா நிறுவகத்தை உருவாக்குவதற்காக ரூபா 4,841,000 தொகையான மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பன நிறுவகத்தின் செலவினமாக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தமை காரணங்களாக இருந்தன.

#### 22.3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| விபரங்கள் | 2012 | 2013 இன் 05 மாதங்களுக்காக |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பயிற்சி மற்றும் கல்வி சேவைகளின் வருமானம் | 19,107,900 | 1,873,000 |
| பயிற்சி மற்றும் கல்வி சேவைகளின் நேரடி செலவினம் | (4,199,891) | (519,550) |
| பயிற்சியளித்தலால் கிடைத்த பங்களிப்பு | 14,908,009 | 1,353,450 |
| நிர்வாக மற்றும் ஏனைய பொது மேந்தலை கிரயம் | (22,203,072) | (9,150,598) |
| பயிற்சி மற்றும் கல்வி சேவைகளில் ஏற்பட்ட நட்டம் | (7,295,063) | (7,797,148) |
| ஏனைய வருமானம் | 11,270,340 | 5,438,771 |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | 3,975,277 | (2,358,377) |
| பங்களிப்பு விகிதம் (சதவீதத்தில்) | 78 | 75 |

நிறுவகத்தினால் நடாத்தப்பட்டிருந்த பயிற்சி மற்றும் கல்வி சேவைகளிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 7,295,063 தொகையான நட்டம் மற்றும் 2013 இன் 05 மாத காலப்பகுதியில் ரூபா 7,797,148 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் 78 சதவீதமும் 2013 ஆம் ஆண்டில் 75 சசதவீத பங்களிப்பு விகிதமொன்றும் பயிற்சி மற்றும் கல்வி சேவைகளிலிருந்து கிடைத்திருந்த போதிலும், பொது மேந்தலை கிரயம் அதிகரித்தமையால் இந்நட்டம் ஏற்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலும் 2013 இன் 05 மாத காலப்பகுதியிலும் கிடைக்கப்பெற்றிருந்த முறையே ரூபா 11,270,340 தொகை மற்றும் ரூபா 2,358,377 தொகையான வட்டி மற்றும் ஏனைய வருமானம் காரணமாக 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,975,277 ஆன இலாபம் மற்றும் 2013 ஆம் ஆண்டில் நட்டம் ரூபா 2,358,377 ஏற்பட்டிருந்தது.

**22.4 செயற்பாட்டு மீளாய்வு**

**செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரையான 04 மாத காலப்பகுதியில் நிறுவகம் 11 பயிற்சி மற்றும் கல்விச் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி ரூபா 1,873,000 தொகையான வருமானமொன்றை உழைத்திருந்ததுடன், இவ்வருமானத்தை உழைப்பதற்காக நேர் செலவினமாக ரூபா 519,550 தொகை செலவிடப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி மற்றும் கல்விச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் நிறுவகத்தின் நோக்கம் நிறைவேற்றும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**22.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**22.5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிறுவகத்தினால் வரைவு நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 மே 31 ஆம் திகதி முடிவடைந்த 05 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் 2014 திசெம்பர் 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**22.5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிறுவனத்தின் பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றிற்கிடையே கருத்திற் கொள்ளக்கூடியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஒரு சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**22.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) பொது மேந்தலைக் கிரயங்கள்

**23.1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 23.1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 23.1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் குடியரசினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி குடியரசின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 23.1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 23.2 நிதிக்கூற்றுக்கள்

### 23.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 23.2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 23.2.2 நிதிசார் செயலாற்றல்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிசார் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2013 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீடு | | 2013 உள்ளவாறான | 2012 உள்ளவாறான |
|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வருமானம்** | | |
| 239,518.0 | வருமான வரி | 205,665.6 | 172,593.1 |
| 577,959.1 | உள்நாட்டு பொருட்கள் சேவை வரி | 498,526.3 | 462,164.1 |
| 234,723.0 | சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையிலான வரி | 219,451.3 | 210,539.3 |
| 1,052,200.1 | **வரி வருமானம்** | 923,643.2 | **845,296.5** |
| 140,026.0 | **வரியல்லாத வருமானமும் ஏனையவையும்** | 142,604.2 | **151,520.4** |
| **1,192,226.1** | **வருமானங்களின் மொத்தம்(அ)** | **1,066,247.4** | **996,816.9** |

| | | | |
|---|---|---|---|
| | **கழி: செலவினம்** | | |
| 308,290.0 | சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவை நலன்கள் | 306,889.2 | 272,620.0 |
| 135,586.8 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 130,477.0 | 110,014.4 |
| 379,556.9 | உதவுதொகைகள் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 351,387.7 | 326,576.3 |
| 486,485.9 | வட்டிக் கொடுப்பனவு | 464,529.4 | 408,986.7 |
| 1,064.7 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 225.6 | 133.3 |
| **1,310,984.3** | **மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (ஆ)** | **1,253,508.9** | **1,118,330.7** |
| **119,758.2** | **வருமானக் குறை** (அ) – (ஆ) | **187,261.5** | **121,513.8** |
| 544,988.7 | **அரச முதலீடுகள்** | 455,578.2 | 471,088.8 |
| **663,746.9** | | | |
| | **பாதீட்டுப் பற்றாக்குறை** | **642,839.7** | **592,602.6** |
| | | | |
| | **பாதீட்டு பற்றாக்குறைக்கான நிதியீட்டம்** | | |
| 201,068.2 | வெளிநாட்டுக் கடன் எடுப்பனவு | 183,317.2 | 365,698.4 |
| (113,000.0) | வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல் | (94,895.9) | (152,898.7) |
| 88,068.2 | **தேறிய வெளிநாட்டு கடன் வழங்கல்** | 88,421.3 | **212,799.7** |
| 20,000.0 | வெளிநாட்டு மானியங்கள் | 15,859.0 | 16,070.8 |
| **108,068.2** | **மொத்த வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பு** | **104,280.3** | **228,870.5** |
| 1,118,893.5 | உள்நாட்டு வங்கியல்லாக் கடன் எடுத்தல் | 1,089,696.2 | 725,869.3 |
| (634,000.0) | உள்நாட்டுக் கடன் கொடுப்பனவு | (607,623.0) | (449,915.1) |
| 484,893.5 | **தேறிய உள்நாட்டு கடன் எடுப்பனவு** | 482,073.2 | **275,954.2** |
| 16,825.0 | கடன் அறவீடு | 15,968.5 | 16,409.1 |
| 800.0 | மூலதனச் சொத்து விற்பனை | 280.3 | 831.1 |
| - | வைப்புக் கணக்குள் மற்றும் பொறுப்புக்களில் தேறிய மாற்றம் | 7,639.6 | 22,160.9 |
| - | காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | 32,597.8 | 48,376.8 |
| **610,586.7** | **மொத்த நிதியீட்டத்தின் கூட்டுத்தொகை** | **642,839.7** | **592,602.6** |

### 23.2.3 நிதி நிலைமை

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் இறுதியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | **2013** | **2012** |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 23,012.2 | 24,034.4 |
| அரச திணைக்களங்களுக்கான முற்பணம் | 9,229.9 | 9,052.2 |
| அங்கத்துவ கட்டணம் | 3,517.2 | 3,517.2 |
| கடன் வழங்கல் | 370,618.1 | 323,121.6 |
| அரசாங்கத்தின் வசமுள்ள வியாபாரங்களில் அரசின் பங்களிப்பு | 212,976.3 | 176,600.8 |
| முத்திரை இருப்புக் கணக்கு | 971.0 | 1,010.3 |
| **நிதிச் சொத்துக்களின் கூட்டுத்தொகை** | **620,324.7** | **537,336.5** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கி மேலதிகப் பற்று | 137,076.8 | 104,479.0 |
| மத்திய வங்கி முற்பணம் | 109,271.8 | 111,291.8 |
| வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 22,586.7 | 22,183.4 |
| நானாவித நிதியம் | 1,386.5 | 1,456.7 |
| அரசின் கடன் எடுப்பனவு | 5,996,496.3 | 5,408,759.8 |
| வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் | 83,410.4 | 75,756.0 |
| அரச திணைக்களங்களுடனான செயற்பாட்டுக் கணக்கு | (4,905.3) | (3,963.1) |
| நானாவிதக் கணக்குகள் | (380.5) | (2,107.7) |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **6,344,942.7** | **5,717,855.9** |
| எதிர்பாரா சந்தர்ப்ப நிதியம் | 140.0 | 140.0 |
| **பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சந்தர்ப்ப நிதியத்தின் மொத்தம்** | 6,345,082.7 | **5,717,995.9** |
| **நிதிச் சொத்துக்களை மிகைத்த மொத்தப் பொறுப்புக்களும் எதிர்பாரா சந்தர்ப்ப நிதியத்தினதும் மீதிகள்** | **5,724,758.0** | **5,180,659.4** |
| திரட்டிய நிதியம் - திரண்ட நிலுவை | 312,477.1 | 272,239.7 |
| பௌதீகச் சொத்துக்களின் மொத்த முதலீடும் திரட்டிய தேறிய வருமான நிலுவையும் | 5,412,281.1 | 4,908,419.7 |
| | **5,724,758.2** | **5,180,659.4** |
| **எதிர்பாராதவைகளும் பொறுப்புக்களும்** | **362,923.5** | **401,411.0** |

### 23.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க வங்கியொன்றிலிருந்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முற்பணமாகக் கிடைத்த முறையே ரூபா 6,000 மில்லியன் மற்றும் ரூபா 2,000 மில்லியன் தொகைகள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு அரசாங்க தொழில் முயற்சிகளிலிருந்து குறிப்பிட்ட இரண்டு செயற்திட்டங்களுக்காக இரண்டு உடன்படிக்கைகளின் மூலம் ரூபா 75,045 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டுக் கடன் மற்றும் கடன் சேவை வழங்கல்களுக்குரிய அரசாங்க தொழில் முயற்சிகளுக்கு கையளிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும் அந்தக் கடன்மீதி தொடர்ந்தும் குடியரசின் வெளிநாட்டுக் கடனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் விளக்கமளித்தல் குறிப்பு இலக்கம் 26 இன் மூலம் காண்பிக்கப்பட்ட ஹோட்டல் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட காணிக்காக கிடைத்த ரூபா 19,817 மில்லியன் தொகையும், 2013 சனவரி 01 ஆந் திகதி வரையில் அதில் உழைக்கப்பட்ட வருமானமான ரூபா 3,329 மில்லியன் தொகையும் ஆக ரூபா 23,146 மில்லியன் கூட்டுத்தொகையான மீதியொன்று அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 5,560 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 17,586 மில்லியன் மீதி காணப்பட்டது.

(ஈ) வெளிநாட்டுக் கடன்பெறல், உள்நாட்டுக் கடனின் கீழான அபிவிருத்தி பிணைமுறி தீர்த்தல் மற்றும் கணக்கீடு செய்யப்படாத கடன் மீதிகளாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் மற்றும் பேணப்பட்டிருந்த பேரேடு மற்றும் கடன் அறிக்கையின் படி காணப்பட்ட ரூபா 39,054 மில்லியன் தொகையான வேறுபாடு நாணயமாற்று வேறுபாடாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உரியவாறு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(உ) மாகாண சபையினால் உழைக்கப்படுகின்ற வருமானம் மற்றும் அதன் அடிப்படையில் செய்யப்படுகின்ற செலவினம் குடியரசின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 23.2.5 வங்கி மேலதிகப்பற்று

நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று ரூபா 137,077 மில்லியனாக இருந்ததுடன் அதன் பொழிப்பு நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 21 இல் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 21 இல் குறிப்பிடப்பட்ட 12 வங்கிக் கணக்குகளில் ஒரு கணக்கு திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கான

(8020) ஆக இருந்ததுடன் அந்தக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 10 கணக்குகளில் 3 கணக்குகளின் மேலதிகப் பற்று மீதியான ரூபா 165,697 மில்லியன் தொகைக்கு 7 வங்கிக் கணக்குகளின் சாதகமான மீதி ரூபா 8,268 மில்லியன் ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் மேலதிகப் பற்று மீதி ரூபா 157,429 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கம் 8020 கொண்ட கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான மேலதிகப்பற்று மீதி முன்னைய ஆண்டின் மேலதிகப்பற்று மீதியை விட ரூபா 15,510 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஆ) மேலே(அ) இல் குறிப்பிடப்பட்ட திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கில் வங்கி மேலதிகப் பற்று மீதிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,262 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட வட்டியான ரூபா 7,604 மில்லியனை விட ரூபா 2,658 மில்லியன் அதிகரிப்பாகும். அந்த அதிகரிப்பு 35 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

(இ) வங்கி மேலதிகப் பற்று மீதிக்கு சீராக்கம் செய்யப்பட்ட திறைசேரி அங்கீகரித்த கட்டு நிதிக் கணக்கில் (7002) ரூபா 27,603 மில்லியன் வரவு மீதிக்கு ரூபா 488 மில்லியன் செலவு மீதி ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் ரூபா 27,115 மில்லியனாக கணிப்பீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதியில் தீர்வு செய்யப்படாத 1 வருடம் முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,482 மில்லியன் கூட்டுத்தொகையான வரவு மீதியும் ரூபா 464 கூட்டுத்தொகையான செலவு மீதியும் உள்ளடங்கியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்கு இலக்கம்** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி** | | **மீதி கொண்டு வரப்படுகின்ற வருடம்** |
|---|---|---|---|
| | **வரவு** | **செலவு** | |
| | **ரூபா** | **ரூபா** | |
| 7002/0000/00/336/97 | 92,369,760 | - | 1997 |
| 7002/0000/00/75/97 | 53,575,400 | - | 1997 |
| 7002/0000/00/377/98 | 161,096,408 | - | 1998 |
| 7002/0000/00/332/99 | 101,591,142 | - | 1999 |
| 7002/0000/00/328/00 | 200,405,060 | - | 2000 |
| 7002/0000/00/35/08 | 63,350,921 | - | 2008 |
| 7002/0000/00/35/09 | 32,271,945 | - | 2009 |
| 7002/0000/00/35/10 | 675,170,151 | - | 2010 |
| 7002/0000/00/35/11 | - | 463,557,480 | 2011 |
| 7002/0000/00/35/12 | 101,950,473 | - | 2012 |
| 7002/0000/00/333/12 | 2,931 | - | 2012 |
| | 1,481,784,191 | 463,557,480 | |

(ஈ) மீளளிப்பு வெளிநாட்டு உதவிக்கான திறைசேரி அங்கீகரித்த கணக்கில் (7003) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரவு மீதியான ரூபா 70,101,042 இற்கு செலவு மீதியான ரூபா 15,000 தொகை ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் ரூபா 70,086,042 ஆக சீராக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் தீர்க்கப்படாத 08 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 38,401,706 தொகையான 5 வரவு மீதிகள் மற்றும் ரூபா 15,000 தொகையான செலவு மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்கு இலக்கம்** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி** | | **மீதி கொண்டு வரப்படுகின்ற வருடம்** |
|---|---|---|---|
| | **வரவு** | **செலவு** | |
| | **ரூபா** | **ரூபா** | |
| 7003/0000/00/372/03 | 20,000,000 | - | 2003 |
| 7003/0000/00/43/04 | - | 15,000 | 2004 |
| 7003/0000/00/43/05 | 14,286,931 | - | 2005 |
| 7003/0000/00/43/01 | 11,358 | - | 2001 |
| 7003/0000/00/47/00 | 4,043,282 | - | 2000 |
| 7003/0000/00/43/02 | 60,135 | - | 2002 |
| **மொத்தம்** | **38,401,706** | **15,000** | |

### 23.2.6 பொது வைப்புக் கணக்கு

பொறுப்பின் கீழான வைப்புக்களாகவும் ஏனைய பொறுப்புக்களாகவும் காண்பிக்கப்பட்டுள்ள மீதி ரூபா 83,410 மில்லியனாகும். இது தொடர்பான விபரங்களைக் காண்பிக்கின்ற நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 26 இல் திறைசேரி பொது வைப்புக் கணக்கில் (இலக்கம் 6000) மீதியாக ரூபா 77,109.9 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அந்த மீதி பின்வருமாறு இருந்தது.

| **வைப்பு வகை** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி** | | |
|---|---|---|---|
| | **வரவு மீதி** | **செலவு மீதி** | **தேறிய செலவு மீதி** |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| பிணை வைப்பு | - | 152.3 | 152.3 |
| கேள்வி வைப்பு | - | 30.4 | 30.4 |
| நானாவித வைப்பு (பழைய) (6000-3) | 2 | | (2) |
| கூட்டுத்தாபன மற்றும் நிதியம் | - | 1,222 | 1,222 |
| அரசாங்கத்திற்குக் கையளிக்கப்பட்ட | | | |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனங்கள் | - | 111.2 | 111.2 |
| நிதியம் (சபைகளில்) | - | 28,134.9 | 28,134.9 |
| மிகை நிதியம் | - | 252.4 | 252.4 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம் | - | 153.1 | 153.1 |
| தற்காலிக கடன் ஈட்டல் (நிர்வாகக் கடன்) | - | 14,083.7 | 14,083.7 |
| வெளிநாட்டு உதவி மானியம் | - | 3,141.8 | 3,141.8 |
| நிதியேற்பாட்டு வைப்பு | 0.6 | - | (0.6) |
| தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்பு | - | 88.1 | 88.1 |
| மாகாண சபைகளுக்கு வருமானத்தை அனுப்புதல் | - | 1,594.4 | 1,594.4 |
| பொது வைப்பு | - | 28,146.9 | 28,146.9 |
| ஏனையவை | - | 0.7 | 0.7 |
| மொத்தம் | **2.6** | **77,111.9** | **77,109.3** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 77,111.9 மில்லியன் கூட்டுத்தொகையான செலவு மீதியில் ரூபா 2.6 மில்லியன் கூட்டுத்தொகையான வரவு மீதி சீராக்கப்பட்டதன் பின்னர் பொது வைப்புக் கணக்கின் வரவு மீதி ரூபா 77,109.3 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 200/2009 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2009 நவம்பர் 01 ஆந் திகதிக்கு பின்னரான பழைய கணக்குகளில் எவ்வித வைப்புக்களும் செலவு வைக்கப்படாது அந்தக் கணக்குகளில் காணப்படுகின்ற மீதி தீர்க்கப்பட்டதன் பின்னர் அப்பொது வைப்புக் கணக்கு கலைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 23.2.7 நட்டங்களும் இழப்புக்களும்

2013 ஆம் ஆண்டின் நட்டம் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 225,621,581 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் நட்டம் மற்றும் இழப்பின் பெறுமதியான ரூபா 133,266,321 இனை விட ரூபா 92,355,260 தொகையான அதிகரிப்பு அதாவது 69.3 சதவீத அதிகரிப்பாக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் இழப்பாக ரூபா 225,621,581 தொகையான மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 21 இல் உள்ளவாறு கணக்காய்விற்குக் கிடைத்த 46 தலைப்புக்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகளில் டீ.ஜீ.எஸ்.ஏ.7.7(1) படிவங்களில் காண்பிக்கப்பட்ட இழப்பு மற்றும் நட்டப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 249,045,257 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 46 தலைப்புக்களுக்கு மாத்திரம் உரிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத நட்டம் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 23,423,676 ஆகும்.

**23.2.8 நிலையான சொத்துக்களை கணக்கு வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மூலதன நிதிஏற்பாட்டின் கீழ் நிலையான சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் சேகரிப்பதற்காகவும் ரூபா 219,283,847,951 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களின் பெறுமதி வெவ்வேறாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்குகள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் அகற்றுதல்கள் கணிப்பீடு செய்யப்படாமையால் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சேர்த்தல்களின் பெறுமதி முறையே ரூபா 27,336,766,157 மற்றும் ரூபா 191,947,081,794 ஆக இருந்தன.

(ஆ) வாடகைக் கொள்வனவின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,885,267,693 தொகை ‘‘வாகனங்களுக்கான சேர்த்தல்’’ இல் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**23.2.9 அரசிற்குரிய தொழில் முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பு**

நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்திற்குச் சொந்தமான 125 தொழில் முயற்சிகளின் மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 212,976,260,878 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான 125 தொழில் முயற்சிகளில் 14 இல் முதலீடு செய்யப்பட்ட ரூபா 461,505,280 கூட்டுத்தொகையான பங்களிப்புப் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. (விபரம் இணைப்பு 01 இல் காண்பிக்கப்படுகின்றது)

(ஆ) அரசாங்கத்திற்குச் சொந்தமான 12 தொழில் முயற்சிகளின் மூலதனத்திற்காக 124,269,630,593 கூட்டுத்தொகை பொதுத் திறைசேரியினால் பங்களிக்கப்பட்டிருந்தமை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொழில் முயற்சி நிறுவனங்களினால் சரியானது என உறுதிப்படுத்தப்பட்டிருந்த மூலதனப் பங்களிப்பின் கூட்டுத்தொகை ரூபா 160,536,354,844 ஆக இருந்தது. அதன் படி அந்த 12 நிறுவனங்களுக்குரிய அதிகமாக உறுதிப்படுத்தப்பட மூலதனப் பங்களிப்பின் அளவு ரூபா 36,266,724,251 ஆகும். (விபரம் இணைப்பு 02 இல் காண்பிக்கப்படுகின்றது)

(இ) அரசாங்கத்திற்குச் சொந்தமான 125 தொழில் முயற்சிகளில் 08 இற்குரிய ரூபா 35,828,544,856 கூட்டுத்தொகை பொதுத் திறைசேரியின் மூலதனப் பங்களிப்பாக இருந்தமை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொழில் முயற்சி நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மூலதனப் பங்களிப்பின் கூட்டுத்தொகை ரூபா 30,727,606,329 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 08 நிறுவனங்களுக்குரியதாக குறைத்து உறுதிப்படுத்தப்பட்ட மூலதனப் பங்களிப்பின் கூட்டுத்தொகை ரூபா 5,100,938,527 ஆகும். (விபரம் இணைப்பு 03 இல் காண்பிக்கப்பட்டுள்ளது)

(ஈ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மூலதனத்திற்கு ரூபா 1,636,043,832 தொகையான அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பு 2013 இன் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ''மிஹின் லங்கா'' தனியார் கம்பனியின் மூலதன மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குப் பெறுமதி ரூபா 5,140,610,810 ஆகும். அந்த பங்குப் பெறுமதிக்கு மேலதிகமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான மூலதன முற்பணமாக உறுதிப்படுத்தப்பட்ட தொகை ரூபா 2,807,419,946 ஆகும். இந்த மூலதன முற்பணத்தொகை குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**23.2.10 மூலதனப் பங்களிப்பிற்கு வருமானக் கிடைப்பனவு**

அரசாங்கத்திற்குச் சொந்தமான 62 நிறுவனங்கள், 24 பெருந்தோட்டக் கம்பனிகள், 02 அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அமெரிக்க டொலர்களில் இயற்குகின்ற 3 கூட்டுத்தாபனங்கள் என 91 நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் கூட்டுத்தொகை ரூபா 82,900,260,159 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 33,750,711,417 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த 38 நிறுவனங்களில் மாத்திரம் மீளாய்வாண்டின் போது ரூபா 4,768,286,280 பங்கிலாபம் கிடைத்திருந்தது. அந்த இலாபப் பங்குப் பணம் மொத்த முதலீட்டுப் பெறுமதியில் 6 சதவீத்தை விட குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**23.2.11 வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம்**

மீளாய்வாண்டிற்குரிய நிதி நிலைமைக் கூற்றில் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானிமாக முறையே ரூபா 201,068,225,000 தொகை மற்றும் ரூபா 12,952,025,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் திருத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மதிப்பீட்டை விட ரூபா 40,487,118,000 தொகை அதாவது 16.8 சதவீதத்தினாலும் வெளிநாட்டு மானியம் ரூபா 416,303,000 தொகை அதாவது 3.1 சதவீதத்தினாலும் குறைவானதாகும். அவ்வாறே மீளாய்வாண்டின் வெளிநாட்டு மானியத்திற்கான ஆரம்ப மதிப்பிடு ரூபா 20,000,000,000 தொகை வரை ரூபா 7,047,975,000 இனால் அதிகரிக்கப்பட்டு மீள் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| | வருடாந்த மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | உள்ளபடியான பெறுவனவு | செலவினத்திற்கான வருடாந்த நிதியேற்பாடு | வருடாந்த செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வெளிநாட்டுக் கடன் | 201,068,225,000 | - | 183,317,158,351 | 214,151,792,146 | 185,654,462,497 | 28,497,329,649 |
| வெளிநாட்டு மானியம் | 12,925,025,000 | 20,000,000,000 | 15,858,996,167 | 19,026,786,134 | 14,847,556,499 | 4,179,229,635 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செலவின முகாமைத்துவத்திற்காக வெளிநாட்டுக் கடன் பயன்படுத்தப்பட்டு நிதிஏற்பாடு வழங்கும்போது மதிப்பீட்டு வெளிநாட்டுக் கடன் தொகையை விட ரூபா 13,083,567,146 அதிகரித்து நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது உள்ளபடியான வெளிநாட்டுக்கடன் பெறுவனவுகள் ரூபா 183,317,158,351 ஆக இருந்த போதிலும் 41 செலவினத் தலைப்புக்களின் கீழ் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 185,654,462,497 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கிடைத்த கடன் பணத்தை விட ரூபா 2,337,304,146 தொகை வெளிநாட்டுக் கடன் பணத்திலிருந்து செலவினம் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கீழே காண்பிக்கப்படுகின்ற 11 செலவினத் தலைப்புக்களுக்கு வெளிநாட்டு கடன் நிதியீட்டத்தின் கீழ் நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,464,592,366 தொகையான முழுத்தொகையும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் வெளிநாட்டு மானிய நிதியீட்டத்தின் கீழ் 14 செலவினத் தலைப்புக்களுக்கு நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,430,339,955 தொகையான மொத்தத் தொகையும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு இருந்தது.

(உ) வெளிநாட்டு வளத் திணைக்களத்தால் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற 854-1 அறிக்கையின் படி 2013 ஆம் ஆண்டின் போது 11 கடன் உடன்படிக்கைகளுக்குரியதாகக் கிடைத்திருந்த ரூபா 14,718,564,079 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. (விபரம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது)

(ஊ) கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் நிதிக்கூற்றிலும் வெளிநாட்டு வள திணைக்களத்தின் 854-1 அறிக்கையின் படியும் மீளச் செலுத்த வேண்டிய கடன் மீதி மற்றும் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட கடன் தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. கணக்கு இணங்காமையினால் சரியான கணக்கு மீதி எது என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | 854-1 அறிக்கையின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| செலுத்த வேண்டிய கடன் மீதி | 2,491,067,436,322 | 2,756,270,641,876 | 265,203,205,554 |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட கடன் தொகை | 94,895,887,005 | 105,625,648,033 | 10,729,761,028 |

(எ) 36 கடன் உடன்படிக்கைகளுக்குரியதாகக் கிடைத்த வெளிநாட்டுக் கடன் தொகைகளின் பெறுமதி ரூபா 65,976,391,933 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த 854-1 அறிக்கையில் அந்தக் கடன் உடன்படிக்கைக்குரியதாக ரூபா 133,885,346,910 கிடைத்திருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் இறுதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 67,908,954,977 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. (விபரம் இணைப்பு 05 இல் காண்பிக்கப்படுகின்றது)

(ஏ) 2011 யூன் 11 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் படி 2011 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சீனக் கம்பனியொன்றிலிருந்து கடன் அடிப்படையில் அமெரிக்க டொலர் 115.8

மில்லியன் தொகையான 725 நிர்மாண உபகரண அலகுகளைக் கொள்வனவு செய்திருந்ததுடன் அதற்கான கொடுப்பனவு 2013 ஆம் ஆண்டுவரை மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அமைச்சரவைக் குறிப்பு 3.2 பிரிவின் படி அரசாங்கத்திற்குப் பதிலாக பொதுத் திறைசேரி, சீனக் கம்பனியுடன் கடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட வேண்டிய போதிலும், அவ்வாறான கடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தின் கடனாகவும் இத்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 15,858,996,167 ஆக இருந்தது. அது திருத்தப்பட்ட வெளிநாட்டு கடன் வழங்கல் பெறுமதியான ரூபா 20,000,000,000 இனை விட ரூபா 4,141,003,833 இனால் குறைவானதாகும். எனினும், 73 செயற்திட்டங்களுக்கு கிடைத்த வெளிநாட்டு மானியம் ரூபா 6,020,393,784 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. (விபரம் இணைப்பு 06 இல் காண்பிக்கப்படுகின்றது)

### 23.2.12 முற்பணக் கணக்கு

2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட கணக்கு எல்லையினை கருத்தில் கொள்ளாது தலைப்பு 306 கணக்கு குறியீட்டு இலக்கம் 8493/306/0011 இற்குரிய முற்பண நடவடிக்கைகளின்போது ரூபா 570,000,000 தொகையான ஆகக்கூடிய செலவின (வரவு) எல்லையினை விஞ்சி ரூபா 1,274,671,550 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

## 23.3 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 23.3.1 அரசாங்க வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா 1,303 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா 1,212 பில்லியன் வரை ரூபா 91 பில்லியனால் குறைவடைந்திருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 7 சதவீதத்தைக் கொண்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் வெளிநாட்டு மானியத்துடன் ரூபா 1,082 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 130 பில்லியன் மிகை மதிப்பீடாக இருந்தது.

(ஆ) திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட 50 வருமானக் குறியீடுகளில் வருமான உழைப்பு அந்த திருத்தப்பட்ட மட்டத்தை விட ரூபா 184,257 மில்லியன் கூட்டுத்தொகையினால் குறைவடைந்திருந்தது. (விபரம் இணைப்பு 07 இல் காண்பிக்கப்படுகின்றது)

(இ) 2013 ஆம் ஆண்டிற்குரிய பின்வரும் 19 வருமானக் குறியீடுகளில் சேகரித்தல் முன்னைய ஆண்டைவிட குறைவடைந்திருந்தது.

| வருமானக் குறியீடு | வருமான விபரம் | மீளாய்வாண்டிற்குரிய பெறுவனவு (2013) | முன்னைய ஆண்டிற்குரிய பெறுவனவு (2012) | வருமானக் குறைவு | சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 10:02:01:04 | இறக்குமதி வரி | 96,590 | 99,469 | 2,879 | 3 |
| 10:02:05:03 | கனிய எண்ணெய் உற்பத்தி வரி | 27,131 | 28,466 | 1,335 | 5 |
| 10:02:05:99 | ஏனைய வரி | 2,516 | 3,336 | 820 | 24 |
| 10:03:02:00 | கையளிப்பு வரி | 1,146 | 1,253 | 107 | 8 |
| 10:03:04:00 | பங்குக் கொடுக்கல் வாங்கல் வரி | 289 | 592 | 303 | 51 |
| 10:03:07:03 | தனியார் மர போக்குவரத்து வரி | 56 | 59 | 3 | 5 |
| 10:01:03:00 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டண வரி | 458 | 513 | 55 | 11 |
| 10:01:04:00 | துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 61,506 | 70,111 | 8,605 | 12 |
| 10:04:03:99 | கட்டணம் மற்றும் ஏனைய வரி | 255 | 344 | 89 | 26 |
| 10:04:04:00 | பொருளாதார சேவைக் கட்டண வரி | 6,596 | 14,864 | 8,268 | 56 |
| 20:02:01:04 | பிரதேச தோட்டக் கம்பனிகளிலிருந்து கிடைக்கின்ற குத்தகை வாடகை | 695 | 771 | 76 | 10 |
| 20:02:03:00 | இலாபம் | 30,400 | 42,214 | 11,814 | 28 |
| 20:03:01:00 | திணைக்களம் சார்ந்த விசாரணை | 143 | 180 | 37 | 21 |
| 20:03:02:13 | பரீட்சை மற்றும் ஏனைய கட்டணங்கள் | 156 | 263 | 107 | 41 |
| 20:03:02:14 | மோட்டார் போக்குவரத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்ணம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 6,525 | 6,578 | 53 | 0.8 |
| 20:03:02:17 | புடவைகளுக்காக உள்நாட்டு விசாரணையின் அடிப்படையிலான கட்டணம் | 91 | 105 | 14 | 13 |
| 20:03:03:00 | தண்டப்பணம் மற்றும் அரசுடைமையாக்கல் | 2,274 | 5,137 | 2,863 | 56 |
| 20:05:01:00 | மத்திய வங்கி இலாபம் | 26,350 | 43,000 | 16,650 | 39 |
| 20:05:99:00 | தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய | 2,173 | 2,223 | 50 | 2 |

(ஈ) மீளாய்வாண்டின் 35 வருமானக் குறியீடுகளில் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 99,463 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. வருமான அதிகரிப்பு வீச்சினைக் கவனத்திற் கொள்ளும்போது சிறந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டில் 21 வருமானக் குறியீடுகளில் ஆரம்ப வருமான மதிப்பீட்டிற்கும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்குமிடையே உயர்வான முரண்கள் காணப்பட்டது.

(ஊ) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட நிலுவையாக இருந்த வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் இறுதியின் போது நிலுவை வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 7,785,285,540 தொகையான வருமானம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு இருந்தது.

| **வருமானக் குறியீடு** | **விபரம்** | **நிலுவை வருமானம்** |
|---|---|---|
| | | **ரூபா** |
| 2002.01.01 | அரசாங்கத்தின் கட்டிட வாடகை | 334,852,341 |
| 2002.02.01 | வட்டி- கடன் வழங்கல் | 3,157,778,924 |
| 2002.02.99 | வட்டி- ஏனையவை | 90,277 |
| 2003.02.99 | விற்பனைக் கட்டணம்- நானாவித | 5,098,993 |
| 2003.99.00 | விற்பனைக் கட்டணம்- ஏனைய பெறுவனவுகள் | 13,000 |
| 2006.04.00 | மூலதன வருமானம் கடன் மீள அறவிடப்படாமை | 4,287,452,005 |
| | மொத்தம் | 7,785,285,540 |

### 23.3.2 அரசாங்க செலவினம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயத்தின் 148 உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான சகல கட்டுப்பாடுகளும் பாராளுமன்றத்திற்குரியதாகும். 2013 ஆம் ஆண்டிற்காக அரசாங்க செலினங்களுக்கான நிதி ஏற்பாடு 2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 202 செலவினத் தலைப்புக்களுக்காக ரூபா 827 பில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும், ரூபா 560 பில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் ஆக ரூபா 1,387 பில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அமுலிலுள்ள சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்த திரண்ட நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாகவுள்ள மீண்டெழும் செலவினம் ரூபா 463 பில்லியன் தொகையும் மூலதனச் செலவினம் ரூபா 717 பில்லியன் தொகையுமாக ரூபா 1,180 பில்லியன் கூட்டுத்தொகையான செலவினமும் மீளாய்வாண்டில் செய்யப்பட வேண்டியதாகும். அதன் படி அரசாங்க செலவினத்திற்காக ரூபா 2,567 பில்லியன் நிதிஏற்பாடு 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில்

காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக விசேஷட சட்ட சேவைகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 36 பில்லியன் நிதி ஏற்பாட்டுடன் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிஏற்பாடு ரூபா 2,603 பில்லியனாகும். பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுத் தலைப்பு 240 தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 02 ஆம் இலக்க அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 37 பில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 37 பில்லியன் தொகையுமாக ரூபா 74 பில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்குரிய மீண்டெழும் செலவின விடயத்திற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,310,984,362,030 தொகையிலிருந்து ரூபா 1,253,508,957,764 கூட்டுத்தொகையானது பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்பு ரூபா 57,475,404,266 ஆக இருந்தது. இந்த சேமிப்பு ஒட்டுமொத்தமாக மீண்டெழும் நிதிஏற்பாட்டில் 4.4 சதவீதத்தைக் கொண்டிருந்தது. மூலதன செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,291,988,759,988 கூட்டுத்தொகையிலிருந்து ரூபா 1,158,097,060,349 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டமையால் சேமிப்பு ரூபா 133,891,699,639 ஆக இருந்தது. அந்த சேமிப்பு ஒட்டு மொத்தமாக மூலதன நிதி ஏற்பாட்டில் 10.4 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 60 செலவினத் தலைப்புக்களின் 23 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,451,483,366 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் 97 செலவினத் தலைப்புக்களின் 15 மூலதன செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 11,915,542,020 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் ஆண்டின் இறுதிவரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 126 செலவினத் தலைப்புக்களில் 28 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 134,657,421,551 கூட்டுத்தொகையிலிருந்து ரூபா 89,567,307,166 தொகை பயன்படுத்தப்பட்டமையினால் சேமிப்பு ரூபா 45,090,114,385 ஆக இருந்தது. அந்த சேமிப்பு ஒட்டுமொத்தமாக மீண்டெழும் செலவினத்திற்கான நிதி ஏற்பாட்டில் 33 சதவீதத்தைக் கொண்டிருந்தது. வெவ்வேறாகக் கருத்தில் கொள்ளும் போது நிதிஏற்பாட்டின் குறைப்பயன்பாடு 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

| **சேமிப்பின் வீச்சு** | **மொத்த நிதிஏற்பாடு மீண்டெழும்** | **மொத்த செலவினம் மீண்டெழும்** | **சேமிப்பு** |
|---|---|---|---|
| **%** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 76 முதல் 99 | 565,142,243 | 84,909,677 | 480,232,566 |
| 51 முதல் 75 | 1,892,732,126 | 824,937,103 | 1,067,795,023 |
| 26 முதல் 50 | 132,199,547,182 | 88,657,460,386 | 43,542,086,796 |
| | 134,657,421,551 | 89,567,307,166 | 45,090,114,385 |

(இ) 172 செலவினத் தலைப்புக்களில் 16 மூலதனச் செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 153,731,989,732 கூட்டுத்தொகையிலிருந்து ரூபா 78,751,069,172 தொகை பயன்படுத்தப்பட்டமையினால் சேமிப்பு ரூபா 74,980,920,559 ஆக இருந்தது. அந்த சேமிப்பு அந்த செலவினத் தலைப்புக்களுக்கான ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டில் 49 சதவீதத்தைக் கொண்டிருந்தது. தனித்தனியாக கருத்திற்கொள்ளும் போது நிதிஏற்பாட்டின் குறைபயன்பாடு 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

| மொத்த நிதிஏற்பாடு மூலதனம் | மொத்த செலவினம் மூலதனம் | சேமிப்பு | சேமிப்பின் வீச்சு |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | % |
| 17,387,273,776 | 1,426,346,194 | 15,960,927,582 | 76% முதல் 99% |
| 41,032,556,818 | 16,732,314,091 | 24,300,242,727 | 51% முதல் 75% |
| 95,312,159,137 | 60,592,408,887 | 34,719,750,250 | 26% முதல் 50% |
| 153,731,989,731 | 78,751,069,172 | 74,980,920,559 | |

(i) ஒதுக்கீட்டுத் தலைப்பு 240 தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டம் 02, செயற்திட்டம் 02 இன் கீழ் வழங்கப்பட்ட மேலதிக நிதிஏற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்கான 41 அனுமதிப்பத்திரங்களிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 7,065,300,607 தொகை மற்றும் மூலதனச் செலவினத்திற்கான 100 அனுமதிப்பத்திரங்களிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 19,045,007,779 தொகை என்பன 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மீளக் கையேற்கப்பட்டிருந்தது.

### 23.3.3 பாதீட்டு நிலுவை

மீளாய்வாண்டில் குடியரசின் திருத்தப்பட்ட பாதீட்டு நிலுவை ரூபா 664 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 14 பில்லியனால் அதாவது 02 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. 2013 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 643 பில்லியன் ஆனமையால் அது மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 21 பில்லியன் சாகமான நிலைமையாகும். மீளாய்வாண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.4 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### 23.3.4 குடியரசின் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் குடியரசின் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 6,344,943 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் குடியரசின் மொத்த பொறுப்புக்களான ரூபா 5,717,857 மில்லியனுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 627,086 மில்லியன் அதாவது 11 சதவீத அளவிலான அதிகரிப்பாகும். அந்த அதிகரிப்புக்கள் விபரமாக கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| வங்கி மேலதிகப்பற்று | 137,077 | 104,479 | 32,598 | 31.2 |
| மத்திய வங்கி முற்பணம் | 109,272 | 111,292 | (2,020) | 1.8 |
| உள்நாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 22,587 | 22,183 | 404 | 1.8 |
| நானாவித நிதியம் | 1,386 | 1,457 | (71) | 4.9 |
| அரசாங்கக் கடன் கணக்குகள் | 5,996,496 | 5,408,760 | 587,736 | 10.9 |
| வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 83,410 | 75,756 | 7,654 | 10.1 |
| அரசாங்கத்தின் திணைக்களங்களின் செயற்பாட்டுக் கணக்கு | (4,905) | (3,963) | (942) | 23.8 |
| நானாவித கணக்கு | (380) | (2,107) | 1,727 | 85.4 |
| | 6,344,943 | 5,717,857 | 627,086 | 10.9 |